பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்
New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-101

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்


மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)


| மலர் : 15 | இதழ் : 07 | | அக்டோபர் 2023 | விலை | | ஆண்டு சந்தா | |
|---|---|---|---|---|---|---|---|
| Vol : 15 | Issue : 07 | www.ncbhpublisher.in | October 2023 | Price | ₹ 45/- | Annual Subscription | ₹ 540/- |




# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





₹ 25/-




₹ 150/-




₹ 190/-




₹ 410/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in




கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2053*

*மலர் - 15 இதழ் - 07 - அக்டோபர் 2023*



ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்
முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந.முத்துமோகன்
முனைவர் மு.இராமசுவாமி
முனைவர் நா.இராமச்சந்திரன்
முனைவர் பா.ஆனந்தகுமார்
முனைவர் ஞா.ஸ்டீபன்
ப.குராஜன்
முனைவர் இரா.அறவேந்தன்
முனைவர் இரா.காமராசு
முனைவர் உ.அலிபாவா

இதழ் வடிவமைப்பு

*கா. குணசேகரன்*



நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com
இணைய தள முகவரி: www.ncbhpublisher.in

தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


**1** படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன்............................................06

**2** அறியப்படாத மொழிப் போராட்டம் (1934-1947)
டாக்டர். சு. நரேந்திரன்............................................11

**3** சுசீந்திரம் ஊர் திருவாவடுதுறை ஆதினச்செப்பேடு
அ.கா.பெருமாள்............................................17

**4** வரலாற்றறிஞர் எரிக்ஹாப்ஸ்பாமை நினைப்போம் (1917-2012)
ரொமிலா தாப்பர்
தமிழில்: கி.இரா.சங்கரன், இரா.ஆனந்தகுமார்................21

**5** ஒரு பண்பாட்டின் பயணம்: சிந்து முதல் வைகை வரை ஒரு நெடும்பயணம்
முனைவர் ஏ.இராஜலட்சுமி,............................................27

**6** பதின்பருவமும் நட்பின் தாக்கமும்
ப.வைத்திலிங்கம்............................................31

**7** தமிழில் தேசிய இலக்கியங்கள் ஒரு புதிய வரைசட்டகத்தை நோக்கி...
பா.ஆனந்தகுமார்....,............................................35

**8** தன்னளவிலும் உலகம் சார்ந்தும் தனக்கான இடத்தைப் பெறும் இரு படைப்புகள்
முனைவர் செ.ர.கார்த்திக் குமரன்............................................43

**9** கா.சிவத்தம்பியின் தமிழிலக்கிய வரலாற்றின் பிரச்சினை மையங்கள் சில அவதானிப்புகள்
அ.அன்பரசன்............................................49

**10** வள்ளலாரின் ஆறாம் திருமுறைகள்
டாக்டர் மு.நீலகண்டன்............................................55


**11** நெய்தல் நிலத்தின் கதை
சுப்பிரமணி இரமேஷ்............................................59

**12** மகாகவி பாரதி
பேராசிரியர் உ.அலிபாவா............................................63

**13** நவீனப் புதுக்கவிதைகளில் சங்க இலக்கிய அகமரபு ஒரு பார்வை
முனைவர் பெ. முருகன்............................................67

**14** ON THE STYLE OF THE COMMUNIST MANIFESTO
Umberto Eco ............................................72

அஞ்சலி



# எம்.எஸ்.சுவாமிநாதன்

(1925-2023)

20 ஆம் நூற்றாண்டு இந்திய வானில் தமிழ்த் திசையிலிருந்து ஒளிர்ந்த ஒரு தாரகை காலம் எனும் முடிவற்ற கருங்குழியில் சென்று அடங்கியது. அதன் ஒளியில் பச்சையம் கண்ட பயிர்களும் அவை உருவாக்கிய விதைகளும் இந்த மண்ணில் விழுந்து முளைப்பது பல யுகங்களுக்குத் தொடரும். பசித்த வயிறுகளுக்கு பால் வார்ப்பதும் தொடரும்.

எம்.எஸ்.சுவாமிநாதன் அவரது முன்னோடியும் நண்பருமான நார்மன் போர்லாக் பெற்றது போல உலக அமைதிக்கான நோபல் பரிசிற்கு தகுதி படைத்த ஆளுமை. அதுவல்லாது அவர் பெற்ற பாராட்டுகளுக்கும் விருதுகளுக்கும் குறைவில்லை. எண்பதிற்கும் மேலான சர்வதேசப் பலகலைக் கழகங்கள் டாக்டர் பட்டம் அளித்துள்ளன. அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன், ஃபிரான்ஸ், சுவீடன் உள்ளிட்ட முப்பதிற்கும் மேற்பட்ட நாடுகளின் அறிவியல் அக்கடெமிகள் அவரை மதிப்புரு உறுப்பினராக ஆக்கி பெருமைப் படுத்தியுள்ளன. ஆனால் அவர் அவற்றை பெரிதுபடுத்தாத பெரிதிலும் பெரிது நோக்கும் பேராளுமையாகவே வாழ்ந்து மறைந்தார்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்த வியட்னாம் மக்களின் வீரஞ்செறிந்த போராட்டத்தில் அவர்களை ஆதரித்து நின்ற காரணத்தால் பி.எல் 480 திட்டத்தில் அனுப்பப்பட்டு வந்த (காசிற்குதான்; இலவசமாக அல்ல!) உணவு தானியக் கப்பல்களை லிண்டான் ஜான்சன் அரசு நிறுத்தியதுதான் ‘பசுமைப் புரட்சி’ தொடங்கப்பட்டதன் உடனடி காரணம் என்பது இன்று பலருக்கு நினைவில் இல்லை. உண்ணும் உணவிற்காகப் பி.எல்.480யையும் அமெரிக்காவையும் அல்லது வேறெந்த வெளிநாட்டையும் கெஞ்சி நிற்கத் தேவையற்ற வலுவையும் வளத்தையும் இந்திய ஒன்றியத்திற்கு ஏற்படுத்தியதில் அவரது வகிபாகம் தலையாயது.

கீழத்தஞ்சையில் ராஜராஜ சோழன் காலத்தில் கிடைத்த நெல் மகசூலை இன்றைய அளவுகளில் மாற்றிச் சொன்னால் ஒரு ஏக்கருக்கு சுமார் 10 மூட்டைதான். ராஜாஜி காலம் வரை ஒரு ஏக்கருக்கு 10 மூட்டைதான். ஆனால் இன்று ஏக்கருக்கு 30 மூட்டை மகசூல்கூட நடக்கின்றது. அவர் தாதியாய் இருந்து பிறப்பித்த பசுமைப் புரட்சி இல்லையென்றால் இது சாத்தியமாகியிருக்காது; அல்லது இந்திய வனவளத்தில் இன்னும் நாற்பது சதவீதம் பசித்த மானுடத்திற்கு சோறிடும் வயலாக மாறியிருக்கும். இந்தியாவின் இயற்கைச் சூழலை இன்றிருக்கும் இந்நிலையிலாவது காப்பாற்றியதில் அவரது வகிபாகம் அதிகம் புரிந்துகொள்ளப் படாதது; எனவே அதிகம் பேசப்படாதது. ஏசு கிருஸ்துவை சிலுவையில் ஏற்றவும், மகாத்மா காந்தியை சதி செய்து கொல்லவும், லெனினை துப்பாக்கியால் துளைக்கவும் ஆட்களிருக்கும் உலகில் எம்.எஸ்.சுவாமிநாதன் மீது சேற்றை வாரி இறைக்க ஆளற்ற பஞ்சம் இருந்தால்தான் வியப்படைய வேண்டும்.


ஓராண்டுகாலம் டெல்லியை தம் இரும்புப் பிடியில் வைத்திருந்த விவசாயப் போராட்டக்காரர்களுக்கும் நாடெங்கும் உள்ள விவசாயிகளுக்கும் இன்று முதன்மையான கோரிக்கை; ‘எம்.எஸ் சுவாமிநாதன் கமிட்டி’ பரிந்துரை அடிப்படையில் விவசாய விளைபொருளுக்கு கட்டுப்படியாகும் விலை கொடு என்பதுதான். உண்மையிலேயே உழுது பயிரிடும் இந்திய விவசாயிகளின் உணவுப் பொதிகளில் மட்டுமல்ல; அவர்களது உணர்வுப் பொதிகளிலும் அவரது பெயர் எழுதப்பட்டுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்பு அவர் அளித்த ஒரு நீண்ட நேர்காணலில் அவரது வாய்மொழிக் கூற்றுகள் சிலவற்றைப் பாருங்கள் :

* ....... நான் திருவனந்தபுரம் மஹாராஜா கல்லூரில் B.Sc - விலங்கியல் படித்து முடித்தேன். எனது தந்தையின் வழியில் மருத்துவராக அடுத்து மருத்துவக் கல்லூரியில் சேர வேண்டும். ஆனால் 1942 ஆம் ஆண்டில் மஹாத்மா காந்தி ஆரம்பித்த ‘வெள்ளையேன வெளியேறு’ இயக்கமும் 1942-43 இல் ஏற்பட்ட வங்காளத்தின் பெரும் பஞ்சமும் எனது பார்வையில் மாற்றங்களை ஏற்படுத்தியது. வங்காளத்தின் பெரும் பஞ்சத்தில் பல லட்சம் மக்கள் உணவின்றி இறந்தனர். விரைவில் இந்தியா சுதந்திரம் பெற்றுவிடும் என்பது தெரிந்தது. சுதந்திர இந்தியாவில் நான் நாட்டிற்கு பயனுள்ள முறையில் என்ன செய்ய முடியும் என யோசித்தேன். நான் மட்டுமல்ல; என் வயதினர் பலரும் அப்போது இயல்பாகவே அந்த கால கட்டத்தின் லட்சியவாதத்தால் பீடிக்கப்பட்டவர்களாகவே இருந்தோம். நான் நாட்டின் உணவுப் பிரச்சினைக்கு ஏதேனும் இயன்றதைச் செய்ய வேண்டும் என நினைத்தேன். எனவே மருத்துவக் கல்லூரிக்கு கிடைத்திருந்த நுழைவு அனுமதியைப் புறமொதுக்கி வேளாண்மைக் கல்லூரியில் சேர முடிவு செய்தேன். அதன்படி கோவை வேளாண்மைக் கல்லூரியில் B.Sc - வேளாண்மை அறிவியல் படித்தேன். பின்னர் தில்லியில் இந்திய வேளாண்மை ஆய்வுக் கழகத்தில் *(Indian Agricultural Research Institute)* ஓராண்டு மாணவனாக இருந்தேன். அப்போது தேர்வு எழுதி இந்தியக் காவல் துறைப் பணிக்கும் *(IPS)* தேர்வுசெய்யப்பட்டேன். அதில் சேர்வதா இல்லையா என இருமன நிலையில் இருந்தேதான். நல்லவேலையாக ஹாலந்தில் படிக்க நிதிநல்கை கிடைத்தது. அப்படி மேற்படிப்பிற்காக முதலில் ஹாலந்திற்கும் பின்னர் பிரிட்டனின் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திற்கும் சென்றேன். 1950 ஆம் ஆண்டில் பிஹெச்டி முடித்தபின் அமெரிக்காவில் விஸ்கான்சின் பல்கலைக் கழகத்தில் ஓராண்டு பணியாற்றினேன். பின்னர் அங்கு நிரந்தரமான பேராசிரியர் பணி கிடைத்த சமயத்தில் இந்தியாவிற்கு வந்து பணியாற்ற வேண்டும் எனும் ஆவலில் அதனை மறுதலித்து இந்தியாவிற்கு வந்தேன். அன்றைக்கே எனது நோக்கம் உணவு தானியங்களில் புதிய வகைகளை உருவாக்குவது என்பதாக இருந்தது. விவசாயிகள் ஒவ்வொரு விதைப்பின்போதும் விதைகளை வாங்க வேண்டும் என்ற நிலையில்லாது அவர்களது விதைகளை அவர்களது மகசூலிலேயே பெற வேண்டும் என்றும் விரும்பினேன். இந்தியா திரும்பிய நான் 1954 ஆம் ஆண்டு முதலில் கட்டாக்கில் *CRRI* எனப்படும் மத்திய அரிசி ஆய்வுக் கழகத்தில் *(Central Rice Research Institute)* ஒரு தற்காலிகப் பணியில் இருந்தேன். பின்னர் *IARI* இல் உதவி செல் மரபணு நிபுணர் *(Assistant Cytogeneticist)* எனும் பொறுப்பில் அமர்ந்தேன். பின் 18 ஆண்டுகள் *IARI* இல்தான் பணியாற்றினேன். கட்டாக்கில் நான் சென்று சேரும்போதே இண்டிகா-ஜாப்பானிகா ஒட்டுப்பயிர் உருவாக்க *(Indica - Japanica Hybridisation)* வகை அரிசி ஆராய்ச்சி துவங்கியிருந்தது. அந்தத் திட்டத்தில்தான் நான் முதலில் பணியாற்றினேன். அந்தத் திட்டத்தின் மூலம்தான் *ADT* 27 எனப்படும் ஆடுதுறை 27 வகை வெளிவந்தது. அதன்பின் நான் டெல்லியில் இந்திய வேளாண் அறிவியல் ஆராய்ச்சிக் கழகத்தில் சேர்ந்தேன். அங்கு புதிய கோதுமை வகை உருவாக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டேன். கோதுமையிலும் எனது நோக்கம் அரிசியில் இருந்தது போலத்தான் இருந்தது....

நியூ செஞ்சுரியின் 'உங்கள் நூலகம்' ஆசிரியர் குழு அந்த மகத்தான மனிதருக்கு தன் சிரம் தாழ்ந்த வணக்கங்களையும் அஞ்சலிகளையும் உரித்தாக்குகின்றது.

**- ஆசிரியர் குழு**



## படித்துப் பாருங்களேன்...

ஆ.சிவசுப்பிரமணியன்

# கிறித்தவ மதமாற்றத்தின் வரலாறு

**எஸ்.ஜெயசீல ஸ்டீபன் (2023):**
கிறித்தவர்களாக மதம் மாறிய தமிழர்களும் ஐரோப்பிய மறைப்பணியாளர்களும் (ஆன்மீக மற்றும் உலகியல் வாழ்க்கை அனுபவங்கள் உள்ளும் புறமும் 1510-1858).


**S.Jeyaseela Stephen (2023):**
Tamil christian Converts & European Missionaries.
(The spiritual and Worldly Life Experience Inside and Outside, 1510–1858)
Institute for Indo- Europeean Studies.
Puducherry 605 011.

(செப்டம்பர் இதழின் தொடர்ச்சி)


*தாமஸ் கிறித்தவர்களை அடுத்து முத்துக்குளித்துறையில் வாழ்ந்து வந்த பரதவர்களின் மதமாற்றம் அமைந்தது. அரேபிய மூர்களின் தாக்குதலில் இருந்து தம்மைப் பாதுகாக்கும் வழிமுறையாக இராமேஸ்வரம் தொடங்கி தெற்கே கன்னியாகுமரி வரை உள்ள கடற்கரை ஊர்களில் வாழ்ந்த பரதவர் சமூகத்தினர் போர்ச்சுக்கீசியர் ஆதரவுடன் பதினாறாவது நூற்றாண்டில் கத்தோலிக்கர்களாக மதம் மாறினர். தொடக்கத்தில் போப் வழங்கிய ஞானாதிக்க சலுகையின் அடிப்படையில் போர்ச்சுக்கல் மன்னர் நியமித்த கத்தோலிக்கக் குருக்கள் இப் புதிய கிறித்தவர்களிடம் பணியாற்றினர். இவர்களையடுத்து பிரான்சிஸ்கன் சபையினரும் சேசு சபையினரும் இம்மக்களிடம் பணியாற்றத் தொடங்கினர்.*

**சேசு சபையினரும் உபதேசியாரும்:**

தொடக்கத்தில் ஐரோப்பியக் குருக்களே இப் புதிய கத்தோலிக்கர்களின் ஆன்மீக மேய்ப்பர்களாக விளங்கினர். இப் பணியில் தமிழ்மொழியில் போதிய பயிற்சியின்மை அவர்களுக்கு இடையூறாக அமைந்தது. இதை எதிர்கொள்ளும் வழிமுறையாக லோங்கோக்கள் (longoas) என்றழைக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களைப் பயன்படுத்தினர். தேவாலய வழிபாடு, மறையுரையாற்றல், பொறுத்தல் கேட்டல் (பாவமன்னிப்பு) அடிப்படை மன்றாட்டுகளைக் கற்றுக் கொடுத்தல், விவிலிய வாசிப்பு, என பல தரத்ததாக குருக்களின் பணி அமைந்திருந்தமையால் மொழிபெயர்ப்பாளர்களின் பணி அவர்களுக்கு மிகவும் தேவையான ஒன்றாக இருந்தது. மதமாற்ற நிகழ்வு நடந்து முடிந்து சில ஆண்டுகள் கடந்த பின்னர், பிரான்சிஸ் சேவியர் (பின்னாளில் புனிதர் பட்டம் பெற்ற புனித சவேரியார்) இங்கு பணியாற்றியபோது இப்புதிய கத்தோலிக்கர்களுக்கும் ஐரோப்பியக் குருக்களுக்கும் இடையே இணைப்பாகச் செயல்பட 'கணக்கப்பிள்ளை' என்ற பதவியை உருவாக்கினார். இது வெற்றிகரமான ஒன்றாக அமைந்தது. இச் செய்திகள் எல்லாம் ஓரளவுக்குப் பரவலாக அறியப்பட்ட செய்திகள்தாம். இங்கு அறிமுகம் ஆகும் இந்நூலில் ஐரோப்பிய நாட்டு ஆவணக்காப்பகங்களில் இடம் பெற்றுள்ள ஆவணங்களின் துணையுடன் சில புதிய செய்திகள் பதிவாகியுள்ளன. இவற்றுள் இரண்டாம் பகுதியில் இடம் பெற்றுள்ள நான்கு இயல்கள்( 7,8,9,10 இயல்கள்)குருக்களாகவும், உபதேசியர்களாகவும் (Catechists) தமிழர்கள் நியமிக்கப்பட்ட வரலாற்றை அறிமுகம் செயகின்றன.



எஸ்.ஜெயசீல ஸ்டீபன்




இவை ஒரு குறிப்பிட்ட சமயத்தின் செயல்பாடு சார்ந்ததாக இருப்பினும் இங்கு புதிதாக அறிமுகமான ஒரு சமயத்திற்குள்ளும் சாதியம் நுழைந்துவிட்டதை நாம் அறியச் செய்கின்றன. இம்முன்னுரையுடன் இரண்டாம் பகுதிக்குள் நுழைவோம். இப்பகுதியில் இடம் பெற்றுள்ள ஏழாவது இயல் பொ.ஆ.1547-1791 காலத்தில் தமிழ்நாட்டில் திருநிலைப்படுத்தப்பட்ட (Ordination) இம் மண் சார்ந்தவர்களை அறிமுகம் செய்கிறது. இவ்வரிசையில் முதலாவது அறிமுக செய்யப்படுபவர் பெரோ லூயிஸ்.

**பெரோ லூயிஸ்:**

இவர் 1532 இல் கொல்லம் அருகில் உள்ள கிராமத்தில் பிறந்தவர். சேசு சபையினருடன் ஏற்பட்ட தொடர்பால் தமது சிறுவயதிலேயே 1546

இல் கத்தோலிக்கரானார். மலையாளம், தமிழ் என்ற இருமொழிகளை அறிந்திருந்தமையால் துபாஷி(மொழிபெயர்ப்பாளர்) ஆக 1547 இல் பணியாற்றினார். பின்னாளில் வேதசாட்சியாக (உயிர்த்தியாகி) கத்தோலிக்கத் திருச்சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அந்தோணி கிரிமினாலி என்ற சேசு சபைத் துறவி இவரை கோவாவில் இருந்த புனித சின்னப்பர் குருத்துவக்கல்லூரிக்கு அனுப்பியதுடன் சேசு சபையில் சேரும்படி ஊக்கப்படுத்தினார். அவரை ரோம் நகருக்கு அனுப்பவும் திட்டமிடப்பட்டது. ஆனால் அது வெற்றி பெறவில்லை. நான்கு ஆண்டுகள் (கோவாவில் தங்கி இலத்தின் மொழி இலக்கணம் தர்க்கவியல்ஆகியனவற்றைக் கற்றறிந்தார் பின்னர் அந்தோனி கோமாஸ் என்ற சேசுசபைத்துறவியின் மொழி பெயர்ப்பாளராகவும் பணியாற்றினார்.

புன்னைக்காயலில் சேசு சபையினரின் இல்லத்தில் தங்கி அங்குள்ள குருக்களுக்கு தமிழ் கற்றுக்கொடுத்துள்ளார். இது குறித்து சேசு சபையின் நிறுவனரான இக்னேசியஸ் லயோலாவுக்கு எழுதப்பட்ட கடிதத்தில் இச்செய்தி இடம் பெற்றுள்ளது. 1561இல் தமது முப்பதாவது வயதில் சேசு சபையில் இவர் இணைந்தார். புன்னைக்காயலில் சேசு சபைக் குருக்களுக்கு இவர் தமிழ் கற்றுக் கொடுக்கும் போது தவக்காலத்தில் (lent period) மக்களிடம் பொறுத்தல் கேட்டல், முக்கிய சேசுசபைக் குருக்களுக்கு மொழிபெயர்ப்பளராகப் பணியாற்றல் என்ற பணிகளை மேற்கொண்டார்.பேச்சுத் தமிழில் ஐரோப்பியர் செய்யும் தவறுகளை எளிதில் கண்டறிந்தார். தம் பேச்சுத் தமிழைத் திருத்தும் வகையில் தங்களுக்குள் தமிழிலேயே உரையாடிக் கொண்டனர். இவ் விதியைக் கடைப்பிடிக்காதவர்களுக்குத் தண்டனை வழங்கினர்.

1564 இல் கோவாவில் இருந்த புனித சின்னப்பர் கல்லூரிக்கு மீண்டும் சென்று தன் இறையியற் கல்வியைத் தொடர்ந்தார்.அத்துடன் தமிழ் மொழியில் முதல் அச்சுநூல்களை அறிமுகம் செய்த அண்டிரிக் அடிகளாரின் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். 31 திசம்பர்1567 இல் மறைமாநிலத் தலைவருக்கு (Provincial)எழுதிய கடிதத்தில் பெரோ லூயிஸ் இலத்தின் மொழியில் தேர்ச்சி பெற்றுவிட்டமையால் அவரை சேசுசபையில் குருவாக உயர்த்தலாம் என்று பரிந்துரைத்துள்ளார். இறுதியில் 1576 இல் இவர் சேசு சபையின் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார் (Ordination). ஸ்பானிய மொழியில் கிறித்தவ அடியார்கள் குறித்து எழுதப்பட்ட பிளாஸ் சாங்டரோம் (Flos Sanctorum) என்னும் நூலை அண்டிரிக் அடிகளார் தமிழில் மொழிபெயர்த்து அடியார் வரலாறு என்ற தலைப்பில் நூலாக்கினார். இது புன்னைக்காயலில் அச்சானது என்பது பொதுவான நம்பிக்கை. புத்தகத்தின் முதல் பக்கம் இன்று கிடைத்துள்ள நூலின் பிரதியில் இல்லாமையால் இந்நூல் அச்சான இடம் குறித்த உறுதிபடக் கூறமுடியாத நிலை. மற்றொருபக்கம் புன்னைக்காயல் மக்கள் இந்நூல் தங்களுடைய ஊரில்தான் அச்சானது என்று உறுதிபட நம்புகிறார்கள். இதற்குச் சான்றாக அங்கு இடிபாடுகளுடன் காட்சியளித்த ஒரு தொன்மையான கட்டிடமே அச்சகம் இருந்த இடம் என்பது மரபுவழிச் செய்தியாக வழக்கில் உள்ளது.பதினேழாவது நூற்றாண்டில் அண்டோ புரயன்சா (Antao proenca) என்ற சேசு சபைத் துறவி தாம் தொகுத்த தமிழ் போர்ச்சுக்கீஸ் அகராதி என்ற நூலுக்கு எழுதிய முன்னுரையில் அடியார் வரலாறு நூல் புன்னைக்காயலில் அச்சிடப்பட்டது என்று பதிவிட்டுள்ளார்.

இத்தகைய கருத்துமாறுபாடுகளுக்கு இடையே ஜோவோ ரோட்ரிக்கோஸ் என்ற சேசு சபைத் துறவி 1582 இல் ரோமில் உள்ள சேசுசபைத் தலைமைக்கு எழுதிய கடிதத்தில் அடியார் வரலாறு நூலின் அச்சாக்கத்தை மேற்பார்வையிட பெரோ லூயிஸ், கோவாவுக்கு அனுப்பப்பட்டதாக எழுதியுள்ளார். இந்தியாவில் பணிபுரிந்த சேசு சபையினர் ஆண்டறிக்கை போன்று அனுப்பிய கடிதங்கள் டாக்குமெண்டா இண்டிகா என்ற பெயரில் தொகுப்பு நூல்களாக வெளிவந்து கொண்டுள்ளன. இந்நூல் வரிசையில் பத்தாவது தொகுப்பில் ஜோவோ ரோட்ரிக்கோஸ் எழுதிய கடிதம் வெளிவந்துள்ளது என்பதை நூலாசிரியர் சான்றாகக் காட்டியுள்ளார். அடியார் வரலாறு 1586 இல் வெளியானது என்ற கருத்துள்ள நிலையில் இதற்கான ஆயத்த வேலைகளுக்காக பெரோ லூயிஸ் சென்றிருக்கும் வாய்ப்புள்ளது.

சேசுசபைக் குருவாகப் பணியாற்றி தமிழ் நூல் அச்சாக்கத்தில் பங்காற்றிய பெரோ லூயிஸ் 1596 இல் காலமானார்.

**கப்புச்சின் சபை:**

சேசுசபையினரை அடுத்து கத்தோலிக்கத்தின் மற்றொரு துறவற சபையான கப்புச்சின் சபையினர் 18 ஆவது நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டின் கடற்கரைப்பகுதிகளில் தம் சமயப் பணியைத் தொடங்கினர். இக்காலத்தில் போர்ச்சுக்கீசியக் குருக்களின் பணியில் நிறைவடையாத மன நிலை உலகக் கத்தோலிக்கத்தின் தலைமைப் பீடமான வத்திகனில் இருந்த சமயத்தலைமை யிடம் உருவாகியிருந்தது. உள்ளூர் மக்களிடமிருந்து சமயக் குருக்களை உருவாக்க விரும்புயது. இதனை நிறைவேற்றும் வகையில் சிலரைத் தேர்வு செய்த கப்புச்சின் சபையினர் அவரகளை இறையியல்




பாதிரியார் உடையில் ஆரோன் (நன்றி: நூலாசிரியர்)

பயிற்சிக்காக உரோமுக்கு அனுப்பினர். இவர்கள் பிராமணர், வெள்ளாள சாதியினராக இருந்தனர். இவர்களைக் குறித்த ஐரோப்பியக் குருக்களின் பதிவுகளை நூலாசிரியர் ஆவணங்களின் துணையுடன் எடுத்துக்காட்டியுள்ளார். இப்பதிவுகளைப் பார்க்கும் போது மேட்டிமை சாதியினர் மீதான ஒருவகை ஈர்ப்பு ஐரோப்பிய நாட்டுக் கத்தோலிக்கத் துறவிகளிடமும் குருக்களிடமும் நிலவியது தெரியவருகிறது. இதே சிந்தனைப் போக்கு பிராட்டஸடண்ட் கிறித்தவத்திலும் இடம் பெற்றிருந்ததையும் ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார். சீர்திருத்தக் கிறித்தவ சபையின் முதல் குருவான ஆரோன் வெள்ளாளர் தான்.

**உபதேசியார்கள்:**

குருக்களுக்கு உதவிபுரியுவும், குருக்களின் பணி கிடைக்காத இடங்களில் சமயக் கடமைகளை நிறவேற்றவும் உபதேசியார் என்ற பதவி வகித்தோர் உதவி வந்தனர். வீரமாமுனிவர் இவர்களை வேதியர் என்றழைத்துள்ளார். இவர்களுக்கு வழிகாட்டும் வகையில் வேதியர் ஒழுக்கம் என்ற நூலையும் எழுதியுள்ளார். உபதேசியார் தேர்விலும் மேட்டிமை சாதி ஆதிக்கம் இருந்த போதிலும் ஓரளவுக்கு ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினரும் அனுமதிக்கப் பட்டுள்ளதும் தெரியவருகிறது. இது குறித்து நூலாசிரியர், பறையர், தொட்டியநாயக்கர், செட்டிநாயக்கர், கம்பளத்தார், கம்மாளர் கள்ளர், மறவர், நாடார் எனப் பல்வேறு சாதியினரையும் கத்தோலிக்கர்களாக மதம் மாற்றியதால் இவர்களிடம் உறவாட உதவும் வகையில் இச்சாதிகளில் இருந்தே உபதேசியார்களைத் தேர்வு செய்து கொண்டனர் என்கிறார்.

**நூல் வெளிப்படுத்தும் உண்மை:**

நூலின் தலைப்பிற்கேற்ப மதமாற்றம் குறித்த ஐரோப்பிய மற்றும் உள்நாட்டு ஆவணங்களின் துணையுடன் எழுதப்பட்ட இந்நூல் அதன் எல்லையைக் கடந்து தமிழ்நாட்டின் கடந்தகால வரலாற்றில் சாதிகளின் ஆய்வுகான தரவுகளையும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது.

அடிப்படையில் இந்நூல் சமயவரலாற்று நூலாகும்.ஓர் அயற் சமயம் இங்கு பரவியபோது அது தன் பரவலுக்குத் துணை புரியும் வகையில் பாதிரியார்,உபதேசியார், என்ற இரு சமயப் பணியாளர்களை உள்ளூர் மக்களிடம் இருந்து தேர்வு செய்து கொண்டதை வெளிப்படுத்தும் நூல் என்று மிக எளிதாகக் குறிப்பிட்டால் அது சரியான மதிப்பீடாக அமையாது. ஏனெனில் சமயவரலாறு என்ற எல்லையைக் கடந்து, சாதி என்ற சமூகவியல் சிக்கல் இப்பதவிகளுக்கான தேர்வில் ஊடுறுவி நின்றதை வெளிப்படுத்தி நிற்கிறது. இவ்வகையில் இந் நூலின் இரண்டாம் பகுதி கூறும் செய்திகள் ஒரு சமூகவியல் நூலாகவும் இதைக் கொள்ள இடம் தருகின்றன. மேலும் நூலின் முடிவுரையிலும் நூலாசிரியர் இதைச் சுட்டிக்காட்டியுள்ளார். நூலாசிரியர் கல்விப்புலம் சார்ந்த ஓர் ஆய்வாளர். அவர் ஓர் இயக்கவாதியல்ல.அதே நேரத்தில் இச்சிக்கலை அவர் தெளிவாகவே வெளிப்படுத்தியுள்ளார். இன்றும் கூட ஆங்காங்கே சாதியை மையமாகக் கொண்டு கிறித்தவத் தேவாலயங்களில் எழும் முரண்பாடுகளும் பூசல்களும் இப்பழைய வரலாற்றின் தொடர்ச்சியே என்பதை இந்நூலை வாசிப்போரால் புரிந்து கொள்ள முடியும்.

●

கட்டுரையாளர், நாட்டார் வழக்காற்றியலாளர்

## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மகத்தான படைப்பு விரைவில்...

# சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம்

### ஒரு நூற்றாண்டு வாசிப்புப் பின்புலத்தில்

பாடல் - பாடவேறுபாடு - உரைவேறுபாட்டு விளக்கங்கள் - பாடற்கருத்து - அருஞ்சொற்பொருள் - விரிவான ஆய்வு முன்னுரை எனும் அமைப்பில்

எண்மரின் பத்தாண்டுகாலக் கடும் உழைப்பில்

20 தொகுதிகள், 8000 பக்கங்கள்


உயர்ந்த கட்டமைப்பில்

தமிழக வரலாற்றில் முதல்முறையாக

நற்றிணை - க.பாலாஜி,
குறுந்தொகை - இரா.அறவேந்தன்,
ஐங்குறுநூறு - ம.லோகேஸ்வரன்,
பதிற்றுப்பத்து - இரா.மகிழேந்தி,
பரிபாடல் - ம.லோகேஸ்வரன்,
கலித்தொகை - மு.முனீஸ்மூர்த்தி,
அகநானூறு - மா.பரமசிவன்,
புறநானூறு - அ.செல்வராசு,
திருமுருகாற்றுப்படை - நித்தியா அறவேந்தன் & இரா.அறவேந்தன்,
பொருநராற்றுப்படை - அ.செல்வராசு,
சிறுபாணாற்றுப்படை - அ.செல்வராசு,
பெரும்பாணாற்றுப்படை - இரா.அறவேந்தன்,
முல்லைப்பாட்டு - நித்தியா அறவேந்தன்,
மதுரைக்காஞ்சி - அ.செல்வராசு,
நெடுநல்வாடை - இரா.மகிழேந்தி,
குறிஞ்சிப்பாட்டு - நித்தியா அறவேந்தன்,
பட்டினப்பாலை - இரா.மகிழேந்தி,
மலைபடுகடாம் - மு.முனீஸ்மூர்த்தி,

கட்டுரை

டாக்டர் சு.நரேந்திரன்




# அறியப்படாத மொழிப் போராட்டம் (1934–1947)

சென்னை மாகாணப் பள்ளிகளில் வட்டார மொழிகளில் கல்வி கற்பிக்க உதவ கலைச்சொல் குழுவை அரசு 1923இல் உருவாக்கி 1932இல் Chemistry போன்ற 12 துறைகளுக்கு உரிய கலைச் சொற்களை வெளியிட்டது. இக்கலைச் சொல் பட்டியலில் பெரும்பாலும் சமஸ்கிருதப் பெயர்களும், ஆங்கிலப் பெயர்களும் இடம் பெற்றிருந்தன. ஆதலால் இப்பட்டியலுக்கு ஆசிரியர்கள் ஆதரவு தரவில்லை. இப்பட்டியலுக்கு மாற்றாக பா.வே.மாணிக்க நாயக்கர், காழி. சிவ.கண்ணுசாமி இருவரும் செந்தமிழ்ச்செல்வி வாயிலாக தமிழ் அறிவியல் சொற்களை வெளியிடத் தொடங்கினர். 1933இல் தமிழ்ப் பயிற்று மொழி குறித்த தமிழன்பர் மாநாடு சென்னையில் கூடியது. இம் மாநாட்டில் தலைமையுரையாற்றிய உ.வே.சாமிநாதையர்,

“இப்பொழுது சாதாரணத் தமிழில் வழங்குகின்ற சொற்களை மாற்றி பல புதிய புதிய சொற்களை உபயோகிக்கத் தொடங்கினால் அச்சொற்கள் தமிழ்நாடு முழுவதும் வழக்கத்தில் அமைவதற்கு நெடுங்காலம் ஆகும்.

சொற்களின் வழக்கமும், அவற்றின் பொருள் எளிதில் விளங்குதலும் முக்கியமேயன்றி எல்லாம் தனித்தமிழ் வார்த்தைகளாக இருக்க வேண்டுமென்று அனுபவத்தில் இயற்றுவதன்று என்று கூறினார். இம்மாநாட்டிற்கு மறைமலைஅடிகள், சோமசுந்தர-பாரதி, பண்டிதமணி கதிரேசன் செட்டியார், வ.உ.சிதம்பரம்பிள்ளை, கே.சுப்பிரமணிய பிள்ளை, டி.வி.உமாமகேஸ்வரன் பிள்ளை, சச்சிதானந்தம்பிள்ளை, ந.மு.வேங்கடசாமி நாட்டார் ஆகியோர் அழைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாநாட்டில் தமிழில் தக்க பதங்கள் இல்லாத இடத்து வழக்கத்திலுள்ள பதங்கள் உபயோகித்தல் நல்லதென்றும் தமிழ் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இத்தீர்மானங்களில் உடன்பாடு இல்லாதத் தமிழறிஞர்கள் திருநெல்வேலி இ.மு.சுப்ரமணியபிள்ளை தலைமையில் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்து அரசு வெளியிட்டிருந்த கலைச் சொற்கள் பெரும்பாலும் தமிழ்ச் சொற்களாக இல்லாதபடியால்

(எ-கா: EXCRETORY ORGANS - விமர்சன இந்திரியங்கள்

LUNGS - புப்புசம்)

தமிழ்ச்சொற்களை ஆக்கி வெளியிட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றினர். இதுமொழித் தூய்மை வாதத்திற்கான

(எ-கா: LUNGS - நுரையீரல்

EXCRETORY ORGANS - கழிவுறுப்புக்கள்)

அடிக்கல்லாக அமைந்தது. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கச் செயலாளர் இ.மு.சுப்பிரமணியபிள்ளை தந்தை பெரியாருடன் இணைந்து குடியரசு இதழில் தொடர்ந்து இராமாயணம், மகாபாரதம் குறித்த ஆராய்ச்சிக் கட்டுரைகளை தொடர்ந்து எழுதியவர் என்பது இவரது பின்புலம். இவர் பணி ஆற்றிய சங்கம் துறைவாரியாகக் கலைச்சொற்களை உருவாக்கி 1936இல் 5300 சொற்களுடனும் பிறகு திருத்திய பதிப்பாக 10,000 சொற்களுடனும் பட்டியலை 1938இல் வெளியிட்டது. இச்சொல்லாக்க முயற்சி தமிழில் நடந்த முதல் கலைச் சொல்லாக்க இயக்கம் எனலாம். இச்சங்கத்தால் 1938இல் வெளியிடப்பட்ட பட்டியலை அரசு வாங்கி அன்றைய சென்னை மாகாணத்தின் தமிழ்ப் பகுதிகளில் வழங்கியது. இச்சொல் சமஸ்கிருத சொற்களுக்கு எதிரான சென்னை தமிழ்ச் சங்கத்தின் முதலாவது வெற்றி. கலைச்சொல் நூலுக்கு முன்னுரை எழுதிய இராஜாஜி "தமிழில் கலந்து கொள்ளும் தன்மை கொண்ட சமஸ்கிருத மொழிகளைக் காரணமின்றி வெறுக்கக்கூடாது, தனித்தமிழ் வெறியும், வடமொழி மோகமும் இரண்டும் இந்தத் தமிழ்ப் பணிக்குத் தடையாகும்" என்றார்.

இக்காலகட்டத்தில் 'தமிழ் ஆராய்ச்சி வரலாறு' குறித்து விரிவான நூல் எழுதிய ஏ.வி.சுப்பிரமணிய அய்யர் தமிழ்க் கலைச்சொல்லாக்கம் பற்றி கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

> "சுமார் நான்கு தலைமுறைகளாக மேனாட்டுக்கல்வி ஆங்கிலத்தின் மூலம் பரவிய பிறகும், அரசியல் துறையிலும் சற்று முன்னேற்றம் அடைந்த பிறகும், தமிழில் முடியும் என்று பறைசாற்றி அதற்கு உதாரணங்கள் மாத்திரம் கொடுத்துக் கொண்டிருந்தால் இந்த நாட்டு மக்களிடையும் மாணாக்கரிடையும் விஞ் ஞான சாஸ்திர அறிவும், அதனால் அமைந்த மனப்பான்மையும் விரிந்து பரவ எவ்வளவு காலமாகும்?"

எனவும் நம்பிக்கையின்றி வினவியுள்ளார்.

**கலைச்சொல்லாக்கம்**

கலைச்சொல் உருவாக்கம் பற்றி கருத்துத் தெரிவிக்கும்போது கிரேக்க லத்தீன் சொற்களை ஆங்கிலேயர்கள் ஏற்றுக்கொண்டதைச் சுட்டிக்காட்டுகிறார். அச்சொற்களுக்கு மாற்றுச்சொற்களை அவர்கள் உருவாக்க முயற்சிகள் எடுக்கவில்லை எனவும் அதேபோல் பிறமொழிக் கலைச்சொற்களுக்கு இணைச்சொற்களை முதலில் தமிழில் தேட வேண்டும், இல்லையெனில் பிறமொழிச் சொற்களை அப்படியே ஏற்றுக்கொள்வது சிறந்த முறை என்பதை,

> "...விஞ்ஞான சாஸ்திரங்கள் சம்பந்தமாக ஆங்கிலத்தில் காணப்படும் அநேகச் சொற்கள் அந்த மொழியைக் கூட சேர்ந்தவையல்ல; கிரேக்க லத்தின் முதலிய மொழிகளைச் சேர்ந்தவை; அவைகளை ஆங்கிலேயர் அப்படியே கைக் கொண்டிருக்கிறார்களே ஒழிய அவற்றின் பொருள்களைக் கொடுக்கும் 'ஆங்கிலோ ஸாக்ஸன் பதங்களைத் தேடிக் கொண்டிருக்கவில்லை. விஞ் ஞான சாஸ்திர கருத்துக்களுக்குத் திட்டமாய்ச் சரியான பொருளுடைய பதங்கள் தமிழில் வழங்கியிருந்தால், அவைகளைப் போற்றி எடுத்துக் கொள்வது தமிழர் கடமை. அப்படி-யில்லையானால் பிற மொழியிலுள்ள சொற்களை அப்படியே கையாள்வது உத்தமம்"

எனவும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சொற்கள் எந்த மொழிக்கு உரியன என்று கவலைப்படத் தேவையில்லை; மக்கள் ஆங்கிலச் சொற்களையே பயன்படுத்தத் தொடங்கிவிட்டார்கள்.

சொற்களை அப்படியே ஏற்றுக்கொள்வது நலம் எனவும் வலியுறுத்துகிறார்.

> ‘...சாஸ்திர பதங்கள் எந்த மொழியைச் சேர்ந்திருந்தாலும் அவைகளை அப்படியே எடுத்தாள்வதுதான் முறை. ‘தெர்மாமீட்டர்’, ‘ஆசிட்’ போன்ற சொற்களை ஆண்களும், பெண்களும், படித்தவர்களும், பாமரர்களும் தாராளமாய்க் கையாண்டு வருவதால், அவைகளுக்குப் பதிலாகத் தமிழ்ச் சொற்கள் ஆக்கப்புகுவது சரியில்லை. ‘அனற்பதனி’, ‘காடி’ போன்ற சொற்களை ஆக்கி விடலாம். ஆனால் அவை மக்களின் பேச்சோடு இயங்குவதற்கு வெகுகாலம் ஆகும்.”

என்ற பகுதி இதனைத் தெரிவிக்கிறது.

கலைச்சொல்லாக்கத்தில் வடமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதா? தனித்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவதா என வாதப்பிரதிவாதம் நடைபெற்ற காலத்தில் மொழியைப் பற்றிக் கவலை-யில்லை, அறிவியல் அறிவுதான் முக்கியம் என்ற சுப்பிரமணிய அய்யரின் கருத்துக்கள் கவனிக்கத்தக்கன.

தமிழ்ப்பதங்களையும், பதத்தொகுதிகளையும் வெறும் தேசபக்தி உணர்ச்சியாலும் மொழிப்பற்றாலும் தூண்டப்பட்டு உருவாக்குவது தவறாகும் என்ற சுப்பிரமணிய அய்யரின் கருத்துக்கள் முறையே சுதேச உணர்வுடைய கலைச்சொல்லாக்குநர்களையும், செ.மா.த.சங்கத்தினரையும் குறிப்பிடுவதாகக் கருத இடமுண்டு. இவ் இரு குழுக்களின் போக்கிலிருந்து வேறுபடும் மூன்றாவது போக்கினராகவே ஏ.வி.சுப்பிரமணிய அய்யரும். டி.எஸ்.சொக்கலிங்கமும் விளங்கு கின்றனர்.

### டி.எஸ்.சொக்கலிங்கம்

தினமணி இதழின் ஆசிரியராகப் பணியாற்றியவர் டி.எஸ்.சொக்கலிங்கம். சிறந்த இதழாளராகவும், தீவிர காந்தி இயக்க ஆதரவாளராகவும் அறியப்பட்டவர்; மொழிப் பாதுகாப்பு, மொழி வளர்ச்சி பற்றி கருத்து தெரிவிக்கும் இவர் கலைச்சொல்லாக்க முயற்சியையும், பயிற்றுமொழித் திட்டத்தையும் எதிர்த்து வந்தார்.

இதனை

> “கலைச்சொற்கள் எல்லாவற்றையும் தனித்தமிழில் ஆக்க வேண்டுமென்று சொல்வது உபயோகமில்லாத வேலை. தமிழரின் ஜனத்தொகை இரண்டரை கோடி இருக்கலாம் இந்த சொற்ப ஜனத்தொகையுள்ள ஒரு பிரதேசத்தில் சகல கலைகளுக்கும் உள்ள உயர்தரப் படிப்பைச் சொல்லிக் கொடுக்கக் கூடிய ஸ்தாபனங்களை ஏற்படுத்தி நடத்தி வரமுடியுமென்று நினைப்பது வெறும் பகற்கனவு” (டி.எஸ்.சொக்கலிங்கம் 1943:45)

என்ற அவர் கூற்றிலிருந்து அறியமுடிகிறது.

### கலைச்சொல்லாக்கம்

இந்தியா முழுமைக்கும் ஒரே வகையான கலைச்சொல்லாக்கம் அவசியம் என்பதை,

> “தமிழ்க் கலைச்சொற்களைக் கொண்டு ஒரு கலையில் ஆரம்பப் படிப்பை முடித்துவிட்டு, மற்றொரு மாகாணத்திற்கு உயர்தரப் படிப்புக்குப் போனால் அங்குள்ள பாஷையின் கலைச்சொற்களைப் புதிதாகப் படித்தாக வேண்டும். இந்தக் கஷ்டத்தைத் தவிர்க்க வேண்டுமானால் இந்தியா பூராவுக்கும் பொதுவான ஒரு பாஷையில் கலைச் சொற்கள் இருக்க வேண்டும். அப்படிச் செய்வது தான் புத்திசாலித்தனமானது. அது தான் காரிய சாத்தியமானது. அதைவிட்டு தனித்தமிழில் எல்லாக் கலைச் சொற்களும் வேண்டுமென்று சொல்வது வெறும் குருட்டுத்தனமாகும்”

என்று வற்புறுத்தியுள்ளார். மேலும் இந்தியா முழுமைக்கும் பொதுவான ஒரு மொழியில் கலைச்சொற்கள் இருக்க வேண்டும் என அவர் கூறியுள்ளது வடமொழியை மனதில் கொண்டேயாகும். இந்தியாவுக்கு ஒரே ஆட்சிமொழி என்ற அடிப்படையில் தமிழின் இருப்பைப் புறக்கணிக்கும் வகையிலே சொக்கலிங்கத்தின் கருத்து அமைந்துள்ளது.

### சீனிவாச சாஸ்திரிக் குழு (1940)

கலைச்சொல் பற்றித் தமிழக அறிஞர்களிடம் கருத்து மோதல் நடந்து கொண்டிருந்த காலகட்டத்தில் அன்றைய சென்னை மாகாண அரசு புதிய கலைச்சொல்லாக்கக் குழுவை உருவாக்கும் முயற்சிகளில் இறங்கியது.

> “உயர்நிலைப் பள்ளிகளில் தாய் மொழிவழி மொழியில்லாத பாடங்களைக் கற்பிப்பதில் அரசு கவனம் செலுத்திவருகிறது. இதற்கென மாகாணத்தின் மொழிகளில் பாடப்புத்தகங்கள் உருவாக்கப்பட வேண்டும். அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய அறிவியல் கலைச்சொற்கள் இல்லாவிட்டால் தரமான பாடநூல்களை உருவாக்க முடியாது. எனவே அரசு பொதுத்தன்மையுடைய தரப்படுத்தப்பட்ட கலைச்சொற்களை உருவாக்குவதற்கான பொதுக்கோட்பாடுகளை உருவாக்கவும் கலைச்சொற்களை உருவாக்கவும் பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட குழுவை அமைக்க முடிவு செய்தது”

இக்குழுவே சென்னை மாகாண அரசால் நிறுவப்பட்ட இரண்டாவது கலைச்சொல்லாக்கக் குழுவாகும்.

### குழுவினரிடம் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள்

சாஸ்திரி குழுவிற்குக் கலைச்சொல்லாக்கக் கொள்கை வகுப்பது தொடர்பாகச் சில கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அக்கருத்துக்கள் வருமாறு;

1. (அ) கல்வி நோக்கங்களைப் பொறுத்தவரை அந்நிய, ஆங்கில கலைச்சொற்களுக்குச் சமமாகத் தற்போது உபயோகத்திலுள்ள தென்னிந்திய மொழிகளில் வழங்கப்பட்டு வரும் கலைச்சொற்கள் எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றன?

   (ஆ) தென்னிந்திய மொழிகளில் ஏற்கக்கூடிய அளவில் இணையான கலைச்சொற்கள் இல்லாதபோது ஆங்கில மொழிக் கலைச்சொற்களையே பயன்படுத்துவது சிறந்ததாக இருக்குமா?

2. இவற்றுக்கு ஒரு மாற்றுவழியாக அந்நியமொழிக் கலைச்சொற்களுக்கு ஈடான சொற்களைக் கொண்டு தென்னிந்திய மொழிகளிலேயே புதிய தரமான சொற்கோவையை உருவாக்குவது அவசியமானதா?

3. பதிப்பகங்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மேற்கண்ட குறிப்புக்களின் மீதான தீர்மானங்கள் குறித்து என்னென்ன ஆணைகள் வழங்கப்பட வேண்டும்?

### குழுவின் அறிக்கை

குழுவின் முன் வைக்கப்பட்ட கருத்துக்களையும் ‘இந்திய அரசின் மத்திய கல்வி ஆலோசனைக் கழகத்திற்கு, பி.என்.சீல் (பொதுத் தகவல் துறை, பூனே) அளித்த பொதுவான அறிவியல் கலைச்சொற்கள் பற்றிய குறிப்பு’, ‘அறிவியல் பாடங்களின் மொழிபற்றிய ஐ.ஆர்.பரஞ்பே எழுதிய குறிப்பு’ ஆகியவற்றைக் குழு விவாதத்துக்கு எடுத்துக் கொண்டது. தென்னிந்திய மொழிகளுக்குள் ஒட்டுமொத்தமாக அறிவியல் கலைச்சொற்களில் ஒரு ஒழுங்குமுறையைக் கொண்டுவருவது என்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்து, குழு தன் அறிக்கையை அளித்தது, அந்த அறிக்கை சில பகுதிகள் வருமாறு:

1. நடுநிலைப்பள்ளிகளில் தற்போது பயன்பாட்டிலுள்ள தென்னிந்திய மொழிகளில் உள்ள அந்நிய மொழிக் கலைச்சொற்களுக்கான இணைச்சொற்களை ஆராய்ந்ததில் அவை பெரும்பாலும் நிலைபெற்றவையாகவும், கல்விநோக்கங்களுக்கு ஏற்புடையதாகவும் இருக்கின்றன. புழக்கத்திலுள்ள வேறு சில சொற்கள் இயற்கையான பொருட்கள் அல்லது நிகழ்வுகளைக் குறிக்கும் (எ.கா. மின்னல், இடி, எதிரொலி, நிலநடுக்கம், உலோகம், மூட்டு, கோவேறு கழுதை). இவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ளலாம். இவ்வகைச் சொற்கள் தென்னிந்திய மொழிகள் ஒவ்வொன்றிலும் வேறுபட்டதாகவும், சிறப்புடைய தாகவும் இருக்கக்கூடும்.

2. கருத்துக்கள் அல்லது பண்புகளைக் குறிக்கும் சொற்களுக்கும் எல்லாத் தென்னிந்திய மொழிகளுக்கும் பொதுவாக ஒரு தரப்படுத்தப்பட்ட கலைச்சொல் பட்டியலை உருவாக்க வேண்டியது அவசியமாகிறது (எ.கா. இயல்புகள், குணங்கள், பெயர்கள்: சக்தி, மைல், பரிமாணம், போக்கு, உணவுச்சத்து)). இவற்றுக்கான தென்னிந்திய மொழி இணைச்சொற்களின் உருவாக்கத்தின் போது திராவிட மொழிகளுக்கு சமஸ்கிருத மொழியை அடிப்படையாகவும் உருது மொழிக்கு பாரசீக மற்றும் அராபிய மொழிகளை அடிப்படையாகவும் எடுத்துக்கொள்ளலாம் எனினும் இந்த வகையில் சொற்கள் மிகவும் குறைவாகவே இருக்கும்.

3. மேலே குறிப்பிட்ட இரண்டு வகைக்குள் வராத (அல்லது அவற்றின்படி உருவாக்க முடியாத) அறிவியல் கலைச்சொற்களை அப்படியே அவற்றின் மூலமொழியிலிருந்து எடுத்துக்கொண்டு, அதே உச்சரிப்புடன் அந்தந்த மொழிகளின் எழுத்துக்களில் உபயோகப்படுத்திக் கொள்ளப்படும்.

### சாஸ்திரிக் குழுவிற்கு எதிர்ப்பு

சாஸ்திரிக் குழுவின் அறிக்கை வெளிவந்த காலகட்டத்தில் செ.மா.சங்கத்தின் பணிகளைப் பற்றி குறிப்பிட்டு, இ.மு.சு. அரசுக்கு கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் சாஸ்திரிக் குழுவின் அறிக்கையைப் புறக்கணிக்க வேண்டுகோள் விடுத்தார். அவ்வேண்டுகோள்,

1. புதிய குழுவின் (சாஸ்திரிக் குழு) பரிந்துரைகளைப் பொருட்படுத்த வேண்டியதில்லை.

2. அறிவியல் கலைச்சொற்களை உருவாக்கும் பொறுப்பை, செ.மா.த. சங்கம் போன்ற சங்கங்களிடம் ஒப்படைத்து அரசு எல்லா வகையிலும் உதவ வேண்டும்.

3. இது நிறைவேறாத நிலையில் மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளுக்கான கலைச்சொற்களை உருவாக்க உண்மையான அறிவும் பயிற்சியும் உள்ள குழுமனப் பான்மையில்லாத (unbiased) வல்லுநர்களைக் கொண்ட குழுவை அமைக்க வேண்டும்.

4. தமிழைப் பொறுத்த அளவில் செ.மா.த.சங்கம் வெளியிட்டுள்ள கலைச்சொற்கள் நூலில் உள்ள சொற்களைத் தரப்படுத்த அரசு உதவவேண்டும். மேலும், அரசு மற்றும் பல்கலைக்கழகக்

கல்வித் துறைகளுக்கான கலைச்சொல்லாக்க முயற்சியில் ஈடுபட்டுள்ள செ.மா.த.சங்கத்திற்கு அரசு உதவ வேண்டும் என்பதாக அமைந்திருந்தது. இ.மு.சு.வின் கடிதத்தை அன்றைய ஆளுநர் அரசு கவனத்தில் கொள்ளவில்லை. இருப்பினும் சாஸ்திரிக்குழுவின் கொள்கைகள் தமிழுக்குக் கேடு விளைவிப்பன என்பதை வலியுறுத்தி அவர் மீண்டும் அரசுக்குக் கடிதம் எழுதினார். அக்கடிதத்தில்,

சமஸ்கிருத வேர்களிலிருந்து உருவாக்கப்படும் சொற்கள் தமிழ்மொழியின் இனிமையையும், வளர்ச்சியையும் பாதிப்பதுடன் சாதி அடிப்படையிலான வெறுப்பையும் நிச்சயம் தூண்டிவிடக்கூடும்...

எனக் குறிப்பிட்டார்.

அவரின் எதிர்ப்புக் கடிதத்தையும் அதற்குப்பின் செ.மா.த.சங்கத்தின் சார்பில் அனுப்பிய பல அறிக்கைகளையும் ஆலோசகர் ஆட்சி ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை. மேலும் தமிழ் அறிஞர்களை பேரின வாதிகளாகச் சீனிவாச சாஸ்திரி சுட்டிக்காட்டினார் இத்துடன் வையாபுரிப் பிள்ளையைச் சேர்க்க வேண்டும் என்று கடுமையாகப் பரிந்துரைத்தார். சாஸ்திரியார் குழு பொதுவாகத் தமிழருக்கு விரோதமாகக் கருதப்பட்டது.

### கண்டனக் கூட்டங்கள்

இதற்கிடையே சாஸ்திரிக் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில் இடம் பெற்றிருந்த சமஸ்கிருதத்திற்கு ஆதரவான நிலைப்பாடு செ.மா.த.சங்கம் உள்ளிட்ட பல அமைப்புக்களைப் போராடத் தூண்டியது. 31.08.1941இல் சென்னை கோகலே மண்டபத்தில் அரசாங்கக் கலைச்சொல் கமிட்டி கண்டனக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு அன்றைய சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சர் முகமது உஸ்மான் தலைமை தாங்கினார். கண்டனக் கூட்டத்தில் பெரியார் ஈ.வெ.ராமசாமி, டி.எஸ். நடராசப் பிள்ளை, ரெவரெண்ட் அருள் தங்கையா, தெ.பொ. மீனாட்சி சுந்தரம், மு.இராசகண்ணு. கே.எம். பாலசுப்பிரமணியம், டி.சண்முகம் பிள்ளை, பி.பாலசுப்பிரமணியம், சி.என்.அண்ணாதுரை ஆகியோர் பேசுவதாக அறிவிப்பு செய்யப்பட்டது. ஏற்கனவே வெளியான இக்கூட்டங்களில் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கச் சொற்கள் பட்டியல் இருக்கும்போது புதிய குழு தேவையற்றது என்றும், இக்குழுவின் அமைப்பு, போக்கு, நோக்கு ஆகியவை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் இக்குழுவில் தமிழறிஞர்கள் யாரும் இடம் பெறவில்லை. மேலும் முன்னாள் உழைத்த தமிழ்ச் சங்கத்தின் பிரதிநிதித்துவம் இல்லை என்பது கண்டிக்கத்தக்கது என்றும் வலியுறுத்தப்பட்டது.

அன்றைய கூட்டத்தில் அரசு அமைத்த குழுவைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 25.12.1940 ஆம் நாள் பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் தலைமையில் நடந்த சென்னை மாகாணத் தமிழறிஞர் மாநாட்டிலும் சாஸ்திரி குழுவிற்கு எதிராகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1940ஆம் ஆண்டு காஞ்சீபுரம் கண்ணன் டாக்கீசில் 'கலைச் சொல்லாக்கக் கண்டன மாநாடு' நடைபெற்றது 1941இல் தஞ்சையிலும், 1942இல் திருநெல்வேலியிலும், 1943இல் மதுரையிலும், 1945இல் சென்னையிலும், 1946இல் மீண்டும் திருநெல்வேலியிலும், கலைச் சொல்லாக்கக் கண்டன மாநாடுகள் நடைபெற்றன. சாஸ்திரிக் குழுவிற்கு எதிரான கண்டன அறிக்கைகளைத் தமிழறிஞர் கழகம் என்ற அமைப்பு அச்சிட்டு, தமிழகம் முழுவதும் வெளியிட்டது. சென்னை மாகாண தமிழ்ச்சங்கம், தமிழறிஞர் கழகம் போன்றவை தொடர் துண்டு பிரசுரங்களை வெளியிட்டது. இப்பிரசுரங்கள் தொழில் நுட்பச் சொற்களைத் தமிழில் மட்டும் ஏன் உருவாக்க வேண்டும் என்பதை விளக்கியது மற்றும் சமஸ்கிருத சார்புகளை அம்பலப்படுத்தியது. சமஸ்கிருத அடிப்படையிலான முந்தைய பட்டியல் மூலம் ஏற்படும் குழப்பமும் மெய்ப்பிக்கப்பட்டது. மேலும் கட்டுரைகள் மூலம் சமஸ்கிருதத்திலிருந்து தமிழ் எப்படி முற்றிலும் வேறுபட்டது என்பதும் வலியுறுத்தப்பட்டது. தமிழ் அதன் சொந்த அடிப்படையில் சொற்களை உருவாக்கும் திறன் கொண்டது என்றும் கூறப்பட்டது.

### விடுதலை இதழின் கண்டனம்

சாஸ்திரிக் குழுவிற்கு எதிரான கருத்துக்களை 'குதிரைக்கு முன் வண்டி' என்ற தலையங்கம் வாயிலாக 'விடுதலை' (6.07.1946) இதழ் கண்டனம் செய்தது. 'கலைச்சொற்கள் பெயரால் தமிழ்க்கொலை' என்ற தலைப்பிட்டு (11.10.1946) இக்குழுவை மீண்டும் 'விடுதலை' இதழ் கண்டித்துள்ளது. அத்துடன்

> "பழைய கலைச்சொற்கள் பட்டியல் ஒன்றிருக்கும்போதே இப்போது மற்றொரு பட்டியலை ஏற்பாடு செய்வதன் உட்கருத்து என்னவென்பது விளங்கவில்லை. ஒருக்கால் பழைய பட்டியலைக் காட்டிலும் அதிகமான வடமொழிச் சொற்களை இந்தப் பட்டியலில் நுழைப்பதற்காக இந்த ஏற்பாடா? அப்படியானால் தமிழ் மந்திரியான தோழர் அவினாசிலிங்கம் அதற்கு இணங்கியது எப்படி?"
>
> (விடுதலை 11.10.1946)

என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.

"சென்னை அரசாங்கத்தார் தொகுத்துவரும்

கலைச்சொற்பட்டியலை, எல்லா தமிழ்ப் புலவர்களுக்கும், தமிழாசிரியர்களுக்கும், தமிழ்ப் பத்திரிகையாசிரியர்களுக்கும் அனுப்பி அவர்களது திருத்தங்களையும் பிற ஆலோசனைகளையும் கேட்ட பிறகு தான் ஸர்க்கார் அந்தப் பட்டியலை ஒப்புக்கொள்ள வேண்டும்" (விடுதலை 11.10.1946).

என்ற கருத்தினையும் வெளியிட்டுள்ளது. இதனை அறியும்போது தமிழ்மீது தந்தை பெரியார் கொண்டிருந்த தமிழ்ப்பற்றை நன்றாக புரிந்து கொள்ள முடிகின்றது.

**குழுவின் செயல்பாடுகள்**

சாஸ்திரிக் குழுவின் அறிக்கையின்படி ஒவ்வொரு மொழிக்கும் ஒரு துணைக்குழு அமைக்கப்பட்டது. தமிழ்த் துணைக்குழுவின் (Tamil Sub committee) கூட்டங்கள் குழுத்தலைவர் கே.சாமிநாதன் (ஆங்கிலப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி) தலைமையில் 25.10.1941, 21.02.1942, 27.06.1942 ஆகிய நாள்களிலும், அதனைத் தொடர்ந்து நான்கு நாள்களும் நடந்தன.

சென்னையில் இருந்த துணைக்குழுவின் உறுப்பினர்கள் பல முறை கூடி, கலைச்சொல்லாக்கம் குறித்து விவாதித்தனர். துணைக்குழுவின் அழைப்பின் பேரில் குழுக்கூட்டங்களில் கலந்துகொண்ட சச்சிதானந்தப்பிள்ளை, ஜெ.பி.மாணிக்கம், பெ.நா. அப்புசாமி ஆகியோரின் ஆலோசனைகளையும் பெற்றனர். மேலும் தமிழ் மற்றும் பிற துறைத்தொடர்பான பதினான்கு முக்கிய அறிஞர்களின் ஆலோசனைகளையும் ஏற்றனர்.

சாஸ்திரிக் குழுவை எதிர்த்துப் போராடிய செ.மா.த.சங்கத்தின் கலைச்சொற்களைத் தமிழ்த் துணைக்குழு பயன்படுத்திக் கொண்டது. சாஸ்திரி அளித்த அறிக்கையில் இடம்பெற்ற ஆங்கில கலைச்சொற்களைப் பயன்படுத்துதல், 'சமஸ்கிருத மூலச் சொற்களைப் பயன்படுத்துதல்' ஆகிய இரண்டு நிலைப்பாடுகளும் சரியானவை அல்ல எனத் தமிழ்த் துணைக்குழு கருதியது. அதனால் இரண்டு புதிய பரிந்துரைகளைத் தமிழ் உட்குழு உருவாக்கியது. இரு பரிந்துரைகள் வருமாறு:

1. உயர்நிலைப்பள்ளிகளில் பொது உபயோகத்திலுள்ள தமிழ்ச்சொற்களை எடுத்துக் கொள்வது (இது சீனிவாச சாஸ்திரி) குழுவில் குறிப்பிட்டுள்ள வகை (1)ன் சற்றே பரந்த (Extended) வடிவக் கருத்தாகும்.

2. பண்புகள் மற்றும் செயல்பாடுகளைக் குறிக்கும் சொற்களை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு நேரடியாக மொழிபெயர்த்தல் (சமஸ்கிருதத்திலிருந்து பெறத் தேவையில்லாமல் தமிழிலேயே இருக்கும் பெரும்பாலான இச்சொற்கள் அனைத்து தென்னிந்திய மொழிகளுக்கும் பொதுவானதாக இருப்பதில்லை).

சாஸ்திரி 1943ஆம் ஆண்டில் இறந்துவிட்டார். அவர் தலைமையில் தயாரிக்கப்பட்ட கலைச்சொற்கள் அச்சகத்திற்கு அனுப்பப்பட்டன.

**குழுவில் மாற்றங்கள்**

காங்கிரஸ் அரசு 1946இல் மீண்டும் பொறுப்பேற்றது. அன்றைய காங்கிரஸ் அரசின் கல்வி அமைச்சர் அவினாசிலிங்கம், சாஸ்திரியின் மறைவினால் அவருடைய பதவியில் ராவ்பகதூர் டி.எஸ்.மூர்த்தியை 1946இல் நியமித்தார். அவருடைய தலைமையின்கீழ் பணிபுரிய புதிய குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. இக்குழுவில் புதிய உறுப்பினர்களாக தமிழறிஞர்களை இணைத்துக்கொள்ள தமிழறிஞர் கழகம் அரசுக்கு வேண்டுகோள் விடுத்தது. இதனைத் தொடர்ந்து சாஸ்திரிக் குழுவில் சுவாமி விபுலானந்தர், ஆர்.பி.சேதுப்பிள்ளை, விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக்கழகம், ஸ்ரீனிவாச இராகவன், சபேசன், தெ.பொ.மீனாட்சிசுந்தரம், ஜி.சுப்பிரமணியப்பிள்ளை, டாக்டர்.சிதம்பரநாதச் செட்டியார் ஆகியோர் புதிதாகச் சேர்க்கப்பட்டனர். இக்குழு முந்தைய குழு தயாரித்த கலைச்சொற்களை மறுஆய்வு செய்து 1947இல் அரசுக்கு வழங்கியது. புதிய குழுவினர் அளித்த கலைச்சொற்களை 1947இல் அரசு வெளியிட்டது. 1940 இல் அமைக்கப்பட்ட கலைச்சொல் குழு உருவாக்கிய சொற்கள் இதில் இடம்பெற்றன.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க கொள்கைகளை ஏற்றுக்கொண்ட சாஸ்திரியின் துணைக் குழு அமைப்பு மற்றும் குழு ஏற்றுக்கொண்ட தமிழறிஞர்கள் போன்ற செயல்கள் செ.மா.த.சங்கம் சார்பு முகாமுக்கு இறுதி வெற்றியை உணர்த்தியது.

**கலைச்சொல் பட்டியல்**

அரசு 1947ஆம் ஆண்டில் வெளியிட்ட கலைச்சொற்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் பாடநூல்களை மட்டுமே பாடநூல் குழு அங்கீகரிக்கும் என கல்வியமைச்சர் அவினாசிலிங்கம் அறிவித்தார். இடைக்கால அமைச்சகத்தின் கீழ், தி.சு.அவினாசிலிங்கம் செட்டியார் காங்கிரஸ்காரராக இருந்தாலும் பொதுவாகச் செயல்பட்டார். இவரது தமிழ்ச் சார்பு தமிழ் அறிஞர்களின் நம்பிக்கையை உயர்த்தியது. ஏனெனில் குழுவின் தரப்படுத்தலை மாற்றியமைக்கும் பணியை மேற்கொண்டார். இது சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்திற்குக் கிடைத்த இரண்டாவது வெற்றி ஆகும்.

●

கட்டுரையாளர், எழுத்தாளர், சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர்.

கட்டுரை



# சுசீந்திரம் ஊர் திருவாவடுதுறை ஆதினச்செப்பேடு

**அ.கா.பெருமாள்**

**ஒன்று**

**சு**சீந்திரம் திருவாவடுதுறை மடத்தின் பழைய நூல் நிலையத்தில் தட்சிணாமூர்த்தி பற்றிய ஒரு நூலைத் தேடிப்போன போது தான் சுசீந்திரம் திருவாடுதுறை ஆதீன மடம் செப்பேட்டின் பழைய கையெழுத்து பிரதியைப் பார்த்தேன். அதைத் திருவாவடுதுறை மடத்திலிருந்து பதிவு செய்தவர் வித்துவான் குமரேச பிள்ளை என்ற பெயரும் அதிலிருந்தது. அப்போது சுசீந்திரம் மடத்தின் மேலாளராக இருந்த கிருஷ்ணபிள்ளை என்பவரைத் தனிப்பட்ட முறையில் அறிவேன். அவர் அந்த ஆதீனம் பற்றிய பழைய விஷயங்களை எல்லாம் கையெழுத்துப் பிரதியில் எழுதி வைத்திருந்ததாகக் கேள்விப்பட்டேன். இப்போது அந்த ஆவணங்கள் எவையும் இல்லை என்றார்.

சுசீந்திரம் ஊரில் சைவ சமய பிரச்சாரராக இருந்த கந்தசாமிப் பிள்ளை, பள்ளி ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்ற தமிழறிஞர் வித்துவான் குமரேச பிள்ளை ஆகிய இருவரிடம் திருவாவடுதுறை ஆதீன செப்பேடு பற்றி கேட்கலாம் என்றும் கிருஷ்ணமூர்த்தி சொன்னார். குமரேச பிள்ளை சதாவதானி செய்குத்தம்பி பாவலரின் மாணவர். நான் அவரைச் சந்தித்தபோது நான் கேட்ட விஷயத்தை விட்டுவிட்டு பாவலரைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார் என்றாலும் கொஞ்சம் செய்தி கிடைத்தது.

இது நடந்து பத்து ஆண்டுகள் கழித்து சிதம்பரம் தொல்லியல் அதிகாரி கிருஷ்ணமூர்த்தியைத் தஞ்சை தொல்லியல் கழகக் கருத்தரங்கில் சந்தித்தேன். பேச்சுவாக்கில் நான் பார்த்த செப்பேட்டின் பிரதியைப் பற்றி சொன்னேன். அவர் அது பற்றி சிறு கட்டுரை எழுதியிருப்பதாகச் சொன்னார். மூலச் செப்பேடு திருவாவடுதுறை ஆதீனத்தில் இருப்பதாகவும் நீங்கள் உங்கள் பார்வையில் விரிவாக எழுதலாம் என்றும் சொன்னார். அவரும் சில செய்திகளைச் சொன்னார்.

**இரண்டு**

நீண்ட கைப்பிடியுடன் கூடிய இந்தச் செப்பேடு நீள் சதுரத்தில் அமைந்தது. முதல் பக்கத்தில் 22 வரிகள். இரண்டாம் பக்கம் 19 வரிகள் ஆக 49 வரிகள். வேலைப்பாடு இல்லாத செப்பேடு என்றார் கிருஷ்ண மூர்த்தி. இது சுசீந்திரம் திருவாவடுதுறை ஆதீன மடத்தில் ஆரம்பகாலத்திலேயே இருந்தது என்றும் அது பற்றிய செய்திகள் அவர்கள் வெளியிட்ட பழைய மலர் ஒன்றில் இருந்ததாகவும் கூறினார்.

இந்த செப்பேடு பற்றி இன்னும் எழுதலாம் என்று எனக்குத் தோன்றியது. வேணாட்டு அரசர்கள் ஆண்ட மலையாள தேசத்தில் சைவத்தையும் தமிழையும் கொண்டாடிய ஆதீனம் எந்தப் பிரச்சினையும் இன்றி செயல்படுவதற்குரிய சூழல் இருந்தது. இதற்கு இவர்கள் நம்பூதிரிகளைப் போலவோ கோவில் நிர்வாகிகளைப் போலவோ உள்நாட்டுக் கலகங்களில் தலையிடவில்லை என்பது முக்கியமான காரணம்.

அந்தச் செப்பேட்டை மீண்டும் படித்த போது சைவ சித்தாந்தத்தை முறைப்படியாக கற்றுத் தேறிய உரை எழுதியவர்கள் மலையாளப் பின்னணியுள்ள ஒரு ஊரில் இருந்தார்கள்; அவர்கள் இருந்த அந்த மடம் தமிழை வளர்த்தது என்பது வியப்பிற்குரிய விஷயமாகத் தோன்றியது

நாஞ்சில் நாட்டில் திருவாவடுதுறை ஆதீன மடங்கள் ஆரல்வாய்மொழி, தாழக்குடி, தேரூர், பறக்கை, சுசீந்திரம், பீமநகரி என்னும் ஊர்களில் இருந்தன. இந்த மடங்களுக்குத் தலைமை இடமாக சுசீந்திரம் இருந்தது. நாஞ்சில் நாட்டில் மலையாள பின்னணி முழுதுமாய்க் கொண்ட ஒரு கிராமம் சுசீந்திரம். இங்கு உள்ள கோவில் நிர்வாகம் அதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். இங்கு நாயர் சமூகத்தினர் பெருமளவு இருந்ததும் ஒரு காரணம். அந்த ஊரில் உள்ள பள்ளிக்கூடம் ஒன்று மலையாளம் பள்ளிக்கூடம் என்று அழைக்கப்பட்டது. இன்னொரு பெரிய பள்ளிக்கூடத்தில் மலையாளம் வழி அறிவியல், வரலாறு போன்ற பாடங்கள் 70கள் இறுதிவரை கற்பிக்க இப்படியான ஒரு ஊரில் மடம் உருவானதன் பின்னணி இந்தச் செப்பேட்டில் கொஞ்சம் வெளிப்படுகிறது.

சுசீந்திரம் செப்பேட்டில் காலம் மிகத் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. விருச்சகத்தில் வியாழம் நின்ற கொல்லம் 826 ஆம் ஆண்டு பங்குனி 23 ஆம் தேதி பூர்வ பட்சத்துத் திசமியும் வெள்ளியாட்சையும் திரிதி நித்தியரோகமும் பூசமும் ஆனைக் காணமும் பெற்ற நாள்" என முதல் இரண்டு வரிகளில் குறிக்கப்படுகிறது. கொல்லம் என்பது மலையாள ஆண்டு. இங்கு குறிக்கப்படும் பொ.ஆ 1651 பங்குனி 23 ஆம் தேதி (மார்ச் 21), வெள்ளியாட்சை என்பது வெள்ளிக்கிழமையைக் குறிக்கும்.

இது தானம் தொடர்பான செப்பேடு. தானம் பெற்றவர் திருவாவடுதுறை அம்பலவான பண்டார சன்னதி ஆவார். தானம் கொடுத்தவர் சொக்கலிங்க நாயக்கர். இந்தச் செப்பேட்டின் செய்திகள் வருமாறு:

வடமங்கலத்து முதலி நாயக்கர் சின்ன சொக்கலிங்க நாயக்கர் மடம் ஆதினத்திற்கு. தன்ம சாதன பட்டயம் வழங்கியுள்ளது. ஏற்கனவே ஆதீனத்திற்குச் சொந்தமான ஒரு நிலத்தை ஒற்றி வைத்துள்ளனர். அந்த சேரா ஒற்றி மூல ஆவணத்தைச் சுசீந்திரம் மடத்து (அதிகாரி) தானவன் சாத்தனிடம் கொடுத்துள்ளனர். அதோடு ஆதீனத்துக்குச் சொந்தமான மனையில் ஒரு மடம் கட்டி பிச்சா தேவருக்கு (நமசிவாய மூர்த்தி) கோவிலும் கட்டினார்கள். இதன் பின்னே தோட்டமும் உண்டு. இவற்றையெல்லாம் சொக்கலிங்க நாயக்கர் அம்பலவாண பண்டார சன்னதிக்குத் தானமாக வழங்கியுள்ளார். இது நடந்தது பொ.ஆ 1622 ஆம் ஆண்டில்.

மடத்தில் உள்ள அடியவர்களுக்காக நிலங்கள் கொடுக்கப்பட்டன. இந்த வயல்களும் தோட்டங்களும் அனுமநல்லூர் (அருமநல்லூர்,) குசத்தியறை (குறத்தியறை ) பஞ்சவன் காட்டு விளை (பார்வதிபுரம்) தேரூர் (சுசீந்திரம் அருகே உள்ள ஊர்,) உதிரப்பட்டி (நாகர்கோவில் ரயில் நிலையத்தை அடுத்த குக்குராமம்) கோட்டாறு (நாகர்கோவிலில் ஒரு பகுதி) பஞ்சவன் காடு, (கோட்டாற்றின் ஒரு பகுதியாக இருந்தது) நம்பி சாத்தன் கோயில் குளம் ஆகிய இடங்களில் இருந்தன. இந்த இடங்களில் பசு மேய்வதற்காக தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. மடத்துப் பணியாளர்களான ஆண்டிச்சி, உமைய நாச்சியார், நாராயணி, மெக்கி, அம்மையடியாள் ஆகியோருக்கும் நிலம் கொடுக்கப்பட்டு இருந்தது.

நிலங்கள் மட்டுமல்ல, பசுக்களும் இவற்றை மேய்க்கும் இடையரும் தானமாகக் கொடுக்கப்பட்டிருந்தனர். இந்த இடையர்கள் அடிமைகள் அல்லர். சுசீந்திரம் தாணுமாலய சுவாமியின் மகேஸ்வர பூசை அபிஷேகச் செலவை, திருவாவடுதுறை ஆதீனம் மடமே கொடுக்க

வேண்டும். மண்டகப்படி நடத்தும் பொறுப்பும் ஆதீனத்துக்குத்தான். இதற்கான சொத்துக்களை அம்பலவான பண்டார சன்னதிக்குத் தன்மதானம் பிரமாணமாக செய்யப்பட்டுள்ளது. இவற்றை சீடர் பரம்பரையாகச் செய்ய வேண்டும். இந்தச் செய்திகள் எல்லாம் செப்பேட்டின் முதல் பக்கத்தில் உள்ளன.

இரண்டாம் பக்கத்தில் உள்ள பத்தொன்பது வரிகளில் பிரமாணம் செய்தவர், தானம் கொடுத்தவர், வாங்கியவர், பிரமாணம் எழுதியவர் குறித்த செய்திகள் உள்ளன.

தாணுமாலயன் கோவில் திருவிழாவில் ஆதினம் திருக்கண் சாத்து நடத்த வேண்டும், மதுரை நாயக்கர் அரண்மனை சார்பாக வடமலையப்ப பிள்ளை நாராயணப் பல்லன் மூலம் ரூபாய் 5000 பணம் வழங்கியுள்ளார். இந்தப் பணத்தை ஆதீனப் பண்டார சன்னதிகளில் ஒருவரான மவுனப் பண்டாரம் வாங்கியுள்ளார். ஏற்கனவே சேரா ஒற்றி வைக்கப்பட்ட ஆதீன நிலத்தை மீட்டுத் தருவதாகவும் தானம் கொடுத்தவர்கள் வாக்களித்துள்ளனர். பத்திரத்தில் முதலி நாயக்கர் சின்ன சொக்கலிங்க நாயக்கர் (வடமண்டல அதிகாரி) ஒப்பமிட்டுள்ளார். நாஞ்சில் நாட்டு சுசீந்திரம் ஆண்டார் என்பவர் இந்த செப்பேட்டைப் பிரதி செய்து எழுதியுள்ளார்.

**மூன்று**

கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான மடங்கள் சுசீந்திரத்தில் மட்டுமல்ல பறக்கை, தாழக்குடி, தேரூர் ஆரல்வாய்மொழி ஆகிய இடங்களிலும் உள்ளன. இந்த மடங்கள் சைவம் தமிழ் இரண்டையும் வளர்க்கும் பொறுப்பை முறையாகச் செய்து வந்தன. தேரூர் பாணந்திட்டு மடத்தில் இருந்த சாந்தலிங்கத் தம்புரான் என்பவரிடம் கவிமணி தேசிக நாயகம் பிள்ளை தமிழ் கற்று இருக்கிறார். அப்போது தேரூர் தொடக்கப்பள்ளியில் மலையாளமே முதல் மொழியாகக் கற்பிக்கப்பட்டது. "கவிமணியும் ஆரம்பத்தில் மலையாளம் தான் படித்திருக்கிறார். தேரூர் ஆதீனத்தம்புரான் ஆன சாந்தலிங்கத் தம்பிரான் என்பவரே கவிமணிக்கு தமிழ் இலக்கண இலக்கங்களைக் கற்பித்து இருக்கிறார். இது பெரும்பாலும் 1896--1900 ஆண்டுகளில் இருக்கலாம்.

ஆரல்வாய்மொழி அகலிகை ஊற்று தெப்பக்குளம் மேற்கு வடக்கு பகுதியில் திருவாவடுதுறை மடம் இருந்தது. சில கல்வெட்டுகளும் இங்கு உண்டு. மடத்தை ஒட்டி நல்ல விநாயகர் கோவில் உள்ளது. அகலிகை ஊற்று கல்வெட்டு மலையாள வருஷம் 872ல் (பொ ஆ 1697) நிபந்தம் கொடுத்ததாக குறிப்பிடுகிறது. இதனால் இந்த மடம் சுசீந்திரம் மடம் கட்டிய பின்பு 70 ஆண்டுகள் கழிந்து கட்டப்பட்டிருக்கலாம்.

இந்த மடத்தில் 1940 ஆம் ஆண்டில் கூட மெய்ண்ட சாத்திர ஏடுகள் இருந்தன. நான் 1972 ல் ஆரல்வாய்மொழி அண்ணா கல்லூரியில் வேலைக்குச் சேர்ந்த ஆரம்பத்தில் இந்த மடத்திற்கு ஒரு முறை போனேன். சில ஓலைச்சுவடிகள் அங்கிருந்தன. எண்பதுகளில் நான் அங்கு போனபோது தேவார திருவாசக புத்தகங்கள் மட்டுமே இருந்தன. ஓலைச்சுவடிகள் செல்லரித்துப் போனதாகவும் அப்புறப்படுத்தப்பட்டதாகவும் அறிந்தேன். இந்த மடத்தில் 19 ஆம் நூற்றாண்டில் இருந்த தம்பிரான் ஒருவர் நாஞ்சில் நாட்டில் சிலருக்கு ஞான தீட்சை கொடுத்திருக்கிறார். தாழக்குடி "ஆதீன மடத்தில் பழைய இலக்கிய சைவ சித்தாந்த ஏடுகளைப் பார்த்ததாக பத்மநாப பிள்ளை என்பவர் எழுதி இருக்கிறார். இந்த ஊரில் உள்ள சிவன் கோயிலுக்குத் தாழக்குடி மடத்தின் மண்டகப்படியும் உண்டு.

பறக்கை ஆதீனம். இடத்தில் 19ஆம் நூற்றாண்டு பாதியில் தம்பிரான்கள் இருந்ததற்குச் சான்று உண்டு. 1976 வரை இங்கே தம்பிரான்கள் இருந்தனர். கடைசியாக ஞானசம்பந்தத் தம்பிரான் இருந்தார். இந்த மடத்தில் இருந்த முருகலிங்கத் தம்புரான் (1956-1970) சைவ சித்தாந்த சாத்திரம் நன்கு அறிந்தவர். ஜோதிடம் வைத்தியம் தெரியும். பறக்கை ஆதீனம் மடத்தின் எதிரே என் வீடு இருந்தது. நான் 1960-70 வரை இந்த மடத்தில் இருந்தே படித்தேன். முருகலிங்கத் தம்புரானிடம் சைவ சித்தாந்தம் யாப்பெருங்கலக் காரிகை. தண்டியலங்காரம் போன்றவற்றையும் படித்தேன்.

**நான்கு**

1956 வரை கேரளத்தின் ஒரு பகுதியாக இருந்த நாஞ் சில் நாட்டில் சைவத்தையும் தமிழையும் வளர்த்த பங்கு ஆதீனங்களுக்கு உண்டு. திருநெல்வேலி மாவட்டத்திற்கு இது மிகவும் பொருந்தும் இதற்கெல்லாம் ஒரு பின்னணி உண்டு. மதுரை நாயக்க மன்னர்களில் முத்து கிருஷ்ணப்ப நாயக்கர் (1601- 1609) முத்து வீரப்ப நாயக்கர் (1609- 1623) திருமலை நாயக்கர் ( 1623- 1659) ஆகியோர் காலங்களில் உயர் ஜாதியினராக கருதப்பட்ட மக்களை கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றும் முயற்சி நடந்தது. முக்கியமாக தத்துவ போதகர் என்று அழைக்கப்பட்ட ராபர்ட் டி நொபிலி (1577 - 1656) தன்னை இந்தியத் துறவி போல ஒப்பனை செய்துகொண்டு பிரச்சாரம் செய்தார். இவருக்கு எதிர்ப்பு பெரிய அளவில் இல்லை என்றாலும் சேதுபதி மன்னர்கள் இவரை ஒப்புக்கொள்ளவில்லை.

இந்தக் காலகட்டத்தில் நாயக்க மன்னர்களின் உறவினர்கள் சிலர் மக்களிடம் சைவ சமய விழிப்புணர்வை ஏற்படுத்த ஆர்வம் காட்டினர். அவர்களில் முத்து வீரப்ப நாயக்கனின் ஒன்றுவிட்ட தம்பி செவ்வந்தி நாயக்கர் முக்கியமானவர். இவர் தென் மாவட்டங்களில் எட்டு சைவமடங்களை ஏற்படுத்தினார். இப்படியாக ஏற்படுத்தப்பட்ட மடங்களில் ஒன்றுதான் சுசீந்திரம் திருவாவடுதுறை மடம்.

தமிழகத்து சைவ மடங்களில் புகழ் பெற்றதும் தமிழ் மொழிக்குப் பெரும் பங்காற்றியதுமான திருவாவடுதுறை மடம் மயிலாடுதுறை மாவட்டம் குற்றாலம் வட்டம் திருவாலங்காட்டுக்கு அருகே

உள்ளது: திருவாவடுதுறை ஊரில் உள்ள மடம் நமச்சிவாய மூர்த்தியால் 14ஆம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்டது என்கின்றனர்.

நமச்சிவாய மூர்த்தி சிவப்பிரகாசரிடம் தீட்சை பெற்றவர். உமாபதி சிவாச்சாரியாரிடம் உபதேசம் பெற்றவர். இந்த மடத்திற்கு 50க்கும் மேற்பட்ட கிளை மடங்கள் உள்ளன. இந்த மடத்துக்கு சொந்தமாக 75 கோவில்கள் உள்ளன. திருவாவடுதுறை மடங்களிலே பழமையானதும் பாரம்பரியம் மிக்கதுமான மடங்களில் ஒன்று சுசீந்திர மடம்.

**ஐந்து**

சுசீந்திரம் கோவில் நிர்வாகத்துடன் தொடர்புடைய யோகக்காரர்களின் மடங்களைப் போல் திருவாவடுதுறை மடமும் முக்கியமானதாகக் கருதப்பட்டது. 17 ஆம் நூற்றாண்டில் மலையாள நம்பூதிரிகளின் 'நிர்வாகத்தின் கீழ் இருந்த' சுசீந்திரம் தாணுமாலயன் கோவிலில் தமிழ். சைவம் இரண்டிற்கும் மரியாதை இருந்திருக்கிறது என்கிறார் கே.கே.பிள்ளை. தாணுமாலயன் கோவில் திருவிழாவில் ஞானசம்பந்தர் பால் குடிக்கும் காட்சி. சமணர்களைக் கழுவேற்றிய காட்சி ஆகியன 1940 வரை நாடகமாக நடிக்கப்பட்டது. இது தொடர்பான சடங்குகளை மலையாள நம்பூதிரிகளே நடத்தினர்.

முத்து வீரப்ப நாயக்கன் காலத்தில் அவரது தம்பி செவந்தியப்ப நாயக்கர் கட்டிய சுசீந்திர மடம் இப்போதும் ஊர் மக்களால் நாயக்கர் மடம் என்று அழைக்கப்படுகிறது. 1621 - 1651 ஆம் ஆண்டுகளில் இரண்டு காலகட்டங்களில் இங்கு கட்டுமான வேலை நடந்திருக்கிறது.

சுசீந்திர மடம் கோவில் தெப்பக்குளத்திற்கு வடக்கு பார்த்து உள்ளது. ஊரில் நாயக்கமடம் என்று இப்போதும் அழைக்கப்படும் இந்த மடம் இரண்டு பகுதிகளைக் கொண்டது. தெப்பக்குளத்தின் வடக்கு மேற்கு பகுதியில் இருப்பது மூலமடம். அதை அடுத்து முன்னூற்று நங்கை கோவிலை தொட்டு இருப்பது அலுவலகம். இது புது மடம் எனப்படுகிறது.

நாயக்கர் மடம் எனப்படும் முக்கிய மடம். முகமண்டபம், விநாயகர் கோவில், அலங்கார மண்டபம், பின் மண்டபம், பந்திக்கட்டு, மடப்பள்ளி என்னும் அமைப்பை உடையது. முன் மண்டபம் கிழக்கு மேற்காக அமைந்தது. இந்த மண்டபத்தில் உள்ள தூண்களில் சிற்பங்கள் உள்ளன. இவை முத்து வீரப்ப நாயக்கர் செவந்தியப்ப நாயக்கர் இவர்களின் உறவினர்களின் சிற்பங்கள் என்று சொல்கின்றனர்.

இந்த மண்டபத்தின் மேற்கில் கிழக்கு பார்த்து விநாயகர் இருக்கிறார். இந்தக் கோவிலின் மேற்கு இருப்பது அலங்காரம் மண்டபம். இதில் 16 தூண்கள் உள்ளன. இந்த மண்டப வாசலில் கஜலட்சுமி சிற்பம் உள்ளது. இந்த மண்டபத்தை அடுத்து ஒரு மண்டபமும் பந்திக்கட்டும் (சாப்பாட்டு அறை,) மடப்பள்ளியும் (சமையலறை) உள்ளன

அலங்கார மண்டபத்தில் உள்ள தூண்களில் ஆதீன சன்னிதானங்களின் சிற்பங்கள் உள்ளன. இங்கே நடராஜர் சிவகாமி அம்மன் நமச்சிவாய மூர்த்தி ஆகியோரின் படிமங்கள் உள்ளன. இந்த நாயக்க மடத்தை அடுத்து இருப்பது புதுமடம் எனப்படுகிறது இது நிர்வாக அலுவலகம். இது சிறிய மடம்.

செப்பேட்டின்படி முதல் மடம் உருத்திர. கோடி தேசிகர் காலத்தில் முத்து வீரப்ப நாயக்கரின் கொடையால் கட்டப்பட்டிருக்க வேண்டும் (1622). முதுமடம் ஆன நிர்வாக மடம் முதலி நாயக்கர் சின்ன சொக்கலிங்க காலத்தில் (1651) கட்டப்பட்டிருக்க வேண்டும்.

திருவாவடுதுறை குருமகா சன்னிதானங்களாக இருந்த குமாரசுவாமி தேசிகர் 1622-1625) மாசிலாமணி தேசிகர். (1625- 1658) ராமலிங்க தேசிகர் (1658 - 1678) ஆகியோர் சுசீந்திர மடத்தில் சில காலம் இருந்திருக்கின்றனர். திருவாவடுதுறை எட்டாவது ஞானத் தேசிகரான மாசிலாமணி தேவர் சுசீந்திர மடத்தில் இளைய பட்டம் ஆக இருந்திருக்கிறார்.

**ஆறு**

சுசீந்திரம் கோவிலுக்கும் சுசீந்திரம் ஆதீன மடத்திற்கும் உள்ள உறவு 400 ஆண்டுகளாகத் தொடர்கிறது. சுசீந்திரம் கோவில் நாடக சாலையின் முன்பகுதி வடக்குப் புறம் உள்ள தூணில் இருப்பது திருவாவடுதுறை மடத்துத் தம்பிரான் என்பது மரபுவழிச் செய்தி. இது போலவே கோவில் கோபுரம் மாடியில் சுவரில் ஆதீனம் சன்னிதானங்களில் ஓவியங்கள் உள்ளன.

சுசீந்திரம் கோவில் சித்திரைத் திருவிழாவிலும் மார்கழித் திருவிழாவிலும் நாலாம் விழா மண்டகப்படி ஆதீனத்தின் கொடையில் நடக்கிறது. இந்த விழாவில் விழா படிம இறைவன் வலம் வருகிறார். இதற்கு மடத்தில் வைத்தே அபிஷேகம் நடக்கும். பின்னர் அலங்காரம் முடிந்த பிறகு சுவாமி கோவிலில் உள்ள பரங்கி நாற்காலியில் உலா வருவார். செப்பேட்டில் நாலாம் விழா சிறப்பு என்று குறிப்பிடுவது இந்த நிகழ்ச்சியைத்தான்.

செப்பேட்டில் குறிப்பிடப்படும் வடமலையப்ப பிள்ளை என்பவர் திருமலை நாயக்கர் காலத்தில் திருநெல்வேலி பகுதியில் வரிவசூலிக்கும் பொறுப்பில் இருந்தார். இறையூர் வடமலை நாரணகுடை வடமலையப்ப பிள்ளை ஸ்ரீரங்கம் அருகே உள்ள இறையூர் ஊரினர். சிறந்த சிவ பக்தர். தமிழ்ப் புலவர் மச்ச புராணத்தை வடமொழியில் இருந்து தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். முக்கூடற்பள்ளு என்னும் சிற்றிலக்கியம் இவருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

●

கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர். நாட்டார் வழக்காற்றியல் மற்றும் சமூகப் பண்பாட்டு ஆய்வாளர்.



கட்டுரை

# வரலாற்றறிஞர் எரிக்ஹாப்ஸ்பாமை நினைப்போம் (1917-2012)

ரொமிலா தாப்பர்

தமிழில்:
**கி.இரா.சங்கரன் | இரா.ஆனந்தகுமார்**

பேராசிரியர் எரிக்ஹாப்ஸ்பாம் அய்ரோப்பாவின் 300 ஆண்டுகாலத்திய வரலாற்றினை ஆய்ந்த வரலாற்றாசிரியர். அவராய்வுகள் காலவர்த்தமானங்களைக் கடந்து இன்றைக்கும் ஏற்கும்படியாகவும் பொருத்தமாகவும் அமைகின்றன. அவை, ஒரு குறிப்பிட்ட பாடத்தோடு ஒரு குறுகிய பார்வையோடு நிற்கவில்லை. பலவித மக்களின் ஆய்வுகளையும் கருத்துகளையும் கண்டறிவதற்கு இந்த ஆய்வின் எல்லைகள் விரியும். அவரது அபரிமிதமான அறிவுப்பார்வை, தொலைநோக்கு, வாதத்தன்மை போன்றவை மார்க்சியப் பகுப்பாய்வின் விளைவுகளாகும். இதுவே, அவருக்கு கேள்வி கேட்கும் தொடக்கப் புள்ளியாகும்; கடந்தகாலத்தினை முறிக்கமுடியாத அறிவுத்திறனால் அறியமுடிந்தது. இதுவே, வரலாற்றின் பொதுப் பார்வையாகவும் அணுகவைத்தது. வரலாற்றாய்வு அவருக்கு அறிவுத்திரட்சியாகவும் மனித நடவடிக்கைகளைப் புரிந்துகொள்ளவும் உதவியது.

1950 களில் SOAS (School of Oriental and African Studies) இல் இளங்கலைப்படிப்பினை மேற்கொண்டிருந்தபோது இலண்டன் பல்கலைக்கழகத்தின் Birkback College இவரின் political theory பற்றியும் EricHobsbawm அவர்களின் உரைகளையும் கேட்கவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டேன். தொடக்கத்தில் சில உரைகள் utopian பற்றியும் அறிவியல்பூர்வமான socialism பற்றியும் இருந்தன. அவை அமைதியாக மனத்தினை அதிரவைத்தன. பல தொடர் சிந்தனைகளைப் பற்றவைத்தன. அவ்வுரைகள் கற்பதனை ஒரு பாடத்தில் எல்லையின் விளிம்பு வரை விரிந்து படரவைத்தது. அவரிடம் உரையாடுவதற்கு ஆர்வமானேன். மெல்ல மெல்ல நாங்கள் சில மாணவர்கள் Birkback காபி நிலையத்தில் அவரை சூழ்ந்துகொண்டு பேசினோம்.

**விரியும் பார்வை**

1939 இல் வியன்னாவிலிருந்து புலம்பெயர்ந்து இலண்டன் வந்த மாணவர்கள் சிலரை அறிந்தேன். அவர்கள் அவரை நன்கு அறிந்திருந்தனர். அம்மாணவர்கள் மூலமாக எரிக்ஹாப்ஸ்பாமை சந்தித்தபின் அய்ரோப்பாவை புதிய கோணத்தில் அறியமுடிந்தது. வியன்னா, அய்ரோப்பாவின்

சிந்தனை மையம் என்றும் உணர முடிந்தது. அது பிரஞ்ச், ஜெர்மன் (French, German) சிந்தனைகளோடு தொடர்புடையது. அதில், பிரிட்டிஷாரின் அறிவு மட்டும் கலந்திருக்கவில்லை. நான் இந்தியாவில் படைத்துறைப் பண்பாடு கொண்ட குடும்பப்பின்னணியில் (Cantonment Culture) வளர்ந்தேன். இந்திய மரபினை அறிந்திராத மாணவர் கூட்டத்தில் அய்ரோப்பிய மரபினை நன்கறிந்தவள். ஹாப்ஸ்பாம் தீர்க்கமாக மத்திய அய்ரோப்பிய அறிவுப்பின்புலத்தில் இருந்து வந்தவர். இது, அவருக்கு விசாலமான அறிவுப்பார்வையினைத் தந்தது. அவர், ஒருமுறை பிரிட்டிஷாரின் மார்க்சிய சிந்தனை, சமூக-அறிவியல்களை (social sciences) மையமிட்டிருந்தது என்றும், அய்ரோப்பிய மார்க்சிய சிந்தனை ஒப்பீட்டளவில் பண்பாட்டினையும், தத்துவத்தினையும் கேள்வி கேட்பதற்கு வாய்ப்பளித்தது என்றும் கூறினார்.

அவருடைய இளமைக்காலம் நாடுவிட்டு நாடு புலம்பெயர்வதாக இருந்தது. அவரின் தந்தை ஒரு பிரித்தானிய யூதர், தாய் மத்திய அய்ரோப்பாவைச் சேர்ந்தவர். அவர்கள் அலெக்ஸாண்ட்ரியாவில் (Alexandria) இருந்தபோது ஹாப்ஸ்பாம் பிறந்தார். பள்ளிக்கல்வியினை வியன்னாவிலும், பெர்லினிலும் தொடர்ந்து இங்கிலாந்திலும் முடித்தார். அப்போது, யூதர்கள் ஜெர்மனியில் வாழ்வது சிக்கலாக இருந்தது. பெர்லினில் வாழ்ந்தபோது நாஜிகளின் பாசிசத் தன்மையினை அறிந்திருந்தார். நாஜிகள், யூதர்களுக்கு எதிரான கொள்கைகளை மட்டுமன்று குடிமக்களின் உரிமைகளையும் மறுத்தனர். ஒரு கம்யூனிசவாதியாக நாஜிகளுக்கு எதிரான மாற்று, சோசலிசத்தில் இருப்பதாக உணர்ந்தார். வாழ்க்கை நெடுக இக்கொள்கையில் உறுதியாக இருந்தார். 1956 இல் கிரேட்-பிரிட்டனின் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகியபோது விமர்சிக்கப்பட்டார். அப்போதுதான் சோவியத் ஒன்றியம் ஹங்கேரியில் (Hungary) போராட்டத்தினை ஒடுக்கியது. ஆய்வு உதவித்தொகையுடன் கேம்ப்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டபோது இளம் வரலாற்று ஆசிரியர்களின் அறிமுகம் கிடைத்தது. அவர்கள் மார்க்கியத்தினை ஆய்வதில் முனைப்புடன் இருந்தனர். அவர்கள், புதிய சமூக-பொருளாதார வரலாற்றினை வரலாற்று ஆர்வலர்க்கு அறிமுகப்படுத்தினர். அரசியல்-ராஜதந்திர வரலாற்றிலிருந்து விலகியிருந்தனர். அவர்கள், தம்மை பிரிட்டிஷ் வரலாற்றுக்குழு என்று அழைத்துக்கொண்டனர். இதில் Christopher Hill, Rodney Hilton, Gorge Rude, E.P.Thompson, Raphael Samuel) என்று பலரும் இடம்பெற்றிருந்தனர். இக்குழு பிரிட்டிஷ் வரலாற்றை பகுப்பாய்வு செய்து அதனை தலைகீழாக மாற்றிற்று. வர்க்க உணர்வு, சொத்து உறவுகள், சமய நம்பிக்கை, சமய அறிவு, படிப்பு, அவை சமூகத்தில் இயங்கும்முறை போன்றவற்றை ஆய்ந்தனர். இந்த ஆய்வுமுறை புதிய உருபெற்றது. ஹாப்ஸ்பாம் ஆர்வமிக்க ஆய்வுக்குழுவில் இணைந்தார். அக்குழு, புதிய புதிய கருத்துகளை ஆய்ந்து எடுத்தது. அவர்கள் தம்மை Apostles என்று கருதிக்கொண்டனர். தங்களை Ludwig Wittgenstein, Betrand Russell, J.M.Keynes, E.M.Foster போன்றோருடன் இணைத்தனர். அதேநேரத்தில் கேம்ப்பிரிட்ஜ்ஜில் இன்னோர் அறிவுக்குழு உருவானது. Anthony Blunt ம் இன்னும் பிறரும் சோவியத் உளவாளிகள் என்று கருதப்பட்டனர். பிரிடிஷ் வரலாற்று ஆசிரியர் மிகவும் சுதந்திரமாக இயங்குகிறார்கள் என்று சோவியத் யூனியன் கருதியது.

**ஒரு புதிய வரலாறு**

1952இல் பிரிட்டிஷ் வரலாற்று ஆய்வுக்குழு Past and Present என்ற ஆய்விதழைத் தொடங்கினர். நவீனத்துவ வரலாற்று ஆசிரியர்கள் இவ்விதழைத் தங்கள் கருத்துகளை வெளியிடுவதற்கு பயன்படுத்தினர். இவ்விதழ் பரந்த வாசிப்புத்தளத்தினைப் பெற்றது. இவ்விதழ் மார்க்சியம் பற்றி எழுந்த பலவகையான கருத்துகளுக்கும் இடமளித்தது. அது தொடர்பான பகுப்பாய்விற்கும், மறுசிந்தனைக்கும் இடம் தந்தது. இப்பார்வை, வரலாற்றினை பிற சமூக-அறிவியல்களுடன் இணைத்தது. அடுத்தடுத்து வந்த ஆண்டுகளில் புதியவகை சிந்தனையுடன் வரலாற்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இவ்விதழைத் தொடங்கியவர்கள் அனைவருமே உடனடியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அங்கு, தவிர்க்கவியலாமல் சில முரண்பாடுகள் எழுந்தன. அதாவது, வரலாறு என்பது கடந்த காலத்தினை பெருமளவில் விவரிப்பதா? அல்லது விளக்குவதா? அல்லது பின்நவீனத்துவம் உருவாக்கிய மாற்றத்தினை வரலாற்றோடு சேர்த்து எழுதுவதா? என்பது. ஹாப்ஸ்பாமின் இந்த விமர்சனத்திற்கு இவ்விதழின் குழுவினர் கேள்வி கேட்கவுமில்லை; விளக்கவுமில்லை. இதுவே, அவரின் அடிப்படை வரலாற்று ஆய்வுமுறையாக அமைந்தது. அந்த ஆய்விதழ் பல விவாதத்தினை உருவாக்கியது. அவர்கள், வரலாற்றில் ஒப்பாய்வு செய்து கட்டுரைகளை வெளியிட்டனர். அய்ரோப்பா அல்லாத நாடுகளின் வரலாற்றையும் ஆய்வு செய்தனர். நான் முனைவர் பட்டத்து ஆய்வினை முடித்தவுடன் அவ்விதழில் அய்ரோப்பா பற்றி என் கட்டுரையொன்று வெளியானது.

இவ்விதழின் வரலாற்றுக்குழுவினரும், பிற அறிஞர்களான Richard Dobb, Keith Thomas போன்றோரும் தில்லி பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிறுவனங்களில் சமூக-பொருளியல் வரலாற்றினை அறிமுகப்படுத்துவதற்கு ஆதரவளித்தனர். அவர்கள் ஒவ்வொருவராக 1960 களிலும் 1970களிலும் இந்தியாவிற்கு உரையாற்றுவதற்கு வந்தனர்.

விவாதத்திலும் கலந்து கொண்டனர். அது வரலாற்றினை புதிதாக மாற்றி எழுதும் மையமாக இடம்பெற்றது. அந்தக் காலத்தில்தான் இந்தியவரலாறு குறிப்பாக நவீனகாலத்திற்கு முந்தைய இந்தியா மெல்ல மெல்ல இந்தியவியல் என்ற இறுக்கத்திலிருந்து விலகி சமூக-அறிவியல் என்ற பாடமாக மாறியது.

தொடக்கத்திலிருந்து ஹாப்ஸ்பாமின் வெளியீடுகளை படித்து அறிந்தவர்கள் அவரை நவீன அய்ரோப்பாவின் மிகச்சிறந்த வரலாற்று ஆசிரியர் என்பதனை அறிவர். இது, ஒரு மார்க்சிய வரலாற்று ஆசிரியருக்குக் கிடைத்த பெருவெற்றி. இதனை சரிவரப் புரிந்துகொள்ளாதவர்கள் மார்க்சியம் என்ன சாதித்தது என்பதனை அறியாமல் நிராகரிக்க முயல்கின்றனர். புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் மார்க்சியர்கள் பணியமர்த்தப்படும்போது சில சிக்கல்கள் எழும். USA விலிருந்து McCarthyism போன்றவையாலும் பனிப்போரினாலும் இதுபோன்ற விளைவுகள் எழும். ஹாப்ஸ்பாம் Birkback College பணியமர்த்தப்பட்டார். அங்கேயே கடைசிவரை பணியாற்றினார். அது பல்துறை கலந்த (inter-disciplinary) ஆய்விற்கு உகந்த மையமாக இருந்தது. இப்போக்கு பிரித்தானிய கல்வியாளர்களுக்கு புதிய வரவு. அங்கு பணிபுரிந்த J.D.Burnell போன்ற மார்க்சியவாதிகளின் கொள்கைகள் முன்னெடுக்கப்பட்டன. JBS Haldane, L.Hogben, Joseph Needham போன்றவர்கள் அங்கு அடிக்கடி கூடினர்.

**அறிவின் உழைப்பு**

ஹாப்ஸ்பாம் ஒரு நவீன காலத்தின் வரலாற்று ஆசிரியராக பல நூல்களை எழுதினார். அவற்றுள் சில: *The Age of Revolution (1789-1848), The Age of Capital 91848-1875), The Age of Empire (1875-1914), The Age of Extremes (1914-1991), Primitive Rebels, Bandits, On History, Nations and Nationalism, Interesting Times: A Twentieth Century Life, How to Change the World, Fractured Times. Uncommon People: Resistance, Rebellion and Jazz.*

அந்நூல்கள் வெவ்வேறு கருத்தியல் குழுக்களைத் தாண்டி சமூகத்தின் கட்டமைப்புகளை ஆழமாக விளக்குகிறது என்றும் வரலாற்று மாற்றங்களின் இயல்புகளை விளக்குகிறது என்றும் உணரப்பட்டன. அது அரசியல் குறைபாடாக (political weakness) காணப்படவில்லை. இதுபோன்ற வரலாற்று ஆய்வில் ஆசியாவின் வரலாற்று நிகழ்வுகள் குறைவாகவே பேசப்பட்டன. USSRஇல் ஸ்டாலினிச நடவடிக்கைகளை பூசிமெழுகினர் என்று மீண்டும் மீண்டும் குற்றம் சாட்டாப்பட்டார்; சீனத்தினை ஏற்கவில்லை என்றும் சொல்லப்பட்டார். ஆனால், அக்காலத்தில் தம் கட்டுரைகளில் ஸ்டாலினிசத்தினை வெகுவாக விமர்சித்தார். மேலே சொல்லப்பட்ட நூல்கள் தவிர இன்னும் சில நூல்களை எழுதினார். தொடக்கத்தில் இடைநிலை சமூகம் (Fabien society) பற்றி ஆய்வு செய்தவர் அடுத்து கூலிகளின் இயக்கங்களை ஆய்ந்தனர் (Labours'Turning Point, 1948). அடுத்து புதிய வரலாற்று சான்றுகளைத் தேடினர். வாய்மொழித் தரவுளையும் ஆவணக்காப்பகங்களில் கிடைத்த தரவுகளையும் சான்றாகக்கொண்டு வேளாண்குடிகளின் போராட்டம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டார். சிசிலி, ஸ்பெயின், இங்கிலாந்து போன்ற இடங்களில் நிகழ்ந்த வேளாண்குடிகளின் போராட்டங்களும் இவ்வாறு ஆராயப்பட்டன. இதனடிப்படையில், இரு நூல்கள் வெளியிடப்பட்டு உலக அளவில் வரவேற்பினை பெற்றன (Primitive Rebels, 1959;Bandits,1969). இவ்வாய்வுகள் ஊரகப்புறங்களில் இரகசியமாக செயற்பட்ட இயக்கங்கள் பற்றிய ஆய்வுகளைத் தூண்டியது. பெரிய அளவில் வரவேற்பினைப் பெற்றது. இதுபோன்ற இரகசியமான இயக்கங்கள் உலகின் பல பாகங்களில் முதலாளித்துவம் தலையெடுத்தபோது அதற்கான எதிர்ப்பியக்கமாக உருப்பெற்றது என்று ஹாப்ஸ்பாம் வாதிட்டார். இதுபோன்ற இயக்கங்கள் வரலாற்றின் தொடக்ககாலத்திலும் செயற்பட்டன. சமூகக் கொள்ளையர் என்ற கருத்தியல் இன்றைய இந்திய வரலாற்றாசிரியர்களிடத்தில் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில் வாய்மொழி இலக்கியங்கள் அணுகப்படும்போது புதுமாதிரியான தரவுகள் கிடைக்கின்றன. 18 ஆம் நூற்றாண்டின் வரலாற்றிற்கு இது பெரிதும் பொருந்தும். இது போன்ற இயக்கங்கள் இன்றைக்கும் மக்கள் நடமாட்டமில்லாத தொலைதூரங்களில் இயங்குகின்றன. Terence Renga என்பவருடன் இணைந்து 1982 இல் The Invention of Tradition என்ற தலைப்பில் பல அறிஞர்களின் கட்டுரைகளைத் தொகுத்து ஒருநூலினை வெளியிட்டார். அந்நூலின், நீண்ட முன்னுரையில் மரபு என்பது சமூக அடையாளம் என்று வாதிட்டார். என்றபோதும், மரபுகள் மாறிக்கொண்டே வந்தன என்பதும் அறியப்பட்டது. இன்றைய அரசியல் இயக்கங்கள் பழைய மரபுகளில் இருந்து தம் இருப்புக்களுக்கான அடையாளத்திற்கு அறிந்தேற்பினைப் பெறத்துடிக்கின்றன. இப்பார்வை Max Weber இன் கருத்தோடு ஒத்துப்போகிறது. காலத்தேவைக்கு ஏற்ப இந்த அறிந்தேற்பின் வடிவம் மாறும். பண்டைய காலத்தில் இருந்தே இம்மரபு தொடர்வதாக கருதிக் கொள்ளப்படும். இன்றைக்கு சில வரலாற்றாசிரியர்கள் மரபுகள் தாமே உருவானவை என்றும் மாறாமல் தொடர்வது என்றும் வாதிடுகின்றனர். அவை எப்படி? ஏன்? எழுந்தன என்பது பற்றியும் விளக்குகின்றன. அவர்களே அம்மரபுகளை உருவாக்குகின்றனர். ஆனால், அவற்றின் நோக்கமென்ன? இந்நூல், மரபு பற்றிய விவாதத்தினை கூர்மையாக்குகிறது.

**அரசியல் வரலாற்றாசிரியர்**

ஹாப்ஸ்பாமின் பல கட்டுரைகள் தொகுக்கப்பட்டு 1997 இல் On History என்ற நூலாக வெளியிடப்பட்டது. ஒரு சில கட்டுரைகள்

விரிவாகவும் மிக ஆழமாகவும் அமைந்தன. பெருமளவில் தாக்கத்தினை ஏற்படுத்தின. Nations and Nationalism என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையில் தேசியமும் வரலாறும் என்ற கருத்து பிரதானமானது. அதன் சாரம் நல்ல உரையாடலுக்கு இட்டுச்சென்றது. தேசியவாதிகளுக்கு அல்லது இனவாதிகளுக்கு அல்லது அடிப்படைவாத கருத்தியலாளர்களுக்கு வரலாறு ஒரு வாகான பொருளாக அமைகிறது. பாப்பிச்செடிகள் ஹெராயின் போதைப்பொருள் செய்வதற்குப் பயன்படுத்தப்படுவதைப் போன்று. மேற்சொல்லப்பட்ட கருத்தியல்களுக்கு கடந்தகாலம் என்பது முக்கியமான பொருளாக உள்ளது. அதற்குச் சாதகமாக கடந்தகாலம் இல்லையாயின் இவர்கள் தமக்குச் சாதகமான கடந்த காலத்தினை உருவாக்குகின்றனர். இவ்வுருவாக்கத்திற்குச் சான்றாக Mortimer Wheeler எழுதிய Five Thousand Years of Pakistan என்ற நூலினை அடையாளம் காட்டுகின்றனர். 5000 ஆண்டுகளைவிட 46 என்ற எண் பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தும். இதற்கு இன்னொரு சான்று Babri Masjid மீதான வாதம். 2004 இல் New York கொலம்பிய பல்கலையில் BabriMasjid பற்றி தெளிவாக உரையாற்றினார். புனைவு சமூக நினைவாக (social memories) உரிமை கொண்டாடப்படுகிறது. புனைவு, என்ன நிகழ்ந்ததோ அதற்காக கட்டமைக்கப்படவில்லை; நிகழாத ஒன்றிற்கு கட்டமைக்கப்படுகிறது.

தேசியம் வரலாற்றாசிரியர்களை அரசியல் நடிகர்களாக மாற்றுகிறது என்கிறார். புனைவுகளுக்கு எதிரான கருத்துகளும் முன்வைக்கப்படுகின்றன. ஆனால், அவற்றை கேட்பவர் மிகச்சிலரே. இங்கு இதுபோன்ற விவாதம் வழிந்தோடி பாடநூல்களில் கருத்துமோதலை உருவாக்குகிறது. இப்போக்கு தற்போது பிற பாடநூல்களிலும் பிரதிபலிக்கிறது. தேசியம், பண்பாட்டு அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கும் இட்டுச்சென்றது; தேசிய அடையாளம் (identity nationalism) என்ற கருத்தினையும் உருவாக்கியது. இது ஒரு குறிப்பிட்ட ஒரு சமூகத்தின்/ஜாதியின் அடையாளத்தையும் உருவாக்கியது. இதனால், இதுபோன்ற அடையாள அரசியல் வரலாற்றுப் பிழையில் முடியும்; தவறாகும், தவிர்க்கப்பட வேண்டியதாகும். இதுபோன்ற வாதங்களில் மெய்மைக்கும், பொய்மைக்கும் இடையிலான சண்டையில் உரிய சான்றுகளின் வலிமையை உறுதி செய்யவேண்டும். இங்கு வரலாற்றாசிரியர் புனைவின் பொய்யினை உரிப்பவராக (myth slayer) இருக்கவேண்டும். பிரமாண்டத்திற்குள் வரலாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது வரலாற்று ஆசிரியர்களுக்கு முக்கியமானது. குறிப்பாக எப்போதும் இல்லாத அளவிற்கு இப்போது சந்தேகப்படும் ஆசிரியர்களுக்கு.

இதற்குமுன்பு வரலாற்றாசிரியர்கள் மார்க்சுக்கு என்ன கடன் பட்டுள்ளார்கள் என்ற கட்டுரையில் Ranke விற்கு பின்பு நூறாண்டுகளில் வரலாற்றியல் மாறியது என்றார். அம்மாற்றங்களை Arnold Momigliano என்பார் சற்று அழுத்தமாக சொன்னார் என்று ஹாப்ஸ்பாம் குறிப்பிடுகிறார். அந்த மாற்றங்கள் சமூக-பொருளியல் வரலாற்றினை நோக்கியது என்றும் சமூக சக்திகள் (social force) என்பது மாற்றத்தின் வெளிப்பாடு, வர்க்க உணர்வின் வெளிப்பாடு என்றும் அறியப்பட்டது. வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்பது பொருளியலாளர் மட்டுமே நிர்ணயிப்பது என்போரை ஹாப்ஸ்பாம் கடிந்தார் (historical materialism as economic determinism). இது தூய்மையான மார்க்சியமன்று என்றார். Historical materialism த்தில் இவர் சில கூறுகளை முன்வைத்தார். அவை: தொழில்நுட்பக்கருவிகள், அடித்தளம்-மேற்கட்டுமானம் பற்றிய நம்பிக்கை, வர்க்கப் போராட்டம், தவிர்க்கமுடியாத வரலாற்றுச் சம்பவங்கள் போன்றவை. 2011இல் வரலாற்று வரைவியல், பொதுகருத்தியல் தொடர்பான கட்டுரைகளை How to Change the World: Marx and Marxism 1840-2011 என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டார். இதில் மற்றோர் நூலிற்கான (Pre-Capitalistic Economics) முன்னுரையும் இடம் பெற்றது. இக்கட்டுரைகள் உற்பத்தி முறை பற்றிய என் புரிதல்களை தெளிவாக்கின. வரலாற்று வளர்ச்சியின் சகாப்தங்களில் உற்பத்தி முறை பற்றிய மார்க்சின் ஆய்வுகளில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் பேசினார் இல்லை. பல இடங்களில் மார்க்சும் ஏங்கல்சும் உற்பத்திமுறை பற்றிய விவாதங்களை மறுபரிசீலனை செய்தனர், தெளிவாக்கினர். சமூகத்தின் வெவ்வேறு வளையத்திற்குள் இருக்கும் மக்கள்கூட்டம் வெவ்வேறு வேகத்தில் ஒரே ஏணியில் படிப்படியாக ஏறினர் என்று மார்க்சும் ஏங்கல்சும் சொல்லவில்லை.

ஹாப்ஸ்பாம் Asiatic Mode of Production என்ற கருத்தினை நிராகரிக்கிறார். இவ்விவாதத்தில் Karl Agustus Wittfogel கருத்தினை குறிப்பிடுகிறார். சீனத்து கம்யூனிஸ்ட் கட்சியினர் பற்றியும் Asiatic Mode of Production பற்றியும் கருத்தினை குறிப்பிடுகிறார். இதனை சோவியத்துக்கள் விலக்கியும் சேர்த்தும் தம் ஆய்வுகளில் பதித்தனர் என்றும் கூறுகிறார். ஒருகட்டத்தில் E.M.Sankaran Namboodiripad, D.D.Kosambi பற்றியும் பேசுகிறார். Japan முதல் USA வரையிலான நிலமானியமுறை, முதலாளித்துவ முறைக்கு மாறிவந்தது பற்றி நிகழ்ந்த புகழ்பெற்ற வாதம் பற்றி நிறைய பேசுகிறார். அவரின் கூற்றுப்படி வரலாற்றுப் பொருள்வாதம் என்பது உற்பத்திமுறை அடுத்தடுத்து மாறிவருவதுதான். ஆனால், அது முன்கூட்டியே நிர்மாணிக்கப் பட்டதன்று. அது, எப்படிப்பட்டதாக இருந்தாலும் சான்றுகளில் உறுதிசெய்யப்பட வேண்டும். வெவ்வேறு உற்பத்திமுறை பற்றி இலகுவாக வாதிடுகையில் சில மார்க்சியர்கள் நவீனகாலத்திற்கு முந்தைய

*சமூகத்தினை ஆய்ந்தனர். அவர்களுள் Emmanual Terray, Geoffrey-de-ste-Cox போன்றோர் தொடக்கத்திலிருந்தே சமூகம் பற்றி ஆய்ந்தனர்.*

**ஹாப்ஸ்பாம் எடுத்த நிலை**

*ஹாப்ஸ்பாமின் அறிவினைத் தூண்டும் கட்டுரைத் தொகுப்புகளில் 1800 முதல் 2000 வரை அய்ரோப்பாவில் மார்க்சிய தாக்கம் பற்றியவை. அவற்றுள் மிகவும் ஆர்வம் தரக்கூடிய ஒன்று பாசிசத்திற்கு எதிரான கட்டுரை. அதில் புலம்பெயர்ந்த அறிவுஜீவிகளின் தாக்கம் பற்றியும் இடதுசாரிகள் பெருகியது பற்றியதுமாகும். இப்போக்கு அய்ரோப்பாவின் பண்பாட்டிற்கும் சிந்தனைக்கும் புதிய போக்கினைத் தந்தது. அதேநேரத்தில் இடதுசாரிகள் புறக்கணிக்கப்பட்டது பற்றியும் பேசுகிறார். ஆனால், இக்கருத்து மென்மையான குரலில் ஒலிக்கிறது. யதார்த்த சோசலிசம் சோவியத் யூனியனில் இல்லையெனினும் அதனை அந்நாடு கொண்டாடுகிறது என்றும் கூறினார். சோவியத் ஏற்கவில்லையெனினும் ஜாஸ் பண்பாடு உருவானது என்றார். ஹாப்ஸ்பாமின் பண்பாடு பற்றிய புரிதல் சோவியத்துக்களின் விளக்கத்திற்கு நேர் மாறானது. அவர் இந்தியாவில் கிடைத்த சிறு சிறு ஓவியங்களை (அதனை 1950 களில் கிடைத்த விலைக்கு வெவ்வேறு சந்தைகளில் வாங்கி) சேகரித்தார். அடுத்தடுத்த ஆண்டுகளில் அவற்றினை விலைப் பட்டியல் காரணமாக வாங்க இயலவில்லை என்று வருந்தினார். கண்காட்சிகளில் மட்டுமே காணமுடிந்தது என்றார்.*

*பிரிட்டனில் மாணவராயிருந்தபோது ஜாஸ் இசையில் ஆர்வம் கொண்டிருந்தார். Francis Newton என்ற புனைபெயரில் New Statesman என்ற பத்திரிகைக்கு ஜாஸ் இசை பற்றி விமர்சனக் கட்டுரைகள் எழுதினார்.*

*இருபதாம் நூற்றாண்டின் மார்க்சியம் அதற்கு முந்தைய காலகட்டத்திலிருந்து வேறுபட்டது. பாசிசத்திற்கு எதிரான பார்வை கொண்டது என்பதனை இங்கு குறிப்பிடவேண்டும் 1960களில் இருந்து மார்க்சியர்கள் பெருமளவில் சந்தைப்படுத்தப்பட்ட மார்க்சியத்தோடு தொடர்பு கொண்டிருந்தனர். அடிப்படையில் மார்க்சிய பகுப்பாய்வினை மறுசிந்தனைக்கு உட்படுத்தவேண்டிய தேவை இருந்தது. அது எப்போது சாத்தியப்படும் என்றால் படிமமாக்கப்பட்ட பழமைவாத மார்க்சியம் சோவியத்யூனியனில் உடைபடும்போது. அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்கள் அறிவியல்பூர்வமான கருத்துகளை புறந்தள்ளாதபோது. இதுபோன்ற கருத்தியல் பின்னணியில் 1963இல் இலண்டனில் Dialectics of Liberation Conference என்ற தலைப்பில் ஒரு கூட்டம் நடந்தது. அதில் அறிஞர்கள் ஒருவருக்கொருவர் பேசினர். பலவகை கருத்துகளுக்கான வாய்ப்புகள் சாத்தியமே. இப்போக்கினை ஹாப்ஸ்பாம் முக்கிய முதலாளிய நாடுகளில் ஏற்பட்ட அதிர்வலை என்கிறார். ஆனால், இதுபோன்ற முயற்சிகள் முதலாளியத்தினையும் பாசிசத்தினையும் ஓரளவிற்குதான் பாதிக்கும். பல/கூட்டு கருத்துகள் ஓரளவிற்கு வரலாற்றுநிலையில் மாற்றத்தினை ஏற்படுத்தின. இவரின் வாழ்க்கை நினைவலைகள் 2000இல் Interesting Times என்ற தலைப்பில் நூலாக வெளிவந்தது. இத்தலைப்பு பழைய சீனத்து சொலவடையில் இருந்து பெறப்பட்டது என்று கூறினார். நீங்கள் ஒருவரை சபிக்கவேண்டுமெனில் ஆர்வத்துடன், அவர் வாழவேண்டும் என்று வாழ்த்துங்கள் என்பது அச்சொலவடை. இந்நூல் ஹாப்ஸ்பாமை வரலாற்றாய்வாளர், மார்க்சியவாதி என்ற நிலையிலிருநது வேறுவழிக்குத் திருப்பியது. அதாவது அவர் British Labour Party இன் Neil Kinnock என்பவருக்கும் Brazil இன் Lulu-da-Silava என்பவருக்கும் அறிவுரை வழங்கினார். அது, சில தாக்கங்களை ஏற்படுத்தியது. பல இடங்களில் இருந்தும் சிந்தனையாளர்கள் நட்பு வட்டாரத்தில் இணைந்தனர். அவரின் வீட்டிற்கு விருந்தாளியாக செல்பவர்கள் ஆச்சர்யமடைவர்.*

*கிரேட் பிரிட்டனின் கம்யூனிச கட்சி அவருடைய கருத்துகளையும் அவரையும் விலக்கி வைத்தது. அவருடைய சிந்தனை இத்தாலிய கம்யூனிஸிட் கட்சியால் தூண்டப்பட்டிருந்தது. எனவே, அவர் அய்ரோப்பியத்தின் கம்யூனிசவாதியானார். தேவையான நேரங்களில் வெவ்வேறு கம்யூனிஸ்ட் கட்சிகளின் மீதான மாற்றுக்கருத்தினை வரலாற்று எழுத்துகளில் முன்வைக்கும்போது ஹாப்ஸ்பாம் தயங்கியதில்லை. இதனாலேயே அவருடைய வரலாற்று ஆய்வு சிறப்பாக அமைந்தது. தாம் Communist Party of Great Britain இல் இயங்கியது பற்றி கூறுகையில் அது ஸ்டாலினிசத்தினை முன்மொழிவதன்று. October Revolution சத்திய பிரமாணங்களை உயர்த்திப் பிடிப்பதாகும் என்றார். ஆனால், அது ஒரு நிறவேறா கனவு. 2009 இல் சோசலிசம் தோற்றது என்றும் முதலாளித்துவம் திவாலானது என்றும் கூறினார். அடுத்து என்ன என்ற கேள்வியினையும் முன்வைத்தார். இறுதியாக அவருடைய வரலாற்று எழுத்துகள் உலகினை மாற்றவில்லை. ஆனால், அவை இவ்வுலகினைப் புரிந்துகொள்ளவுதவும்.*

*Source: Economic and Political Weekly,Vol.46.Nov.11,2012*

●


மொழிபெயர்ப்பாளர்கள்,

கி.இரா. சங்கரன், தகைசால் பேராசிரியர், கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல்துறை,

இரா.ஆனந்தகுமார், தகைசால் துணை விரிவுரையாளர், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் நாகர்கோவில் கிளையின் சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சிகள்

02.09.2023 அன்று நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நாகர்கோவில் மற்றும் *St.Jude's hi-Tech School (CBSE)* இணைந்து நடத்திய புத்தகக் கண்காட்சியை பள்ளி முதல்வர் திருமதி ப்ரியா ஜெனிபர் அவர்கள் திறந்து வைத்தார். இதில் மொழிபெயர்ப்பாளர் ஜீன் சார்த்தர் மற்றும் நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.





15.09.2023 அன்று நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நாகர்கோவில் மற்றும் *NANJIL CATHOLIC SCHOOL (CBSE)* வழுதலம்பள்ளம் இணைந்து நடத்திய புத்தகக் கண்காட்சியை பள்ளியின் தாளாளர் அருட்பணி மரியவின்செண்ட் அவர்கள் திறந்து வைத்தார். இதில் வரலாற்றறிஞர் பேரா.அ.கா.பெருமாள் மற்றும் நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

22.09.2023 அன்று நாகர்கோவில் ஹோலிகிராஸ் கல்லூரியில் தமிழக வரலாறு கூடுகை நடத்திய 30 ஆவது ஆண்டு அமர்வு நிகழ்வில் கல்லூரி நூலகத்துறை மற்றும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் இணைந்து நடத்திய புத்தகக் கண்காட்சியை எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளருமான புதுச்சேரி கி.இளங்கோவன் அவர்கள் துவக்கி வைத்தார். இதில் ஹோலிகிராஸ் கல்லூரி நூலகர் முனைவர். வி.ஜெயகலா மற்றும் நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.





24.09.2023 அன்று கன்னியாகுமரி பள்ளம் தூய மத்தேயு ஆலய விழா கொண்டாட்டத்தின் பத்தாம் நாள் திருவிழாவில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புத்தகக் கண்காட்சியை அருட்பணி சகாய ஆன்றணி அவர்கள் துவக்கி வைத்தார். இதில் எழுத்தாளர் குறும்பனை சி.பெர்லின், கவிஞர் சப்திகா, மொழிபெயர்ப்பாளர் ஜீன் சார்த்தர் மற்றும் நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



கட்டுரை

# ஒரு பண்பாட்டின் பயணம்: சிந்து முதல் வைகை வரை

## ஒரு நெடும்பயணம்

முனைவர் ஏ.இராஜலட்சுமி,

வரலாற்று எழுதியல் என்பது சுவையாக, சுவாரசியமாக இருக்கலாம். அதற்கான தரவுகளைக் கண்டடையும் தேடல் என்பது மிக நீளமானது. மிகக் கடினமானது. அந்த வகையில் ஆட்சியராகப் பணியாற்றி தற்போது ஓய்வுபெற்றுள்ள திரு.ஆர். பாலகிருஷ்ணன் அவர்களால் எழுதப்பட்டுள்ள ஆய்வு நூல் "ஒரு பண்பாட்டின் பயணம்: சிந்து முதல் வைகை வரை". சிந்துவெளிப் பண்பாட்டினைக் கண்டறிந்த 1924 முதல், பல்வேறு ஆய்வறிஞர்களால் சிந்துவெளிப் பண்பாடு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இப்பண்பாட்டின் வேரினைத் துல்லியமாகக் கண்டறியும் பெரும் சவாலை முன்வைத்து பயணித்த இவ்வாய்வாளர் அதனை வெற்றிகரமாக நிறைவும் செய்துள்ளார். தமிழ் இலக்கியம் படித்த இவ்வாய்வாளருக்கு சங்க இலக்கியம், இப்பண்பாட்டினை ஆராய பேருதவியாக இருந்துள்ளது. சிந்துவெளி குறித்து இதுவரை நடைபெற்ற ஆய்வுகள் அனைத்தையும் உள்வாங்கி பல்வேறு ஆய்வு உத்திகளைக் கையாண்டு நிகழ்த்தப்பெற்ற இவ்வாய்வு வரலாற்று ஆய்வுலகை திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

**வந்த தடம்: மனிதப் பயணத்தின் தொடக்கம்:**

மனித குலம் உலகில் எவ்வாறெல்லாம் மாற்றங்களைப் பெற்று வளர்ந்து ஹோமோ சேப்பியன்ஸ் (*Homo sapiens*) என்று மனிதர்களை அறிவியல் குறிப்பிடும் நிலைக்கு வந்தார்கள் என்பதைத் தரவுகளுடன் விளக்குகிறது இப்பகுதி. மனித குல தோற்றம், இடப்பெயர்வு உள்ளிட்டவற்றை விரிவாகப் பேசும் இப்பகுதி, சிந்துவெளி மக்கள் தென்னிந்தியா குறிப்பாக தமிழகம் நோக்கி வருகை புரிந்த வரலாற்றை சான்றுகளுடன் நிறுவுகிறது.

**வெண்கலக் காலம் : உலகின் பண்டைய பண்பாடுகள்:**

உலோகங்களின் பயன்பாடு என்பது நாகரிக மனித சமூகத்திற்கு எத்தகைய வளர்ச்சியை, வளத்தை வழங்கியது என்பதை பரக்கப் பேசுகிறது. குறிப்பாக மனித குலம் நாகரிகத்துடன் வாழத் தொடங்கிய காலத்தினை அந்தந்த நாகரிக சமூகத்தின் பெயர் கொண்டு வரலாற்று ஆய்வாளர்கள் அழைக்கின்றனர். அந்த வகையில் சுமேரிய நாகரிகம், எகிப்திய நாகரிகம் ஆகியவை மிகப் பழமையான நாகரிகங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன, இவற்றைத் தொடர்ந்து அடையாளம் பெறும் சிந்து வெளி நாகரிகப்

பகுதிகளான ஹரப்பாவிற்கும் மொகஞ்சதாரோவிற்கும் 700 கிலோ மீட்டர் அளவு இடைவெளி இருப்பினும் இவ்விரு இடங்களிலும் கிடைத்த அகழ்வாய்வுப் பொருட்கள் ஒத்த தன்மையுடன் இருக்கும் தன்மையை மிக நேர்த்தியாக இப்பகுதியில் சுட்டிக் காட்டியுள்ளார் இவ்வாய்வாளர்.

சிந்துவெளிப் பண்பாட்டுப் பகுதியில் கிடைக்கப்பெற்ற சுடுமண் பெண் சிற்பங்கள் தாய்த் தெய்வ வழிபாட்டின் அடையாளங்களாக இருக்கலாம் என்ற ஆசிரியரின் கருத்தாக்கம் இவ்வாய்வின் போக்கினை அடுத்தடுத்த நிலைக்கு நகர்த்த உதவியாக அமைந்துள்ளது.

**சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்**

திராவிட மொழிக் குடும்பம் அக்குடும்ப மொழிகளின் தனித்தன்மை, சிந்துவெளிப் பண்பாடு பரவியிருந்த நிலப்பரப்போடு திராவிட மொழிக் குடும்ப நிலப்பரப்பு ஒத்திருப்பது அதன் நீட்சியாக தமிழ் நிலப்பரப்போடு இச்சிந்தனை மீள் நினைவுக்கு ஆட்பட்டிருப்பது என்று சிந்து சமவெளி பண்பாட்டினைக் கண்டடைவதற்கான தரவுகளை அடுக்கடுக்காக முன்வைத்து மிகக் கவனமாக நிறுவியுள்ளார் ஆர்.பாலகிருஷ்ணன் அவர்கள். சிந்துவெளி பற்றிய ஆய்வுகளை முன்னெடுத்தவர்களின் கருதுகோள்களை முறையாக இப்பகுதி பேசுகிறது. சிந்துவெளி எழுத்துகள் ஆய்வாளர்களுக்கு இன்றும் புதிராக இருப்பதை முன்வைக்கும் அதேநேரத்தில் அப்பகுதிகளின் இடப்பெயர்கள், தனிமனிதர்களின் பெயர்களை சங்க இலக்கியச் சான்றுகளுடன் ஒப்பிட்டு வலிமையானத் தரவுகளை முன்வைத்துள்ளது.

**இடம்பெயரும் இடப்பெயர்கள்: பெயர்களின் பாதச்சுவடுகள்**

இந்தப் பெயரிடுதல் என்பது "மானுடம் எவ்வளவு தொன்மையானதோ, அவ்வளவு தொன்மையானது" (பக்.100) என்று குறிப்பிடும் இவர், பெயரிடுதல் எவ்வெவ் வகைகளில் அமைந்துள்ளன என்பதைத் தெளிவாக விளக்கியுள்ளார். ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு இடம்பெயரும் மக்கள் தங்களுடன் அந்த இடத்தின் பெயரையும் எவ்வாறு சுமந்து செல்கின்றனர் என்பதையும் அப்பெயரினைத் தாங்கள் குடிபுகும் பகுதிக்கு பெயராக இட்டு வழங்குவதையும் உலகளாவிய அளவில் பல்வேறு சான்றுகளுடன் நிறுவியுள்ளார் இந்நூலாசிரியர்.

பிரிட்டனிலிருந்து அமெரிக்காவிற்கு நிகழ்ந்த இடப்பெயர்வுகள் குறித்து சுவையான தகவல்களை இப்பகுதியில் காணமுடிகிறது. ஓஹையோவில் மட்டும் இரண்டு லண்டன்கள், அமெரிக்காவில் மொத்தம் 23 பாரிசுகள் என்று பல நாடுகளின் இடப்பெயர்கள் அம்மக்களோடு இடம்பெயர்ந்தது என்பதை இக்கட்டுரை மிக நுட்பமாகப் புலப்படுத்தியுள்ளது.

பண்டைய தமிழகமும் பழந்தமிழ் இலக்கியங்களும் தென்கோடியில் உறைந்துகிடக்கும் மீள் நினைவுகள்:

திராவிட மொழிக் குடும்பத்தின் தோற்றம், பரவல் என்ற இரண்டு புதிர் முடிச்சுகளுமே நமது வரலாற்றுக்கு முற்பட்ட தொன்மங்களோடு தொடர்புடையவை என்ற கருத்தினை வலிமையாக நிறுவியுள்ளார். பண்டைத் தமிழ்ச் சமூக வரலாறு என்பது பழந்தமிழ் இலக்கியங்கள் ஊடாக காணக் கிடைப்பதை சங்க இலக்கியம், தொல்காப்பியம் வழி தெளிவாக இப்பகுதி பேசுகிறது.

சங்க இலக்கியப் பாடல்களில் காணக்கிடைக்கும் பறவைகளையும், விலங்குகளையும் குறித்த பதிவுகளைப் பெரும் ஆதாரமாகக் கொண்டு அவை வாழ்ந்த நிலப்பரப்புகள் சார்ந்து இவ்வாய்வை அடுத்தக்கட்டத்திற்கு மிக அழகாக நகர்த்திச் சென்றுள்ளார்.

"தென்னிந்தியாவுக்கு மட்டுமே உரித்தான தாவர வகைகள், விலங்குகள் பற்றிய நுட்பமான தகவல்கள் எதுவும் வடமொழி இலக்கியங்களில் இல்லை" (பக்.151). இக்குறிப்பு இவ்வாய்வின் வீச்சினை கூடுதல் வலிமையாக்கியுள்ளது. தேக்குமரம் பற்றி வேத இலக்கியங்களில் ஒரு குறிப்பு கூட இல்லை. ஏனெனில் தேக்குமரம் வேதகால ஆரியர்கள் பார்த்திராத ஒரு மரம் என்று மேற்கூறிய கருத்தினை உறுதிப்படுத்தியுள்ளார் இவ்வாய்வாளர்.

**திராவிடக் கருதுகோளுக்குச் சான்றளிக்கும் சிந்துவெளி இடப்பெயர்கள்**

"திராவிடர்கள் சிந்துவெளிப் பகுதிகளில் வாழ்ந்தார்கள். அம்மக்களின் பண்பாடு சுமார் 3900 ஆண்டுகளுக்கு முன் நலிவடைந்தது என்றால், அப்பகுதியில் புழக்கத்தில் உள்ள சில இடப்பெயர்கள் அதற்குச் சாட்சியம் அளிக்கக்கூடும்" (பக்.161) என்ற கருத்தாக்கத்தினை முன்வைத்து இடப்பெயர்கள் பண்பாட்டோடு கொண்டிருக்கும் பிணைப்பினை மனித மனங்களோடு ஒட்டியிருக்கும் பான்மையினை அறிவியல் பூர்வமான தரவுகளோடும், அந்தந்த நிலப்பகுதிகளின் வரைபடங்களோடும் நிறுவுகின்றார்.


பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் பகுதிகளில் இன்றும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளின் பெயர்களில் இடப்பெயர்கள் வழக்கில் உள்ளதை பல லட்சம் பெயர்களுக்கிடையில் ஆய்ந்து கண்டறிந்திருப்பது சிந்துவெளி ஆய்வுலகிற்கு பெரும் வெளிச்சத்தினை பாய்ச்சியிருப்பதை மறுக்க முடியாது.

சங்க இலக்கியம் பரக்கப் பேசும் நன்னன், வேள்பாரி, அதியர், நள்ளி என்று ஒவ்வொரு குறுநிலத் தலைவர்களின் பின்புலமும், இலக்கியச் சான்றுடன் நின்று போகாமல் இன்று வழக்கிலுள்ள அவர்களின் பெயர்கள், அவர்களோடு தொடர்புடைய அடையாளங்கள் ஆகியவற்றை மிக ஆழமாகவும் ஆய்வுப்பூர்வமாகவும் சான்றுகளுடன் நிறுவியுள்ளார்.

இப்பெயர்களோடு கூடிய அவ்விடங்களை பெரும் உழைப்புடன் அடையாளப்படுத்தியுள்ளார் இவ்வாய்வாளர்.

சிந்துவெளி நகரங்களின் மேல் - மேற்கு, கீழ் - கிழக்கு, இருமைத்தன்மை: ஒரு திராவிடக் கருத்தியல்;

திராவிட மொழிகளில் மேல் - மேற்கு, கீழ் - கிழக்கு எனும் இருமைத் தன்மை காணப்படுவதை மொழியியல் கொண்டும், இலக்கியச் சான்றுகள் கொண்டும் தொல்தமிழ் கல்வெட்டு சான்றுகள் கொண்டும் இக்கட்டுரை தெளிவாக நிறுவியுள்ளது.




சிந்துவெளி நகரங்களின் முக்கியமான அடையாளங்களுள் ஒன்றாகக் குறிக்கும் கோட்டை பற்றிய குறிப்புகளைச் சங்க இலக்கிய சொல்லாடல்களூடாக பயணித்து பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், கிழக்கு ஈரானிய எல்லைப் பகுதிகள் மட்டுமன்றி இந்தியாவின் வட மாநிலங்கள் பலவற்றினூடாக கவனமாக தேடிக் கண்டடைந்துள்ளார் இந்நூலாசிரியர்.

**ஹரப்பா முதல் ஆடுகளம் வரை:**

சிந்துவெளியில் கோழிச் சண்டை நடைபெற்றதற்கான சான்றுகள் தொடங்கி ஆடுகளம் திரைப்படம் உட்பட அனைத்தையும் உள்ளிட்ட திராவிடப் பண்பாட்டின் அறுபடாத இழையைச் சுவையாக இப்பகுதி நமக்கு அடையாளம் காட்டியுள்ளது.

**திராவிடச் சிவப்பு : சிந்துவெளிப் பண்பாட்டின் நிறக்குறியீடு;**

தமிழ்க் கடவுளாகிய முருகனை சேயோன், செவ்வேள் என்றெல்லாம் அழைப்பதில் தொடங்கி, சிவப்பு நிறம் அவர்களின் பண்பாட்டின் தவிர்க்க முடியாத அங்கமாக இருந்ததை அடுக்கடுக்கான சான்றுகள் கொண்டு நிறுவப்பட்டுள்ளது. “பொருட்புலத்தில் வெளிப்படும் நிறக்குறியீடு ஒரு திட்டமிட்ட செயல்பாடு” (பக்.388). இந்தத் தொடர் புலப்படுத்தும் பொருளென்பது மேலோட்டமானது அன்று. கால, அரசியல், சமூக, பண்பாட்டுப் பின்புலத்துடன் இதனை ஒப்ப வைத்து நோக்க, திராவிடப் பண்பாட்டோடு இந்நிறம் கொண்டிருக்கும் உறவினை புரிந்துகொள்ளமுடிகிறது. சிந்துவெளி மக்களின் புழங்கு பொருட்கள், அவர்கள் உருவாக்கிய உருவங்கள், கட்டிடங்கள் என்று அனைத்தினூடாக இந்நிறம் இழையோடுவதையும், திராவிட மரபிலிருந்து முற்றிலும் மாறான மரபு ஆரிய மரபு என்பதனையும் அட்டவணை கொண்டும் குறியீடுகள் மூலமும் தெளிவுபடுத்தியுள்ளார் இவ்வாய்வாளர். சிந்துவெளி மக்களின் செங்கல் பயன்பாடு ஆரியர்களின் பண்பாட்டிலிருந்து வேறுபட்டது என்பதை மேன்மேலும் நிறுவியுள்ளது இப்பகுதி.

**திராவிட குஜராத்; வேளிரின் நெடுவாயில்;**

சங்க இலக்கியப் பாடல்களில் காணக்கிடைக்கும் ஒட்டகம் பற்றிய அரிய காட்சிகளையும், தொல்காப்பியம்-பொருளதிகாரத்தில் காணும் மரபுச் சொற்களில் ஒட்டகம் என்ற சொல் இடம்பெற்றுள்ளதைக் குறிப்பிட்டு பாலைவனத்தில் வாழும் இவ்விலங்கு குறித்தப் பதிவு செவ்விலக்கியத்தில் இடம்பெற்றதற்கான காரணங்களை ஆய்வுப்பூர்வமாக வெளிப்படுத்தியுள்ளார் இவ்வாய்வாளர். சங்க இலக்கிய நூல்களான அகநானூறோ, சிறுபாணாற்றுப்படையோ மிக இயல்பாக ஒட்டகம் பற்றிய சித்தரிப்புகளை முன்வைத்த பாங்கு இவ்வாய்வாளரை சிந்திக்கத் தூண்டியுள்ளது. அதனடிப்படையில் கூர்மையான இவரின் ஆய்வுப் பார்வை ‘திராவிட குஜராத்’ என்ற பொருண்மையை நுட்பமாக வெளிப்படுத்தியுள்ளது.

திராவிட மகாராஷ்டிரா : நன்னனின் பொன்நிலம் என்ற பொருண்மையில் இக்கட்டுரை அமைந்துள்ளது. “சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகிற பல்வேறு இடங்களின் பெயர்கள், குன்றுகளின் பெயர்கள், நதிகளின் பெயர்கள் மகாராஷ்ராவில் இன்று வரை எஞ்சியுள்ளன என்ற சான்றாதாரம் வியப்பை அளிக்கிறது” என்கிறார் ஆர்.பாலகிருஷ்ணன். இக்கருத்தினை மெய்ப்பிக்கும் அடுக்கடுக்கான தரவுகள் நம்மையும் பெரும் வியப்பில் ஆழ்த்திவிடுகிறது.

**கொங்கு மற்றும் நகரத்தார் மரபுகளில் காணக்கிடைக்கும் சிந்துவெளிச் சுவடுகள்;**

வணிகம், வேளாண்மை, புலம்பெயர்தல் போன்றவற்றோடு தொடர்புடைய இவர்களின் பண்பாட்டு இயங்கியலை பல்வேறு கோணங்களில் உறுதிப்படுத்தியுள்ளார் இந்நூலாசிரியர். இப்பொருண்மையின் தொடர்ச்சியாக இடம்பெறும் ‘நகரத்தார்’ வாழ்வியலை பல்வேறு ஆவணங்களோடு ஒப்பிட்டு விரிவாக விளக்கியுள்ளார். நகரத்தாரின் பயண வழிகளையும், அவர்களின் பண்பாட்டுத் தடங்களையும் இணைத்துப் பார்க்கும் அதே வேளையில் சங்க இலக்கியத்துடன் இவற்றை ஒப்பிட்டு காட்சிப்படுத்தியுள்ளார் இந்நூலாசிரியர்.



**சிலம்பு; திராவிடப் பெருவெளியில் தாய்த்தெய்வங்கள்**

சிந்து முதல் வைகை வரை எனும் ஆய்வுக் கட்டுரை சிந்துவெளி நிலப்பகுதி எங்கும் பரவியிருக்கும் கண்ணகி வழிபாட்டின் வீச்சினை பரக்கப் பேசுகிறது. சிந்து வெளிப் பகுதிகளில் காணக்கிடைக்கும் வழிபாட்டு முறைகளையும் அப்பகுதியில் வாழ்ந்த பெண்கள் சிலம்பு அணிந்தமையையும் சர் ஜான் மார்ஷல் அளித்துள்ள ஆவணங்களை மேற்கோள் காட்டி நிறுவியுள்ளார் இவ்வாய்வாளர். திராவிட நிலப்பகுதி எங்கும் புகார், மதுரை, வஞ்சி ஆகிய மூன்று இடங்களின் பெயர்கள் காணப்படுவதை தெளிவுபடுத்தியுள்ளார். கண்ணகி வழிபாட்டின் நீட்சியை இலக்கியத் தரவுகள், புகைப்படங்கள் உள்ளிட்ட சான்றுகள் வழி அடையாளப்படுத்தியுள்ளார். கண்ணகி என்ற பெயர்கொண்ட தமிழ்நாட்டுப் பெண்களின் அடர்த்தியைக் காட்டும் வரைபடம் நம் தொல் மரபின் நீட்சியைக் காட்சிப்படுத்துகிறது.

**வன்னியின் வேர்கள்: வாழ்வின் வரம்**

சிந்துவெளிப் பொறிப்புகளிலும், சங்க இலக்கியங்களிலும் வன்னிமரம் பெற்றிருக்கும் பேரிடத்தை விளக்குகிறது இப்பகுதி. இனத்தின் பெயராகவும், அம்மக்களின் வாழ்வியல் அடையாளமாகவும் இம்மரம் விளங்குவதை பல்வேறு சான்றுகள் வழி தெளிவுபடுத்துகிறது இப்பகுதி.

**ஆடுகளம்: விளையாட்டு எனும் வாழ்வியல்**

மொகஞ்சதாரோவில் கிடைத்த, காளைகளோடு கூடிய முத்திரை, இன்றைய ஜல்லிக்கட்டுடன் ஒத்திருப்பதை சங்க இலக்கியச் சான்றுகளுடன் இணைத்து அதன் தடம் பதிவு செய்யப்பட்டுள்ளது. திராவிடர்களின் வீரத்தை பறைசாற்றும் பெரும் சான்றாக இந்த முத்திரை அமைந்துள்ளது.

**உருளும் பகடைகள்: கடந்த காலமும் பொழுது போக்கும்**

சிந்துவெளிப் பண்பாட்டில் விளையாட்டும், அது சார்ந்து உருவாக்கப்பட்ட களிமண் பொம்மைகளும், சுடுமண் உருவங்களும் அம்மக்களின் வாழ்வியலை உணர்வுப் பூர்வமாக முன்வைக்கும் பேராவணமாக விளங்குவதை வரலாற்று ஆய்வாளர்கள் பலர் தரவுகளோடு முன்வைத்துள்ளனர். வாசர்களாகிய நாமும் சிந்துவெளியைப் புரிந்துகொள்ளவும், அம்மக்களின் வாழ்வியலோடு கூடிய ரசனையினைக் கண்டறியவும் இப்பகுதி பெரும் உதவியாக உள்ளது.

**ஆதிச்சநல்லூரும் கீழடியும்: தொப்புள்கொடி**

இப்பகுதி புலப்படுத்தும் வரலாற்றுப் புரிதல் என்பது பெரும் தேடலின் விளைவு. ஆதிச்ச நல்லூர், கீழடி உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்ற அகழ்வாய்வின் விளைவாகக் கண்டறியப்பட்ட பொருட்கள் அனைத்தும் சிந்துவெளியில் கிடைக்கப்பெற்ற சான்றுகளுடன் ஒத்திருப்பதை இணைத்து விரிவாக இவ்வியல் பேசுகிறது. மேலும் சங்க இலக்கியப் பாடல்கள் கூறும் விடயங்களை கீழடியில் கண்டெடுக்கப்பட்டுள்ளமை நம்முள் ஒரு கிளர்ச்சியை, பெருமிதத்தை ஏற்படுத்தத் தவறவில்லை. “தொல்பொருள் ஆராய்ச்சியும், தொல் இலக்கியமும் கைகுலுக்கிக் கொள்ளும் புள்ளியாகக் கீழடி இருக்கிறது” என்ற ஆர். பாலகிருஷ்ணன் அவர்களின் கூற்று இவ்வாய்வின் மைய இழை. தமிழி என்ற மைல்கல்லில் தொடங்கிய இத்தேடல் கீழடி வரை தொடரும் வரலாற்றினை இந்நூல் மிக நுட்பமாகவும் மிக ஆழமாகவும் பதிவுசெய்துள்ளது.

இவ்வாய்வாளரின் முப்பது ஆண்டுகால கடின உழைப்பின் பலனாக இவ்வாய்வு நூல் தமிழ்ச்சமூகத்திற்கு சாத்தியமாகியுள்ளது. இந்நூல் முழுமையும் காணக்கிடைக்கும் மேற்கோள்கள், வரைபடங்கள், சங்கப் பாடல்கள், அட்டவணைகள் என்று ஒவ்வொன்றும் சிந்துவெளி மக்கள் திராவிடர்களே என்பதை அழுத்தமாக பதிவுசெய்கின்றன. தான் எடுத்துக்கொண்ட ஆய்வுப் பொருண்மையை அதற்குரிய அறத்துடன் எழுதிச் சென்றுள்ளார் இவ்வாய்வாளர். இந்நூலின் மொழிநடையும் அதனூடான வரலாற்றுத் தரவுகளும் வாசிப்பினை இலகுவாக்குகின்றன.

தொடங்கிய புள்ளியிலிருந்து சற்றும் பிசகாமல் இவ்விழையைக் கொண்டு சேர்த்த பெருமை இவ்வாய்வாளரைச் சேரும். தொல் மரபின் நீட்சியை மிக நேர்த்தியாக ஆவணப்படுத்தியுள்ளார். இனி வரும் ஆய்வாளர்களுக்கு இவ்வாய்வு நூல் பெரும் வழிகாட்டி. இலக்கியத் தரவுகளும் வரலாற்று ஆவணமாகப் பயன்படும் என்பதை ஆய்வுலகிற்கு உரக்கச் சொல்லும் ஒரு பண்பாட்டின் பயணம்; சிந்து முதல் வைகை வரை என்ற இவ்வாய்வு நூல் தமிழ்ச் சமூகத்திற்கு இவ்வாய்வாளரின் பெருங்கொடை என்றால் அது மிகையில்லை.

●

கட்டுரையாளர், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி புதுவை - 3.



# பதின்பருவமும் நட்பின் தாக்கமும்

ப.வைத்திலிங்கம்

**நட்பின் தாக்கம் அல்லது PEER PRESSURE.**

குழந்தைகள் சிறுவயதில் இருந்தே மற்றவர்கள் செய்வது போலவே தாங்களும் இமிடேட் செய்துதான் கற்றுக் கொள்ளுகிறார்கள். அதனால் வீட்டில் உள்ளவர்கள் சொல்வதை உடனுக்குடன் செய்து பெற்றோர்களை மகிழ்ச்சியில் திளைக்க வைப்பார்கள். குழந்தைகள் வளர வளர பெற்றோர்களின் தாக்கம் குறைந்து, அவர்களிடம் இருந்து கற்றுக்கொள்வதும் குறைந்து, பதின் பருவத்தில் நுழையும்போது பெற்றோர்களின் இடத்தை நண்பர்கள் ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள்.

குழந்தைகளும் நண்பர்களைச் சரி சமமாக உணர்ந்து அவர்களைப் போலவே இருந்து அவர்கள் சொல்லும் செயல்களைச் செய்து அவர்களுடன் சேர்ந்து பயணிக்க விரும்புவார்கள். *PEER* என்றால் லத்தீன் மொழியில் சரிசமம் என்று பொருள். நாம் மற்றவர்களுக்குச் சமமாக மனதளவில் உணரும்போது நம்மை அறியாமலேயே




அவர்கள் விரும்பும் செயல்களைச் செய்யும் கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறோம்.

மெரியம் வெப்ஸ்டர் டிக்ஷனரி ''தன் வயது ஒத்தவர்கள் அல்லது தான் சார்ந்துள்ள குழுவில் உள்ளவர்கள் சொல்வதையோ அல்லது அவர்கள் செய்யும் செயலையோ, தானும் செய்தால்தான் தன்னை விரும்புவார்கள், மதிப்பார்கள் என்று எண்ணி அதையே செய்வதை நண்பர்களின் அழுத்தம்' என்று சொல்லுகிறது

**நண்பர்களின் அழுத்தம் எப்படி நடக்கிறது?**

குழந்தைகள் உணர்வுகளைக் கையாளுவதைக் கற்றுக்கொள்ளவும் வயதுக்கேற்றபடி மன முதிர்ச்சியடையவும் இந்த நட்பு வட்டாரங்கள் அவசியம் தேவைப்படுகிறது. நண்பர்களுடன் சேர்ந்து பழகுவதை குழந்தைகளின் வளர்ச்சியின் ஒரு பகுதியாகவே பார்க்க வேண்டியிருக்கிறது. நண்பர்களின் தாக்கம் பெரும்பாலான பதின்பருவத்தினருக்கு அவர்களின் வளர்ச்சிக்கு உதவும் படியாகவே இருக்கும். அவர்களும் முட்டையை உடைத்துக் கொண்டு கோழிக்குஞ்சு வெளிவருவதுபோல, தங்களின் கூச்சத்தைத் தவிர்த்து, வெளிஉலகில் பழகி, வளர்ந்து இந்த சமூகத்திற்கு ஏற்ற குடிமகனாக உயருவதற்கு நட்புகளைப் போல வேறு யாரும் உதவுவதில்லை.

இந்த பதின்பருவம் குழந்தைகள் வளர்ச்சியில் உடலளவிலும், மனதளவிலும் பலவகையான மாற்றங்கள் நடைபெறும் காலம். அடுத்து வரும் அடல்ட் வாழ்க்கைக்கு அவர்களைத் தயார் படுத்தும் பருவம். சேரும் நண்பர்கள் கூட்டம் நல்ல பழக்கமும் பண்பும் இருக்கும் நபர்களால் நிரம்பி இருக்கும்போது அவர்களின் தாக்கத்தால் வளரப்போகும் குழந்தையும் நல்ல பிள்ளையாக வளர்ந்து விடுவான்.

பதின்பருவத்தினர் தாங்கள் முழுதும் வளர்ந்துவிட்டவர்களாக நினைத்துக் கொண்டிருந்தாலும் இன்னும் முடிவெடுக்கும் திறனில் முழு வளர்ச்சியும் பெற்றிருக்க மாட்டார்கள். அதனால் நண்பர்கள் வற்புறுத்தும்போது சமூகத்தால் அங்கீகரிக்கப்படாத செயலையும் செய்ய ஆரம்பிப்பார்கள். செய்ய மாட்டேன் என்று சொல்லும் மனத்திண்மை இருக்காது. சகாக்களின் வற்புறுத்தல் முதலில் ஒரு மனதளவிலான அழுத்தமாகத்தான் இருக்கும். சகாக்கள் சொல்வதைச் செய்யும் போது இயல்பாகவே இவர்களும் அந்தக் குழுவில் பங்கெடுத்துக் கொண்டு மகிழ்வார்கள். செய்யாமல் இருந்தால் கேலியும் கிண்டலும் செய்து தன்னை அவமதிப்பார்கள் என்ற பயமும் இருக்கும். இல்லையெனில் உடல் ரீதியாகத் துன்புறுத்தலையும் எதிர் நோக்க வேண்டும். மேலும் சிலர் தாங்களாகவே ஆர்வக்கோளாறு காரணமாக இந்தப் புது அனுபவத்தைப் பெற்றுத்தான் பார்ப்போமே என்று எண்ணியும் சேர்ந்து கொள்வார்கள். நாளடைவில் அவர்களின் வாழ்க்கை திசை மாறிவிடும். சகாக்கள் என்று சொல்லும்போது நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள், வகுப்புத்தோழர்கள், விளையாட்டு டீமில் உள்ளவர்கள் என யாரை வேண்டுமானாலும் இங்கே எடுத்துக் கொள்ளலாம்.

**நண்பர்களின் தாக்கத்தின் நன்மைகளும் தீமைகளும்.**

நண்பர்களின் அழுத்தம் காரணமாக குழந்தையின் படிப்பில், பழக்கங்களில், பிறருடன் பழகும் தன்மையில், மேனரிசங்களில் வரவேற்கத்தக்க முன்னேற்றம் தெரியும். ஒருத்தருக்கொருத்தர் விவாதித்துக் கற்கும்போது ஆசிரியரிடம் இருந்து கற்பதை விடவும் மிக எளிதாகக் கற்றுக் கொள்ளுவார்கள். அதுபோல தங்களின் அனுபவங்களை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளும்போது நிறைய படிப்பினைகளைக் கற்றுக் கொள்வார்கள். சரியாக உபயோகிக்கத்

தெரிந்தவர்களுக்கு டிவியும் இண்டர்நெட்டும் கூட ஒரு நல்ல நண்பன் மாதிரி உதவும். நல்ல நண்பனின் தாக்கம் முன்னெச்சரிக்கை உணர்வைக் கொடுக்கும், மேலும் வரப்போகும் ஆபத்திலிருந்தும் காப்பாற்றும்.

'கூடாநட்பு கேடாய் முடியும்' என்பதைப் போல சில நேரங்களில் நல்ல நண்பர்கள் இல்லாமல் வாழ்க்கையில் தடம் மாறி விடுகிறார்கள். இம்மாதிரி நண்பர்களின் அழுத்தம் பல நேரங்களில் தீமையைக் கொண்டு வருகிறது. பள்ளி வகுப்புகளை மறந்து மது, போதை, பாலினச் சீண்டல்கள் என பாதை மாற கூடா நட்புதான் காரணமாக இருக்கிறது.

**பெற்றோர்கள் என்ன செய்யலாம்?**

பெற்றோர்கள் பத்து வயது முடிவதற்குள் குழந்தைகளிடம் அவ்வப்போது சிறு சிறு பிரச்சினைகள் பற்றி விவாதிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். குழந்தைகளிடம் எது சரி எது தவறு என்று கேட்டு சரியான முடிவை எடுக்க சொல்லித் தர வேண்டும். இந்த வளர்ப்பு முறை பின்னாளில் மிகவும் உதவும்.

அவர்களுக்குத் தன்னம்பிக்கையும், மனோதிடமும் வருவதற்கு உதவும். நண்பர்களின் மனரீதியிலான அழுத்தத்தை சந்திக்கும் ஒரு டீன் ஏஜ் குழந்தை தனக்கு சரியென்று தோன்றாத காரியத்தை நான் செய்ய மாட்டேன் என்று சொல்லிவிட்டு அந்த இடத்தைவிட்டு வெளிவந்து விடுவார்கள்.

நல்ல நண்பர்களை எப்படி அடையாளம் கண்டு பழகுவது என்று சொல்லிக் கொடுக்கலாம். நல்ல நண்பனின் சகவாசம் இருக்கும்போது ஒரு கெட்ட செயலைச் செய்ய வேண்டும் என்ற வற்புறுத்தலைத் தைரியத்துடன் நிராகரித்து விடுவார்கள்.

பெற்றோர்களுக்கும் குழந்தைக்கும் நல்ல உறவு வேண்டும், குழந்தைகள் பயமில்லாமல் எதையும் பெற்றோர்களிடம் பேசும் அளவுக்கு அவர்களின் உறவு இருக்க வேண்டும். அதற்கான இடத்தைப் பெற்றோர்கள் கொடுத்திருக்க வேண்டும். எந்த சூழலிலும் குழந்தைகள் பெற்றோர்களை நோக்கி வரத் தயங்கக் கூடாது. இப்படி வளரும் குழந்தைகள் எக்காலத்திலும் கூடா நட்பை நாட மாடார்கள். ●

கட்டுரையாளர் குழந்தைகள் மருத்துவ நிபுணர்.

## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!




**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**அக்டோபர் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 5683 | 4067 | 6855 | 2063 | 7671 |
| 4062 | 893 | 1520 | 2794 | 7670 |
| 4063 | 2706 | 2820 | 7679 | 7669 |
| 4064 | 2705 | 2821 | 2970 | 7668 |
| 4065 | 6854 | 6857 | 7675 | 891 |
| 4066 | 7678 | 6856 | 7674 | 5681 |

தனி இதழ் ₹ 45.00
ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00,
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00
*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் நாகர்கோவில் கிளையின் சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சிகள்

25.09.2023 அன்று களியக்காவிளை *Nanjil Catholic College Arts & Science* கல்லூரி நூலகத்துறை மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் இணைந்து நடத்திய புத்தகக் கண்காட்சியை கல்லூரி தாளாளர் *Dr.M.*எக்கர்மன்ஸ் அவர்கள் திறந்துவைத்தார். இதில் கல்லூரி நூலகர் *Dr.V.J.*ஹேமா ரெஜி, கல்லூரி முதல்வர் *Dr.M.*அமலநாதன், ஜீன் சார்த்தர், மற்றும் நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.





27.09.2023 அன்று நாகர்கோவில் தெ.தி.இந்துக்கல்லூரி, தமிழ் உயராய்வு மையம் மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் இணைந்து நடத்திய தேசியக் கருத்தரங்கில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடாகிய 'தமிழ்க் காப்பியங்களில் பண்பாட்டுக் கூறுகள்' எனும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் கல்லூரித் தலைவர் மற்றும் செயலர் மருத்துவர் கி.நாகராஜன், மதுரை காமராஜர் பல்கலைக் கழக இலக்கியத் திறனாய்வியல் துறை தலைவர் (பொ) முனைவர் உ.கருப்பத்தேவன், கல்லூரி முதல்வர் முனைவர் ஜி.வி.பத்மநாபன், மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி மற்றும் நாகர்கோவில் மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



27.09.2023 அன்று நாகர்கோவில் தெ.தி.இந்துக்கல்லூரி, தமிழ் உயராய்வு மையம் மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் இணைந்து நடத்திய தேசியக் கருத்தரங்கில் கல்லூரி தமிழ்த்துறையின் சார்பாக **நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்** மாத இதழுக்கு 50 புதிய சந்தாதாரர்கள் சேர்ப்பு விழா நடைபெற்றது. இதில் மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் இலக்கியத் திறனாய்வியல் துறை தலைவர் (பொ) முனைவர் உ.கருப்பத்தேவன், மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி மற்றும் நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கட்டுரை



# தமிழில் தேசிய இலக்கியங்கள் ஒரு புதிய வரைசட்டகத்தை நோக்கி...

பா.ஆனந்தகுமார்

தேசம், தேசியம் எனும் கருத்துநிலைகள் மேற்கத்திய முதலாளித்துவம் மற்றும் தொழில்மயமாக்கலின் உடன்விளைவாகத் தோன்றியவை. இவை, காலனியமயமாக்கலோடும் நவீனமயமாக்கலோடும் தொடர்புகொண்டவை. உலகிலுள்ள பெரும்பாலான நாடுகளின் தேசிய உருவாக்கம் என்பது நவீன காலகட்டத்தைச் சார்ந்தவை என்றாலும் அவற்றின் உருவாக்க முறையில் வேறுபாடுகள் பல உள்ளன. இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி முதலான ஆதிக்க வல்லரசுகளைப் பொறுத்தளவில் தேசியம் என்பது தத்தம் நாட்டு மன்னர்கள் மற்றும் நிலப்பிரபுக்களின் ஆட்சியை முடித்து மக்களாட்சியை நிலைநிறுத்தியதன் அடிப்படையில் உருவானது. இந்நாடுகளில் தேசியப் பெருமிதம் என்பது தேசிய உணர்வின் அடிப்படையாக இருந்தது. ஆனால், இந்தியா, இலங்கை, பர்மா முதலான ஆசிய நாடுகள் அமெரிக்கா மற்றும் சூடான், ஷெனகல் முதலான பிரெஞ்சு காலனியாதிக்க ஆப்பிரிக்க நாடுகளில் தேசியம் என்பது காலனியாதிக்க எதிர்ப்பையும் விடுதலையையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. ஆஸ்திரேலியா, கனடா முதலான பிரிட்டிஷ் குடியேற்ற காலனிய நாடுகளின் தேசிய உணர்வு என்பது பல்பண்பாட்டுத்தன்மையுடன் கூடிய புதிய உணர்வுநிலையாக முகிழ்த்தது. இந்நாடுகள் தமக்கான புதிய தேசிய வரலாற்றை நிகழ்விலிருந்தே கட்டமைத்தன. ஆனால், முன்னர்க் குறிப்பிட்ட ஐரோப்பிய வல்லரசு மற்றும் ஆசிய, ஆப்பிரிக்க காலனியாதிக்க நாடுகள் தமக்கான தேசிய அடையாளங்களைப் பழைய வரலாற்றிலிருந்து மீட்டெடுத்தன.

**தமிழ்த்தேசியம் : தோற்றமும் புவியியல் எல்லையும்**

தேசியம், ஜனநாயகம் என்பது நவீனகால அரசியல் செயல்பாடாக அமைந்திருந்தாலும் கிரேக்கம், சீனம் போன்ற புராதன தேசிய இனங்களின் தேசியத்தொடக்கம் என்பது பலஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே குறிக்கப்பட்டுவிட்டது. மொழியை அடிப்படையாகக் கொண்ட தமிழ்த்தேசியத்தின் புவியியல் எல்லை வரையறுப்பு தொல்காப்பியம் முதலே தொடங்கிவிட்டது.

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்"

எனும் தொல்காப்பியப் பாயிர வரிகள் தமிழ்நாட்டை மொழிவழக்கு அடிப்படையில் தனித்து விளங்கிய ஒரு பிரதேசமாக அடையாளப்படுத்தியது. தமிழில் 'உலகம்' என்ற சொல் நில எல்லையை வரையறுக்கும் பொதுச்சொல்லாகக் கையாளப்பட்டுள்ளது. தொல்காப்பியர் நிலத்தைக் 'காடுறை' உலகம், 'மைவரை' உலகம் என்று இயற்கையின் அடிப்படையில் பாகுபாடு செய்கின்றார். தொல்காப்பியப் பனுவலுக்குள் 'தமிழ்' என்ற சொல் பலவிடத்துக் (தமிழென் கிளவி) கையாளப்பட்டுள்ளது. வடக்கில் வேங்கடம், தெற்கில் குமரி, கிழக்கிலும் மேற்கிலும் கடல் என்ற தமிழ்நாட்டின் அரசியல் எல்லை வரையறுப்பு சங்ககாலத்திலேயே நிகழ்ந்திருக்கின்றது.

"தென்குமரி வடபெருங்கடல்
குண குட கடலாவெல்லை
குன்று மலை காடு நாடு
ஒன்றுபட்டு வழிமொழியக்
கொடிது கடிந்து கோல் திருத்தி"
(குறுங்கோழியூர் கிழார், புறம் – 17)

எனவே,

சங்க இலக்கியத்தில் தமிழகம் என்ற சொல் தனி நிலப்பரப்பைக் குறிக்கும் சொல்லாக (புறம்.168) ஆளப்பட்டிருக்கிறது. பழந்தமிழ் இலக்கியத்தில் 'நாடு' என்ற சொல் 'தமிழ்கூறு நல்லுலகின்' உட்பிரிவாக அடையாளப்படுத்தப்படுகிறது. தமிழ் உலகம் ஒட்டுமொத்த புவிப்பரப்பின் ஒரு பகுதி என்ற உணர்வுநிலையும் தமிழர்களுக்கு இருந்திருக்கிறது. 'வையகம்' என்ற பெயரில் இப்புவிப்பரப்பு அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. சங்ககாலத்திலேயே கிரேக்கம், இலத்தீன், சீனம் ஆகிய நாடுகளுடன் கடல் வாணிகத் தொடர்பு தமிழர்களுக்கு இருந்திருப்பதால் ஒட்டுமொத்த புவியியல் குறித்த நனவுநிலை இருந்திருக்கிறது. மேலும் பண்டைய இந்தியாவின் ஏனைய பகுதிகள் குறிப்பாக இன்றைய வடஇந்தியப் பகுதிகள் குறித்த ஓர்மையும் பழந்தமிழர்களுக்கு இருந்திருப்பதைச் சங்க இலக்கியங்களில் வரும் நந்தன், மோரியர்(மௌரியர்) முதலான வடபுல வேந்தர்கள், கங்கை, பாடலி முதலான வடபுல நிலப்பரப்புகள் குறித்த பதிவுகளும் உணர்த்துகின்றன. தமிழ்மொழி ஏனைய மொழிகளைப் போல் ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் மட்டும் வழங்காமல் பல வட்டாரங்களிலும், பல தேசங்களிலும் வழங்கி வந்திருப்பதைப் பின்வரும் நன்னூல் நூற்பாவழி அறிய முடிகிறது.

"செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற்று இரண்டினில் தமிழொழி நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொ லென்ப"
(நன்.சொல்.273)

இதற்கு உரை எழுதிய மயிலைநாதர் (14.ஆம். நூற்றாண்டு) தமிழ் நிலப்பரப்பில் தென்பாண்டி, குட்ட, குட, கற்கா, வேண், பூழி, பன்றி, அருவா, அருவா வடதலை, சீதம், மலை, புனல் ஆகிய 12 வட்டாரங்களில் திசைச்சொற்களாகத் தமிழ் வழங்கியதாகக் குறிப்பிடுகின்றார்.

இவ்வட்டாரங்களுள் சில இன்றைய வடகேரள, ஆந்திர மாநிலப்பகுதியைச் சேர்ந்தவை. மேலும் மயிலைநாதர் இப்புவியில் தமிழ்நாடு, சீனம், சிங்களம், சோணகம் (அரபு), சாவகம் (இந்தோனேசியா), துளு, கன்னடம், கொல்லம், தெலுங்கு, கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம் (மலேசியா), கவுடம், கோசலம் ஆகிய 18 தேசங்களில் தமிழ் வழங்கப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றார். திசைச்சொற்கள் மேற்குறிப்பிட்ட 12 வட்டாரங்களில் வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுவதன் மூலம் தமிழ் ஒற்றைப்பண்பாடு கொண்டதாக அல்லாமல் பல துணைப்பண்பாடுகள் (Sub cultures) கொண்டதாக விளங்கியிருப்பதை அறிய முடிகிறது. அத்துடன் தமிழ் 18 தேசங்களில் வழங்கப்பட்டது எனும் பதிவின் மூலம் தமிழ்நாடும் தமிழ்மொழியும் பிற உலக வட்டாரங்களின் ஓர்மையில் பதிவாகியிருந்ததை அறியமுடிகிறது. இதற்குக் கிரேக்க ரோமானிய சீனச்சான்றுகளும் உள்ளன. இவையெல்லாம் 'இந்தியா' என்கிற அரசியல் ரீதியான ஒரு பெருந்தேசம் உருவாவதற்குமுன் 2000 ஆண்டுகளாகத் தமிழ்மொழி இன, பண்பாட்டு அரசியல் அடிப்படையில் தனித்த அடையாளங்களுடன் விளங்கியிருக்கின்றது என்பதைக் காட்டுகின்றன.

**தமிழ்த்தேசிய அடையாளங்களின் உருவாக்கமும் மாற்றமும்**

தமிழ் என்பதன் அடையாளம் காலந்தோறும் மாறி வந்திருக்கின்றது. சங்ககாலத்தில் மொழி என்பதன் அடிப்படையிலேயே இதன் அடையாளம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. தமிழ் என்பதற்கு, சமயம் முதலான பிற பண்பாட்டு அடையாளங்கள் ஏற்றப்படவில்லை. ஆயின், நிலப்பரப்பு, குடிகள், ஆறு, வேந்தர் ஆகியோர் 'தமிழ்' எனும் அடையாளத்தோடு இணைத்துப் பேசப்பட்டுள்ளனர். தமிழ்த்தேசம் 'வடவேங்கடம் தென்குமரி' என்கிற

எல்லைப்பரப்புக்குட்பட்டதாக இருந்தாலும், ஒரு பொது ஆட்சியாளரின் கீழ் இல்லாமல் பல நிலத்தலைவர்கள், சீறூர் மன்னர்கள், வேந்தர்கள் ஆளக்கூடிய பகுதியாக இருந்திருக்கின்றது. ஆயினும் இப்பகுதி, 'தமிழகம்' (புறம்.168), 'தமிழ்நாடு' (பரி.ம.9) ஆகிய பொது அடையாளத்தோடும் இங்கு வாழ்வோர் 'தமிழ்க்குடிகள்' (பரி.ம.8) என்ற அடையாளத்தோடும் சுட்டப்பட்டுள்ளனர்.

நிலம், தொழில், பண்பாட்டு நடவடிக்கைகளில் வேறுபட்ட தன்மைகளைக்கொண்ட தமிழ்கூறு நல்லுலகை ஒரே சமூகப் பண்பாட்டு அரசியல் நிலப்பரப்பாக ஒருங்கிணைக்கும் முயற்சி சிலப்பதிகாரக் காலத்தில் நிகழ்ந்துள்ளது. வடதிசை வேந்தர்களுக்கு எதிராகத் தென்தமிழ்நாட்டின் வில், கயல், புலி ஆகிய அரச அடையாளங்கள் ஒன்றிணைத்து நிறுத்தப்படுகின்றன. தென்தமிழ் x வடஆரியம் என்கின்ற பிரதேச அடிப்படையிலான 'பண்பாட்டு அடையாள முரண்' சிலம்பில் முதலில் உருவாக்கப்படுகின்றது. இவ்வகையான எழுச்சியும் ஒருங்கிணைப்பும் விரிந்த வணிக நடவடிக்கைகளுக்கு அனுகூலமாக இருந்திருக்கலாம். பல்லவர் காலத்தில் அவைதீக சமயங்களுக்கு எதிராக, பக்தி எனும் உணர்வின் அடிப்படையில் தமிழர்களைச் சைவர்களாகவும் வைணவர்களாகவும் ஒருங்கிணைக்கும் முயற்சி நடைபெற்றது. இக்கட்டத்தில் தமிழ் சமய அடையாளங்களைப் பெற்றது. வேறுவகையில் சொல்வதானால், வைதீக சமயங்கள் தம்மைத் தமிழ்வழி அடையாளப்படுத்திக்கொண்டன. தமது கடவுளரைத் தமிழ்க்கடவுளராகவும் காட்ட முயற்சித்தன. சிவன் தென்னவனாகவும், தென்பாண்டி நாட்டானாகவும் அடையாளப்படுத்தப்பட்டான். ஞானசம்பந்தர், தன்னைத் 'தமிழ் ஞானசம்பந்தனா'கவும் 'தமிழ்க்கிழமை ஞானசம்பந்தனா' கவும் நற்றமிழ் ஞானசம்பந்தனா'கவும் அடையாளப்படுத்திக்கொண்டார். அதேபோது, நான்மறையான், வேதியன், அருமறை ஞானசம்பந்தன் என்கின்ற வைதீக அடையாளத்தையும் அவர் கைவிடத் தயாராக இல்லை. எனவே பக்திக்காலகட்டத்தில் சமய அரசியலுக்குத் தமிழ்மொழி சார்ந்த அடையாளம் பயன்படுத்தப்பட்டது. தெலுங்குமொழி பேசும் நாயக்கர் ஆட்சிக்காலத்தில் அருணகிரிநாதர் மீண்டும் இதே தமிழ் அடையாளத்தைக் கையிலெடுத்தார். பிரிட்டிஷ் காலனிய ஆட்சிக்காலத்தில் தமிழிலக்கியத்தில் இந்தியப் பெருந் தேசியத்திற்கான அடையாள உருவாக்கமும் தமிழ்த்தேசியம் என்கிற துணைத் தேசியத்திற்கான அடையாள உருவாக்கமும் நிகழ்ந்தன. பாரதியாரில் தொடங்கி, பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்கள் வரை இவ்வகையான உருவாக்கம் தொடர்ச்சியாக நிகழ்ந்தது. எனவே, தமிழர்களின் தேசம், தேசியம் குறித்த கருத்தாக்கம் நவீன காலத்தின் கருத்தியலாக அல்லாமல் பண்டையத் தோற்றமூலமும் தொடர்ச்சியும் கொண்டதாக விளங்குகிறது.

**தேசிய இலக்கியம்: உருவாக்கமும் சிக்கல்களும்**

நவீன காலத்தில் உருவான தேசங்களின் தேசிய அடையாளங்கள் பழங்கால வரலாற்றிலிருந்தும் நிகழ்கால சமூகப்பண்பாட்டு வாழ்விலிருந்தும் உருவாக்கப்பட்டன. கனடா போன்ற சில நவீன தேசங்களின் அடையாள உருவாக்கம் முற்றுப்பெறாமல் இன்னும் தொடர் உருவாக்க நிலையில் இருக்கிறது. நவீன தேசங்களின் எழுச்சியில் தேசிய இலக்கியம் எனும் கருத்தாக்கமும் உருவாக்கம் பெற்றது. குறிப்பாக ஒப்பிலக்கியத்தில் தேசிய இலக்கியம், உலக இலக்கியம், பொதுமை இலக்கியம் என்பன தனித்தனியானதாக வரையறுத்துக் காட்டப்பட்டன. பிரெஞ்சு நாட்டு ஒப்பிலக்கிய அறிஞர்கள், தத்தமது தேசிய இலக்கியங்களின் தனிப்பண்புகளை ஆராய்வதே ஒப்பிலக்கியத்தின் நோக்கமாக வரையறுத்தனர். பிரெஞ்சு, ஜெர்மனி, இங்கிலாந்து, ஸ்பானிஷ், இத்தாலி முதலிய நாடுகளின் தேசிய இலக்கியங்களை ஐரோப்பியப் பொதுவெளிக்குள் ஒருங்கிணைப்பதே ஒப்பிலக்கியத்தின் செயல்பாடாக இருந்தது. தேசிய இலக்கியத்தின் இருப்பைச் சுயநிர்ணயம் செய்வதாக இது அமைந்தது. தேசியப் பண்பு உருவாக்கத்தில் தேசிய இலக்கியம் அடிப்படைக் கூறாக அமைந்துள்ளது. குறிப்பிட்ட நாட்டின் குடிமக்களால் உற்பத்தி செய்யப்படும் இலக்கியப் பனுவல்கள் அந்த நாட்டின் தேசிய இலக்கியமாக அடையாளப்படுத்தப்பட்டன. தேசிய இலக்கியம் என்பது ஒரு குறிப்பிட்ட நாட்டினுடைய தேசியப் பண்பின் வெளிப்பாடாக மட்டுமின்றி அந்த நாட்டின் பெருமைக்கும் சட்டப்பூர்வமான உரிமைக்கும் ஆவணமாக விளங்குகிறது. சுருங்கக்கூறின் தேசிய இலக்கியம் என்பது ஒரு தேசத்தின் சொந்த வரலாறு மற்றும் பண்பாட்டு மரபுகளிலிருந்து உயிரோட்டமாய் முகிழ்த்தெழுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டு ஐரோப்பியப் புனைவியல் இலக்கியத்தின் மையவிசையாக தேசியம் விளங்கியிருப்பதை ரெனிவெல்லக் எடுத்துக்காட்டியுள்ளார்.

தேசிய இலக்கியம் என்பதை வரையறுப்பதில் புவியியல் அளவுகோல் சார்ந்தும் அடையாளங்கள் சார்ந்தும் ஏராளமான சிக்கல்கள் உள்ளன. தேசிய இலக்கியம் என்பதை வரையறுப்பதில் நாடு, மொழி, இனம் ஆகிய மூன்றும் கவனத்தில் கொள்ளப்பட்டன. ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தளவில் ஒரு நாடு, ஒரு மொழி, ஒரு தேசிய இனம் என்கிற தேசிய வரையறுப்பு பிரான்ஸ், ஜெர்மன் முதலான நாடுகளுக்குப் பொருந்தி வரும். ஆனால், இந்தியா போன்ற பல தேசிய இனங்கள்

வாழுகின்ற நாட்டில் ஒரு நாடு, ஒரு மொழி, ஒரு தேசியம் என்ற வரையறுப்பு பொருந்தாது. இந்தியப் பெருந்தேசியத்தின் உருவாக்கத்தின்போதே தேசியஇனங்கள் சார்ந்து தமிழ், தெலுங்கு, வங்கம், மராத்தி என்கின்ற பல துணைத்தேசியங்கள் உருவாயின. இத்துணைத்தேசியங்கள் தமக்கான வரலாற்றைக் கட்டமைக்கின்றபோது, பழைய சமூகப் பண்பாட்டு இலக்கிய அடையாளங்களை மீட்டுருவாக்கம் செய்தன. தேசிய இலக்கியத்தைப் பொறுத்தவரையில், இந்தியாவில் வழங்குகின்ற தமிழிலக்கியமானது, இந்தியத் தேசிய இலக்கியம், தமிழ்த் தேசிய இலக்கியம் என்கிற இருமை அடையாளம் கொண்டதாக அமைந்துள்ளது. அது ஏனைய இந்திய இலக்கியச் சமூகங்களோடு இடையீட்டு உறவும் ஊடாட்டமும் கொண்டுள்ளது.

**ஒரு மொழி பல தேசிய இலக்கியங்கள்**

ஆங்கில மொழிவழி எழுதப்படும் தேசிய இலக்கியம் என்பது ஒன்றல்ல. ஆங்கில மொழியில் பல தேசிய இனங்களைச் சார்ந்தோர் இலக்கியங்களைப் படைக்கின்றனர். எனவே, ஆங்கில மொழியில் அமெரிக்கத் தேசிய இலக்கியம், ஆஸ்திரேலிய தேசிய இலக்கியம், கனடாத் தேசிய இலக்கியம் எனப் பல நாடுகளைச் சார்ந்த தேசிய இலக்கியங்கள் பிறப்பெடுக்கின்றன. அதேபோது ஐரோப்பாவிற்கு வெளியே வாழுகின்ற இந்தியர், ஆப்பிரிக்கர், மேற்கு இந்தியர் எனப் பல பின்னைக் காலனிய நாடுகளின் தேசிய இனங்களைச் சார்ந்த படைப்பாளிகளும் ஆங்கில மொழியில் எழுதுகின்றனர். எனவே, ஆங்கில மொழியில் எழுதப்படுகின்ற இலக்கியம் என்பது சர்வதேசியத்தன்மை கொண்டதாகவும் பல்பண்பாட்டுப் பின்னணி கொண்டதாகவும் அமைந்துள்ளது. எனவே, ஆங்கிலத்திலுள்ள இலக்கியம் தற்போது வெவ்வேறு நிலங்களிலிருந்து உருவாகும் கலப்பினத்தன்மை கொண்டதாக அமைந்துள்ளது. ஆங்கிலத்தில் எழுதப்படுகின்ற இவ்விலக்கியங்களுக்கிடையில் பரஸ்பர கொடுக்கல் வாங்கல்களும் தாக்கங்களும் நிகழ்கின்றன.

ஆங்கிலத்தைப் போன்றே தமிழ் மொழியிலும் பல தேசிய இலக்கியங்கள் உருவாகின்றன. இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வாழுகின்ற தமிழர்கள் தத்தமது நாட்டு அடையாளங்களோடு நிலவியற் பண்பாட்டுக் கூறுகளுடன் தனித்துவமான தமிழ்த்தேசிய இலக்கியங்களைப் படைத்து வருகின்றனர். ஆங்கிலத்தில் எழுதப்படுகின்ற தேசிய இலக்கியங்களுக்கும் தமிழில் எழுதப்படுகின்ற தேசிய இலக்கியங்களுக்கும் ஒரு வேறுபாடு உள்ளது. ஆங்கில மொழியைப் பொறுத்தவரையில் பல நாடுகளில் வாழுகின்ற பல தேசிய இனங்களைச் சார்ந்தோர் தமது தேசிய இலக்கியங்களை உருவாக்குகின்றனர். ஆனால், தமிழைப் பொறுத்தளவில் பல நாடுகளிலிருந்து படைக்கப்பட்டாலும் அவ்விலக்கியப் பனுவல்களை உருவாக்குகின்றவர்கள் தமிழ் என்கிற ஒரு குறிப்பிட்ட தேசிய இனத்தைச் சார்ந்தவர்களாக உள்ளனர். இன்று தமிழ்த்தேசியத்தின் புவியியல் எல்லை வரையறுப்பு என்பது நாடுகளைக் கடந்ததாக இருக்கிறது. தமிழ் இலக்கியம் என்கிற பெரும் மரத்தின் கிளைகளாகத் தாய்த்தமிழ் இலக்கியம், ஈழத்துத் தமிழ் இலக்கியம், மலேசியத் தமிழ் இலக்கியம், சிங்கப்பூர் தமிழ் இலக்கியம், பர்மியத் தமிழ் இலக்கியம் என்பன விளங்குகின்றன. ஒட்டுமொத்த தமிழ்த்தேசிய இலக்கியத்தின் துணைப்பண்பாட்டுத் தேசிய இலக்கியங்களாக இக்கிளைகள் அமைந்துள்ளன. ஆயினும், இம்மரத்துக்கான வேர்களும் நீர்களும் பல மண்ணில் பரவியிருக்கின்றன.

**தமிழில் தோன்றும் பெருந்தேசியமும் துணைத்தேசியமும்**

தேசிய இலக்கியங்கள் அந்தந்த நாட்டின் பெருந்தேசிய அடையாளத்தையும் தமிழ் என்கிற தனித்த துணைத்தேசிய அடையாளத்தையும் பெற்று விளங்குகின்றன. தமிழின் பொதுப்பண்பாட்டு மரபுகளும் அந்தந்த நாடு சார்ந்த தனித்த வட்டார சமூகப்பண்பாட்டு மரபுகளும் இத்துணைத்தேசிய இலக்கியங்களில் ஊடாடி நிற்கின்றன. இந்தியாவில் வழங்கும் தமிழ்த்தேசிய இலக்கியம் இந்திய இலக்கியத்தின் பொதுக்கூறுகளையும் தமிழ் இலக்கியத்தின் தனித்த கூறுகளையும் பெற்று விளங்குகின்றன. வேறுவகையில் சொல்வதானால், இந்தியப் பெருந்தேசியத்தின் பண்பாட்டுக் கூறுகளையும் தமிழ்த்துணைத்தேசியத்தின் பண்பாட்டுக் கூறுகளையும் இந்திய தமிழ்த்தேசிய இலக்கியம் பெற்று விளங்குகின்றது. இந்தியத் தமிழ்த் தேசிய இலக்கியம், வங்காள இலக்கியம், ஹிந்தி இலக்கியம், மலையாள இலக்கியம், தெலுங்கு இலக்கியம் முதலான இந்தியத் துணைத்தேசிய இலக்கியங்களோடு ஒட்டும் உறவும் கொண்டுள்ளன. தாகூரும் வங்க எழுத்தாளர்களும் நவீனத் தமிழ் இலக்கியப் படைப்பாளிகளுக்குப் பெரும் உந்துதலைத் தந்துள்ளார்கள். மராட்டிய நாவலாசிரியர் காண்டேகர், மு.வரதராசனாரின் நாவல்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். திருமந்திரம் கேரள சமூகப் புரட்சியாளர் நாராயணகுருவிடமும் தெலுங்கு, கன்னட வீரசைவ இலக்கியப் படைப்பாளிகளிடமும் தாக்கம் செலுத்தியுள்ளது. தமிழ்ப்பக்தி இலக்கியங்கள் தென்னக எல்லைகளைக் கடந்து வங்காளத்தின் சைதன்யர் வரை பெரும் பாய்ச்சலை நிகழ்த்தியுள்ளது. கபீர், கோரக்நாத் முதலான வடஇந்திய ஞானியர்கள் தமிழ்ச்சித்தர்களிடம் ஊடுருவியுள்ளனர்.

இதேபோன்று இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மிய தமிழ்த்தேசிய இலக்கியங்களில் அந்தந்த நாட்டு பெருந்தேசியப் பண்பாட்டு மரபுகளின் ஊடாட்டத்தை அவதானிக்கலாம். தமிழ்மொழியில் எழுதப்படும் மேற்குறிப்பிட்ட நாடுகளின் தமிழ்த்தேசிய இலக்கியங்களுக்கு மூலமாக ஊற்றுக்கண்ணாக - எல்லாருக்குமான பொது இலக்கிய இருப்பாக சங்கஇலக்கியம் தொடங்கி காலனிய ஆட்சிக்காலத்திற்கு முந்தைய சிற்றிலக்கியக் காலம் வரை உள்ள தமிழ் இலக்கியங்கள் திகழ்கின்றன.

**ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் அடையாளங்களும் தனித்துவப் பாரம்பரியமும்**

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றின் தொடக்கம் சங்கப்புலவன் மதுரை ஈழத்துப் பூதந்தேவனாரிலிருந்து தொடங்குவதாக ஈழத்து அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். நன்னூல் காலம்வரை ஈழம் தமிழ் வழங்கும் ஒரு தனிப்பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. திசைச்சொல்லைப் போன்று ஈழத்து இலக்கியம் திசை இலக்கியமாகவே கருதப்பட்டிருக்க வேண்டும். ஈழத்துப் படைப்பாளிகள் தமிழ் நிலத்திலிருந்து செயல்பட்டதைப் போல் தமிழ்ப்படைப்பாளிகள் ஈழத்து நிலப்பரப்புக்குச் சென்று வந்துள்ளமையை தேவாரப்பாடல்கள் உணர்த்துகின்றன. திருக்கோணேச்சுரமும், திருநாகேச்சுரமும் பாடல்பெற்ற சிவத்தலங்களாக விளங்குகின்றன. பிற்காலச் சோழர்கள் இரண்டு நூற்றாண்டுகளாக ஈழத்தை ஆண்டாலும் அக்காலப்பகுதியில் எழுந்த இலக்கியங்கள் பற்றி எவ்விதமான குறிப்புகளும் இல்லை. ஈழத்து இலக்கியத்தின் தனிப்பாரம்பரியத்தை முதலில் அடையாளப்படுத்துவதாக திருக்கோணேஸ்வர கல்வெட்டுப் பாடல்கள் அமைந்துள்ளன. பேராசிரியர் சிவத்தம்பி ஆரிய சக்கரவர்த்திகள் காலம்தான்(கி.பி.14ஆம் நூற்றாண்டு) ஈழத்தில் தனித்துவமான ஓர் இலக்கியப் பாரம்பரியம் தோன்றுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்ட காலம் என்று குறிப்பிடுகின்றார். ஆரிய சக்கரவர்த்தியான மூன்றாம் பராக்கிரம பாகுவின் அரசவையில் தேனுவரைப் பெருமாள் போஜராஜர் அரங்கேற்றிய (கி.பி.1310) சரசோதிட மாலை எனும் நூலே ஈழத்து இலக்கியத்தின் முதல் தமிழ் நூலாகக் கருதப்படுகின்றது(2010:ப.16). தாய்த்தமிழகப் புலவர்களும் ஈழத்துப் புலவர்களும் இந்தியப் பொதுமரபின் முதன்மை அடையாளமாகக் கருதப்படுகின்ற சமஸ்கிருத இலக்கியத்தோடு ஒட்டும் உறவும் வைத்திருந்தனர்.

கம்பர் வால்மீகி இராமாயணத்தைத் தமிழில் மொழிபெயர்த்ததைப்போல் ஈழத்து அரசப்புலவர் அரசகேசரி (கி.பி.14ஆம்.நூற்றாண்டு) காளிதாசரின் இரகு வம்சத்தைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இடைக்காலத்தில் ஈழத்து நாட்டார் காப்பிய மரபில் தோன்றி 'கண்ணகி வழக்குரை' தமிழகத்தின் மையப் பண்பாட்டுப் பகுதிக்கும் ஈழத்துத் தமிழ்ப் பண்பாட்டிற்குமான ஒட்டையும் உறவையும் துலக்கம் செய்கிறது. ஆரிய சக்கரவர்த்திகளுக்குப் பிந்தைய போர்த்துகீசிய டச்சுக்காரர்களின் காலனிய ஆட்சிக்காலத்தில் ஈழம் இந்திய நிலப்பரப்பின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டது. ஆங்கிலேய காலனிய ஆட்சிக்காலத்தில் ஈழம் சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது. காலனிய அனுபவத்தை எதிர்கொண்டதில் இந்தியத் தமிழர்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இடையில் பெருத்த வேறுபாடு இல்லை. காலனிய ஆட்சியின் விளைவான ஆங்கிலக் கல்விமுறை, நவீனமயமாக்கம், தொழில்மயமாக்கம், அச்சு ஊடகத்தின் வருகை, மேற்கத்திய இலக்கிய அறிமுகம் என்பனவற்றிற்கான எதிர்வினைகள் ஈழத்திலும் தமிழகத்திலும் ஒன்றுபோலவே இருந்தன. போர்ச்சுகீசிய, டச்சுக்காரர்களின் ஆட்சிக்காலத்தில் ஈழத்தில் எழுந்த இலக்கியங்கள் தமிழ்ச் சிற்றிலக்கிய மரபை உள்வாங்குவதாகவும் அதன் தொடர்ச்சியாகவும் அமைந்தது. குறவஞ்சி, அம்மானை போன்ற இலக்கியங்கள் கிறித்தவ சமயப்பண்பாட்டை வெளிப்படுத்த உதவின. இக்காலத்தில், கிறித்தவத்திற்கு எதிர்நிலையாக சைவ சமயம் சார்ந்த சில தலபுராணங்களும் எழுந்துள்ளன. இதற்குப் பிந்தைய 19ஆம் நூற்றாண்டு அனுபவங்கள் முன்பு குறிப்பிட்டதைப்போலவே ஈழத்தமிழர்களுக்கும் இந்தியத் தமிழர்களுக்கும் ஒன்றுபோலத்தான் இருந்தன. ஈழத்துத் தமிழிலக்கிய தனிப்பாரம்பரியத்தைத் துலக்குவதாக ஜோதிடம், மருத்துவம் சார்ந்த பாரம்பரிய அறிவு நூல்கள் எழுந்துள்ளன. இது தாய்த்தமிழக தேசியஇலக்கியத்தில் இல்லாத ஒரு தனிக்கூறாகும். இத்தகைய மருத்துவம், சோதிடம் சார்ந்த நூல்கள் தமிழகத்தில் இலக்கியப்பரப்பிற்கு வெளியேதான் இருந்துள்ளன. ஆங்கிலேய காலனிய ஆட்சி எதிர்ப்பும் நாவல் முதலான நவீன இலக்கியங்களின் தோற்ற வரலாறும் ஈழத்திலும் தமிழகத்திலும் பொதுமைப்பண்புடையனவாகவே அமைந்துள்ளன. இந்திய இலங்கை விடுதலைப் போராட்ட காலகட்டத்தில் தமிழ்ப் படைப்பாளிகள் இந்தியப்பெருந்தேசியத்தின்வழி பாரதமாதாவைத் துதித்தது போல் ஈழத்தமிழ்க் கவிஞர்கள் ஈழப்பெருந்தேசியத்தின்வழி இலங்காதேவியைத் துதித்தனர். நவீன ஈழத்துக்கவிதை, நாவல், சிறுகதை இலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சிப்போக்குகளும் நவீனத்தமிழ்க் கவிதை, நாவல், சிறுகதை இலக்கியங்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சிப்போக்குகளோடு இணைந்தும்

இயைந்தும் செல்கிறது. பிரமிள் என்கிற ஈழத்துப் படைப்பாளி தமிழ்ப்புதுக்கவிதையின் முதன்மைப் படைப்பாளியாகவே அடையாளம் காணப்படுகின்றார். இதேபோன்று பெருந்தேசியம், திராவிடம், மார்க்சியம், தமிழ்த்தேசியம் என்கிற கருத்துநிலைகள் ஈழத்து இலக்கியத்திலும் இந்தியத்தமிழ் இலக்கியத்திலும் தொடர்ச்சியாக ஊடாடி வந்திருப்பதை ஒரு பொதுவான அம்சமாகக் குறிப்பிடலாம். திறனாய்வைப் பொறுத்தளவில் கைலாசபதி, சிவத்தம்பி, சு.வித்யானந்தன், ஆ.வேலுப்பிள்ளை, எம்.ஏ.நுஃமான் ஆகியோரது ஆக்கங்கள் ஈழத்துத் திறனாய்வு ஆக்கங்கள் என்பதாக அடையாளப்படுத்தப்படாமல் தமிழ்த்திறனாய்வின் ஒரு அங்கமாகவே விளங்குகின்றன. ஈழத்துப்பெண்ணியக் கவிதை தமிழ்ப்பெண்ணியக் கவிஞர்களுக்கு முன்னுதாரணமாக விளங்கியிருக்கிறது. இவ்வாறு நவீன ஈழத்துத் தமிழ் இலக்கியமும் இந்தியத் தமிழ் இலக்கியமும் கொள்வினைகளும் கொடுப்பினைகளும் கொண்டவையாக பரஸ்பர, ஊடாட்டங்கள் கொண்டவையாக விளங்குகின்றன.

## ஈழத்துத் தமிழ்த் தேசியத்தின் துணைப் பண்பாட்டுக்கூறுகள்

இந்தியத் தமிழ் இலக்கியத்தில் கொங்கு வட்டாரம், நாஞ்சில் வட்டாரம், சென்னை வட்டாரம், கரிசல் வட்டாரம் என்பதைப் போன்ற தனித்த வட்டாரப் பண்பாடுகள் தமிழ்ப்பொதுமையிலிருந்து விலகிய சில தனித்த மொழி, சமூகப்பண்பாட்டுக் கூறுகள் கொண்டவையாக தனித்த வட்டார இலக்கியங்களின் உருவாக்கத்தைக் காணமுடிகிறது. இவ்வட்டார இலக்கியங்களின் பண்பாட்டுக்கூறைத் தமிழின் துணைப்பண்பாட்டுக் கூறுகளாகக் கருதலாம். இதேபோன்று ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் ஆறுவகையான வட்டார அல்லது பிரதேச வேறுபாட்டுத்தன்மை இருக்கின்றன.

1. மட்டக்களப்பு
2. திருகோணமலை
3. வன்னி
4. மன்னார்
5. யாழ்ப்பாணம்
6. மலையகம்
7. மேற்குக் கரையோரம் (பிரதானமாகப் புத்தளம் முதல் நீர்கொழும்பு வரை)
8. தென்பகுதி (பாணந்துறை முதல் திக்கெல்லை வரை)

எனும் எட்டு வகையான வட்டாரப்பண்பாட்டை ஈழத்துதேசியத்தின் துணைப்பண்பாடாக பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிடுகிறார் (2010: ப.5).

தமிழகத்தில் உள்ள வட்டார அடிப்படையிலான துணைப் பண்பாடுகளுக்கிடையில் தேசியஇனங்கள் சார்ந்த வேறுபாடுகள் இல்லை. ஆனால் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில்

1. வடகிழக்கு தமிழ்ப்பகுதியைச் சார்ந்த பூர்வீகத் தமிழர்
2. இந்திய வம்சாவளியைச் சார்ந்த மலையகத் தமிழர்
3. இஸ்லாமியராக அடையாளப்படுத்திக் கொள்ளும் தமிழ்பேசும் முஸ்லிம்கள்

ஆகிய மூன்று வகையான தமிழ்த்தேசிய இனங்களின் வெளிப்பாட்டைப் பார்க்கமுடிகிறது. ஈழத்துத் தமிழ் இலக்கியம் ஒட்டுமொத்த தமிழ் இலக்கியத்தின் ஒரு துணைப்பண்பாடாக அமைகிறது. அத்துணைப்பண்பாடு பல உட்துணைப்பண்பாடுகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. இந்தியதேசிய பரப்பிற்குட்பட்ட தாய்த்தமிழ் இலக்கியம் மையமான இலக்கியமாகவும் ஏனையத் தமிழ்த் தேசிய இலக்கியங்கள் (ஈழம், சிங்கப்பூர், மலேசியா)அயலகத் தமிழ் இலக்கியமாக வரையறுக்கும் போக்கு நிகழ்கிறது. ஆயின் இது சார்பியலானது. இந்தியத் தமிழர்களுக்கு ஈழத்து இலக்கியம் அயலக இலக்கியமாக இருப்பதைப் போன்றே ஈழத்துத் தமிழர்களுக்கு இந்தியத் தமிழ்இலக்கியம் அயலக இலக்கியம்தான்.

## நாடுகடந்த தேசியமும் புவிசார் அரசியலும்

ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பதுகளில் இலங்கையில் நிகழ்ந்த பேரினவாத அரசியல் செயல்பாட்டால் ஈழத்தமிழர்கள் பலர் இங்கிலாந்து, பிரான்சு, கனடா, ஜெர்மனி, நார்வே, ஆஸ்திரேலியா உள்ளிட்ட இருபதிற்கும் மேற்பட்ட ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றனர். 1990களுக்குப் பிறகு, உலகெங்கும் உருவான பின்னைநவீனத்துவக் காலகட்டத்தில் செயற்கைக்கோள் வழியாக உருவான இணையதளமும் இணையதளவெளியும் சுழிய வெளியும் (Cyber space) தோற்றநிலையான எதார்த்தமும் (Virtual Reality) இலக்கியப் படைப்பாக்கத்திலும் இலக்கிய வாசிப்பிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின. வெளிக்குள் பயணமாகும்பொழுது, அதன் தேசிய எல்லைகள் தகர்ந்தன. வடவேங்கடம் தென்குமரி என்கிற இலக்கிய மையமும் தகர்ந்தது. உலகிலுள்ள எல்லா நாட்டுத் தமிழர்களும் எல்லைகளைக் கடந்து ஒரே இலக்கியப் பொதுவெளியில் செயல்படுவதற்கான சாத்தியம் ஏற்பட்டது. இணையதள இதழ்களின் உருவாக்கமும் ஈழத்தமிழர்களின் புலப்பெயர்வும் இச்செயல்பாட்டை மேலும் துரிதப்படுத்தியது. ஒரு தேசத்தின் அடையாளம் மொழி, நிலம் ஆகிய இரண்டின்வழி கட்டமைக்கப்படும். தேசிய இலக்கியத்தின் அடையாளமும் இத்தகையதே.

ஆனால், மேற்காட்டிய பின்னைநவீனத்துவச் சூழல்கள் தேசம், தேசிய இலக்கியம் என்பதை நிரந்தர நிலம் சார்ந்து வரையறுக்கமுடியாத சூழலை உருவாக்கின. தமிழ்த்தேசிய இலக்கியத்தின் அடையாளமாகத் தமிழ்மொழி மட்டுமே அமைந்தது. இதனால், தமிழ்த்தேசியம், நாடுகளைக்கடந்த தேசியமாக மாறியது. ஈழத்தமிழர்கள் நாடுகடந்த தேசிய அரசியலை புவிசார் அரசியலை - முன்னெடுப்பதும் இத்தகைய பின்புலத்தில்தான். தேசியம் என்பது நாடுகளைக் கடப்பது, தமிழ்த்தேசியத்தின் பிரச்சினை மட்டுமன்று. உலக நாடுகள் பலவற்றின் தேசிய அடையாளங்களும் நாடுகளைக் கடப்பது பொது நியதியாகிவிட்டது. ஐரோப்பிய முதலாளித்துவத்தின் உருவாக்கத்தில் - காலனியாதிக்கத்தில் - உருவான தேசிய வரைபடங்கள் இப்போது விவாதத்திற்குட்படுத்தப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட தேசிய நிலப்பரப்புக்குள் பல தேசிய இனங்கள் குடியேறுவதும் குடியிறக்கமாவதும் அகதிகளாக அடைக்கலமாவதும் பின்னைக்காலனிய சூழலில் எதார்த்தமான நிகழ்வு.

**தேசிய இலக்கியம் உலக இலக்கியமாதல்**

19,20ஆம் நூற்றாண்டுகளில் உருவான தேசியஇலக்கியங்களில் தேசப்பற்றும் தேசியம் சார்ந்த போராட்ட ஆவேசமும் தேசிய மனோபாவத்தின் முற்போக்கான வளர்ச்சியும் தேசத்தின் பழைய வரலாறும் நிலவியற் பெருமையும் விதந்து பேசப்பட்டன.

இந்தியத் தமிழ்தேசிய இலக்கியங்கள் இன்றைய சூழலில் ஒருபுறம் பெண்ணியம், தலித்தியம் போன்ற கூறுபடுத்தப்பட்ட நுண்ணரசியலையும் மற்றொரு புறம் உலகமயமாக்கத்தின் சர்வதேசியப் பிரச்சினைகளான சுற்றுச்சூழல் சிதைவு, குழும முதலாளித்துவத்தின் ஆதிக்கம் ஆகியன குறித்துப் பேசுபவையாக இருக்கின்றன. நிலப்பரப்பு சார்ந்த தேசிய அடையாளம் என்பது, இலக்கியச் சொல்லாடல்களுக்குள் வராத அரசியல் சார்ந்த சொல்லாடல்களாகவே மாறிவிட்டது. 'கோதே'யும் 'காரல் மார்க்ஸ்' குறிப்பிட்ட உலகஇலக்கியம் குறித்த விழிப்புணர்வு கவனம் பெறுகின்றது. மொழிபெயர்ப்புகள் ஓர் இலக்கியத்திற்குள் பன்மை இலக்கிய அமைப்புகளை உருவாக்குவதாக 'இவான் சோகர்' குறிப்பிடுவார். மொழிபெயர்ப்புகளின் வழியே தமிழ் இலக்கியத்திற்குள் மலையாள இலக்கியம், கஷ்மீரி இலக்கியம், சீன இலக்கியம், பிரெஞ்சு இலக்கியம், ஆங்கில இலக்கியம் எனப் பல தேசிய இலக்கியங்கள் வந்து சேர்கின்றன. இதன் வாயிலாகத் தமிழிலக்கியப் பரப்புக்குள் இலக்கியங்கள் ஒன்று கலக்கின்றன. உலக எழுத்தாளர்களின் வேறுபட்ட அனுபவங்கள் தமிழ் வாசக மனங்களுக்குக் கிடைக்கின்றன. ஆனால், இன்றைய தமிழ்த்தேசிய இலக்கியம் இத்தகைய வேறுபட்ட உலக அனுபவங்களைத் தமிழ்ப்படைப்பாளிகளின் மனங்கள் வாயிலாகவே கிடைக்கச் செய்கின்றது. தமிழ்ப்படைப்பாளிகளின் அனுபவ மண்டலங்களுக்குள் வேறுபட்ட உலக அனுபவங்கள் ஊடுருவுகின்றன. புலம்பெயர்ந்தோர் இலக்கியம் இதனைச் சாத்தியப்படுத்தியிருக்கின்றது. தமிழின் மரபான ஐந்து திணைகளைக் (நிலம்) கடந்து, ஆறாந்திணையாக இவ்விலக்கியம் உருவெடுக்கின்றது. இருபது நூற்றாண்டுத் தமிழிலக்கியங்களுக்குள் வந்துசேராத ஐரோப்பிய, அராபிய அயல்திணைகள் எலும்பைத் துளைக்கும் ஊசிக்குளிரும் அனுபவ வந்துசேர்கின்றன.

வெண்பனி படர்ந்த நிலப்பரப்புகளும் நள்ளிரவுச்சூரியனும்-ஓக், பைன், அஸ்க், கிரான் மரங்களும்- மக்பாய் பறவையும்-வேசிகள் நடமாடும் பாரிஸ் நகரத்தெருக்களும்- ஜெர்மன் நாட்டு நிறவெறியர்கள் ஆயுதங்களுடன் அலையும் அல்ஜீரியக் கறுப்பர்களும் 'லக்சம்பரக்' வீதிகளும் தமிழ்க் கவிதைகளுக்குள்ளும் கதைகளுக்குள்ளும் மிதந்து திரிகின்றனர். தமிழிலக்கியத்தின் முகம் தேச எல்லைகளைக்கடந்து, உலக இலக்கியமாக மலர்ந்துள்ளது.

**துணைநூற்பட்டியல்**



1. ஆனந்தகுமார்.பா, "தமிழ்த் தேசிய இலக்கியங்கள் - வரையறைகளும் அடையாளங்களும்", காக்கைச் சிறகினிலே, மாத இதழ், மார்ச்சு 2018.
2. ஆனந்தகுமார்.பா, "பாரதியார் கவிதைகளில் தேசியம் - ஒரு பின்னைக் காலனிய வாசிப்பு", பாரதி என்றென்றும், பொன்னீலன் (ப.ஆ.,), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,சென்னை, 2008.
3. கைலாசபதி.க, ஈழத்து இலக்கிய முன்னோடிகள், மக்கள் வெளியீடு, சென்னை, 1986.
4. சிவத்தம்பி.கா, ஈழத்தில் தமிழ் இலக்கியம், குமரன் புத்தக இல்லம், FOTOT, 2010.
5. Carole Gerson, The Changing Contours of a National Literature, National council of Teachers of English, December 1988, Vol.50, No.8.
6. Christopher Clausen, "National Literatures in English" : Toward a New Paradigm, New literary History, Winter, 1994, vol.25, No. 1


*(இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 30.05.2023 அன்று நடைபெற்ற 7ஆவது சர்வதேசத் தமிழியல் ஆய்வு மாநாட்டில் வாசிக்கப்பட்ட மாநாட்டு மையவுரை)*

●


கட்டுரையாளர், பேராசிரியர், தமிழ்த்துறை, காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகம், காந்தி கிராமம், திண்டுக்கல்.

## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மதுரை கிளையின் சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சிகள்



20.09.2023 அன்று விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புத்தகக் கண்காட்சியை சாத்தூர் நகர்மன்றத் தலைவர் குருசாமி அவர்கள் திறந்துவைத்தார். இதில் த.க.இ.பெ.ம மாநிலச் செயலாளர் டாக்டர் த.அறம், என்சிபிஎச் மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி மற்றும் மதுரை கிளை மேலாளர் மகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



26.09.2023 அன்று அருப்புக்கோட்டை எஸ்.பி.கே. கல்லூரியில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியை கல்லூரி முதல்வர் கே.செல்லத்தாய் அவர்கள் திறந்து வைத்தார். இதில் துணை முதல்வர் ஜாக்லின், நூலகர் பிரியா, கிளை மேலாளர் மகேந்திரன் மற்றும் பழனிவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கட்டுரை







# தன்னளவிலும் உலகம் சார்ந்தும் தனக்கான இடத்தைப் பெறும் இரு படைப்புகள்

முனைவர் செ.ர.கார்த்திக் குமரன்

**தொடக்கமாக**

சமகால நவீனத் தமிழ் இலக்கியப் படைப்புகளில், மொழிபெயர்ப்புப் பிரதிகளானது, தொடர்ந்து சில பதிப்பகங்களால் வெளிவந்து கொண்டிருப்பதால்தான் தேசியம் மற்றும் உலகளாவிய நாடுகளில் நிகழ்ந்த/ நிகழ்கின்ற சமூகப் பொருளாதார அரசியல் நிலைகளை அறிந்துகொள்ளவும் முடிகின்றன. இதன்வழி, வாசிப்புத் தளத்தின் பரப்பானது விரிவடைவதுடன், பல்வேறு விதமான மாற்றங்களுக்கும் சிந்தனைகளுக்கும் நம்மை இட்டுச்செல்கின்றன. இதனால் பல புதிய எழுத்தாளர்கள் வாசகர்களுக்கு அறிமுகமாவதோடு, அவர்களின் நிலம் சார்ந்த பிற படைப்பாளர்களின் படைப்புகளையும் வாசிக்க வேண்டிய தேவையையும் தூண்டுதலையும் ஏற்படுத்தி விடுகின்றன. தமிழில் எழுதப்படுகிற ஆழ்ந்த, மிகநுட்பமான கருத்தாக்கங்களை உள்ளடக்கங்களாகக் கொண்ட தரமிகு படைப்புகளை வாசிக்க நேரிடும்போது, அதன் உருவம், சூழல், இடம், காலம் போன்ற இலக்கண வரையறைகளை (புனைகதை) மீறியும் பாதிப்பினை உண்டாக்கியும் தனக்கான தனித்த இடத்தினை அப்பிரதி பெற்றுவிடுகிறது. இதேபோல மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய பிற மொழிகளிலுள்ள இலக்கியத் தரமான படைப்புகளைத் தேடி வாசிக்கவும் வழிவகுக்கிறது. மேலும், அந்நியமொழி சார்ந்த படைப்புகளும் தமிழில் வெளிவருவதன் பொருட்டு, அப்பிரதிகளையும் வாசிக்க வேண்டும் என்ற எண்ணமும் இயல்பாகவே தோன்றிவிடுகின்றன.

தமிழ்ப் புனைகதைப் படைப்புத் தளத்தில் பெரும்பங்காற்றிய படைப்பாளர்கள் பலர் இருப்பினும் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்களே தங்களின் படைப்புகளினூடாக மாற்று கருத்தாக்கத்தினை புதியதொரு நடையில் எழுத்துருவாக்கியுள்ளனர். இத்தன்மையானது பிராந்திய மற்றும் அந்நிய மொழிகளிலுமே தங்களின் படைப்புகளின் ஊடாகக் காணமுடிகின்றன. இப்படிப்பட்ட பிரதிகள் காலந்தோறும் ஒரு சில படைப்பாளர்களால் படைக்கப்பட்டு, அது உலகம் தழுவிய அளவில் கவனமும் அதற்கான அங்கீகாரமும் விருதுகளும் கிடைக்கப்பெறுகின்றன. இந்தியாவில் ஞானபீடம், சாகித்திய அகாதெமியும் உலகயளவில் நோபல், புக்கர் போன்ற பரிசுகளும் படைப்புத் தடத்தில்

இயங்கும் எழுத்தாளர்களுக்கு கிடைக்கும் ஒரு கௌரவமாகவும் பொருளாதார ரீதியில் அவர்களின் எழுத்துலக வாழ்க்கைக்கு சிறந்ததொரு பயனையும் தரவல்லதாக இருக்கின்றது. இத்துடன், இலக்கியம் குறித்த கவனத்தை, பொதுமக்களிடையேயும் கல்விசார் மக்களிடையேயும் ஏற்படச் செய்து, மற்ற படைப்பாளர்களை ஊக்குவிக்கவும் செய்கின்றது. இதனால், இப்படைப்புகள் மட்டுமே சிறந்தது என்று எண்ணுதலால் பயன்தராது. இப்பிரதிகளைப்போலவே அல்லது இதற்கும் மேம்பட்ட படைப்புகளைத் தேடியடைந்து வாசிக்கும் போதுதான் இலக்கியத் தரம் பற்றிய புரிதலை அறியமுடியும்.

காலமாற்றித்திற்கேற்ற வகையில் இப்புனைகதை வடிவங்களும் மாற்றம்பெற்றே வந்துள்ளன என்பதை வாசிப்பினூடே உணர்ந்துகொள்ள முடியும். எனினும் கடந்தகாலத்தில் நிகழ்ந்த வரலாறுகளை, தற்காலச் சூழலோடு பொருத்திப் பார்க்கும் விதமாகவும் நிகழ்கால அரசியலின் தன்மைகளையும் அதன் தீவிரத்தினையும் எடுத்துரைக்கும் நடையிலும் படைப்புகள் படைக்கப்படுகின்றன. அந்தவகையில், கன்னட மொழிப் படைப்பான நேமிச்சந்த்ராவின் ‘யாத்வஷேம்’*(yaad vashem)* என்ற பிரதியும் ஆப்கான் எழுத்தாளரான காலித் ஹுசைனியின் ‘ஆயிரம் சூரியப் பேரொளி’*(A Thousand Splendid Sons)* ஆகிய இரு மொழிபெயர்ப்புப் படைப்புகளின் தனித்தன்மையை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமையப்பெற்றுள்ளது. தங்களின் அரசியல் ஆளுகைக்கு கீழ் நிகழ்த்தப்படுகின்ற வன்முறைகளையும் அதனால் அந்நிலப்பகுதிசார் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை உள்ளடக்கங்களாகக் கொண்ட இவ்விரு படைப்புகளின் வழி காணலாகிறது. மேலும், இது சமகால பன்னாட்டு அரசியல் சார்ந்த செயல்பாடுகளின் நோக்கங்களையும் இதனால் இந்திய அரசியல் சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்களை அறிவதற்கும் இப்புனைவுகளை ஆராய்வது அவசியமாகின்றன.

**யாத்வஷேம் : நேமிச்சந்த்ரா**

கர்நாடக சாகித்ய அகாதமி விருதுபெற்ற ‘யாத்வஷேம்’ நேமிச்சந்த்ரா என்ற பெண் எழுத்தாளரால் படைக்கப்பட்டுள்ளது. இவருடைய ‘ஒளிக்கொரு கிரணம் மேரிக்யூரி’, ‘பெருவின் புனித பள்ளத்தாக்கில்’ ஆகிய நூல்களும் இந்த விருதினைப் பெற்றுள்ளது. பொறியியலாளரான இவர், இந்துஸ்தான் ஏரோனாடிகல் லிமிடெட், பெங்களூரில் டிசைன் எஞ்சினீயராகவும், ஜெனரல் மேனேஜராகவும் பணியாற்றியவர். இலக்கியம், அறிவியல், பெண்களைப் பற்றிய ஆய்வு, பயணம் ஆகியவற்றில் முக்கிய விருப்பங்கள் கொண்ட இவர், முப்பது நூல்களை கன்னடத்தில் எழுதியுள்ளார். ‘தான சிந்தாமணி அத்திமப்பே’ விருது, ‘சிவராமகாரந்த’ விருது, ‘மாஸ்தி வெங்கடேச ஐய்யங்கார்’ விருது, ‘கிருஷ்ணானந்த காமத்’ விருது என இலக்கியத்திற்காக பல விருதுகளைப் பெற்றவர். இத்துடன், ‘சொசைட்டி ஆஃப் இண்டியன் ஏரோஸ்பேஸ் டெக்னாலஜி அண்ட் இண்டஸ்ட்ரீஸ்’ அளித்த ‘விமன் அச்சிவர் இன் ஏரோஸ்பேஸ்’ விருதும் கிடைத்துள்ளது.

கே. நல்லதம்பி என்பவரால் இந்நாவலானது, தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அக்டோபர் 2020இல் எதிர் வெளியீடாக வந்துள்ளதோடு, 2022ஆம் ஆண்டின் சிறந்த மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாதெமி விருதும் கிடைக்கப்பெற்றுள்ளது. உலகம் முழுமைக்கும் தன் ஆளுகைக்குள் கொண்டு வர நினைத்த ஜெர்மனியின் அதிபரான ஹிட்லர் பற்றிய வரலாற்றினை இப்பிரதி எடுத்துரைக்கிறது. ஜெர்மனியின் தலைநகரான பெர்லினில் வசித்துவரும் ஒரு யூதக் குடும்பம் ஹிட்லரின் ஆட்சியினால் அம்மண்ணிலிருந்து புலம்பெயர்ந்து காந்தியின் மண்ணிற்கு(பம்பாய்) வந்த குட்டி யூதச் சிறுமியின்(ஹ்யானா-அனிதா) கதைதான் யாத்வஷேம். யூதர்களின் உலகைத் திறந்துகாட்டும் விதமாக பன்னிரண்டு ஆண்டுகால உழைப்பில் உருவானது. ஜெர்மனி, நியூயார்க், இஸ்ரேல் ஆகிய நாடுகளில், ஹிட்லரால் வதைமுகாம்களில் கொல்லப்பட்ட யூதர்களின் பெயர்ப்பட்டியலோடு கூடிய அருங்காட்சியங்கள் பற்றிய தகவல்களையும் இன்னபிறவற்றையும் அகற்றமுடியாத வலியோடு இப்பிரதி புலப்படுத்தியுள்ளன.

ஹிட்லர் தனது ஆட்சி அதிகாரத்தினூடாக அறிவியலாளர்கள், விஞ்ஞானிகள், பொறியியல் வல்லுனர்கள், மருத்துவர்கள் ஆகியவர்களின் துணைகொண்டு, ஆஷ்விட்ச் மற்றும் ஆர்ம்ஸ்டர்டாம் என்ற இரு வதைமுகாம்களை உருவாக்கினார். இதன் வழி யூதர்களை (ஆறு மில்லியன்) பேரழிவிற்குள்ளாக்கி, உலகிலுள்ள ஒட்டுமொத்த மனிதசமூகத்திற்கும் அச்சத்தை விளைவித்ததோடு, உலகையே தன்வசப்படுத்த நினைத்தார். அதனால் அன்று பற்றி எரிந்தது ஜெர்மனி; நின்று பார்த்தது உலகம். ஐரோப்பிய நாடுகளில் உருவாக்கப்பட்ட (மக்களின்) தேசிய அடையாள அட்டையின் தரவுகளால்தான் யூதர் என்ற இனமே தம் சொந்த மண்ணில் வாழமுடியாமல், பல்வேறு நாடுகளுக்குச் சென்று வாழநேர்ந்தது. இப்பிரதியும் ஒரு குடும்பத்தின் சீர்குலைவையும் அதில் உயிரோடிருக்கும் பெண்ணின் நினைவுத்தடமும் தேடலுமே இதன் உருவம்.

பல சாதி, சமய, இனங்களையும் பன்முகப்பட்ட கலாச்சாரங்களையும் கொண்ட இந்தியாவில் பம்பாய்க்கு வரும் ஹ்யானா என்ற அனிதாவும் அவளுடைய தந்தையாரும் இங்கு காணநேரும் ஓர்மையுள்ள வாழ்வியலையும் தன்னுடைய நாட்டிற்குமான நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். இத்துடன், அவர்கள் நம்பவேமுடியாத அளவிற்கு, ஆயிரம் சாதிகளுக்கு நடுவிலும் வாழக்கூடிய இந்தியாவின்

ரகசியத்தை இம்மண்ணிலுள்ள குடும்பங்களின் வழி கண்டுணர்கின்றனர். தன்னுடைய தந்தை, தாய், அக்கா(ரெபேக்கா), குட்டித்தம்பி(ஐசாக்) ஆகியோருடன் ஹ்யானா இன்பமான வாழ்வியலை மேற்கொண்டார். 1933இல் ஹிட்லர் ஆட்சிக்கு வந்த பிற்பாடு, தன் குடும்பமே சிதைவுறுகிறது. தந்தையும் ஹ்யானாவும் தப்பித்து, நாட்டை விட்டு வெளியேற, மற்ற மூவரும் நாஜி காவலர்களால் கைது செய்யப்படுகிறார்கள். அவர்களின் நிலையை அறியவேண்டும் என்ற எண்ணம் ஹ்யானாவிற்குள் சதாகாலமும் எழுகிறது. அவள் விவேக்கை திருமணம் செய்து கொள்கிறாள். விசு என்ற ஆண் குழந்தையை பெற்றெடுக்கிறாள்.

தன் சொந்த மண்ணை விட்டு வந்து, ஏறத்தாழ 55வருடங்களை கடந்த பின்னும் தன் குடும்ப நபர்களைத் தேடி ஆர்ம்ஸ்டர்டாம், டகாவ், நியூயார்க், வாஷிங்டன் டி.சி., டெல் அவிவ், ஜெரூசலம் ஆகிய நகரங்களுக்குச் செல்கிறாள். இதன்வழி அவள் அடைந்த உணர்வுகளையும் அத்தேடலினூடாக ரெபேக்காவை கண்டடைந்ததையும் இப்பிரதி விவரிக்கிறது. இத்துடன், நாஜி ஹிட்லர் வதைமுகாம்களிலும் ஜெர்மனியில் உள்ள மக்களின் மீதும் செய்த கொடூரத்தினை, அவலங்களை ரெபேக்காவின் வழி உலகிற்கு எடுத்துரைத்துள்ளார் நேமிச்சந்த்ரா.

“மனது எங்கோ ஓடியது. யார் மீதமிருக்கலாம், என் வம்சத்தில், அப்பாவின் இரண்டு அண்ணன்கள், ஒரு தங்கை, அம்மாவின் மூன்று தம்பிகள், அம்மா, அக்கா, சின்னத் தம்பி - என் இரத்தத்தைப் பகிர்ந்துகொண்ட யார் மீதமிருக்கலாம்? உயிருடன் இருப்பார்களா? தேடலாமா? என் வாழ்க்கையில் என்றாவது ஐரோப்பாவிற்குப் போவேனா. ஒவ்வொரு கதவாகத் தட்டி இமா இருக்கியா? ரெபேக்கா எங்கே இருக்கே? ஐசாக், என் குட்டிக் கண்ணா எங்கே இருக்க? தேடமுடியுமா. என்றாவது தெரியவருமா, என்னவர்கள் என்ன ஆனார்கள் என்று, என் வம்சத்தின் கதை? என் பிள்ளைகளுக்கு, பேரக்குழந்தைகளுக்கு என் அத்தையைப் போலவே நானும் என் வம்சத்தின் கதைகளைச் சொல்லமுடியுமா?

என்னவென்று சொல்வேன், பெர்லின் பால்யத்தின் இனிமையான நினைவுகளை இரத்தம் பொதிந்த இரவுகள் துரத்திக்கொண்டு வருகின்றன.”[1] என்ற பதற்றமான, மனதிலிருந்து ஆறாத வலியுடன்கூடிய வாழ்வையே யூதர்கள் பெற்றுள்ளதை இது வெளிப்படுத்தியுள்ளது. சர்வதிகாரியின் ஆட்சியில் ஆயிரம் ஆயிரம் யூதர்கள், தங்களின் பூர்விகத்தை விட்டு, அவசர, அவசியமாக வெளியேறி, உயிரைத் தற்காத்துக்கொள்ள வேண்டியிருந்தது. இதற்கெதிராக யாரும் செயல்பட முடியாத சூழலையும் நாஜிகள் ஏற்படுத்தியிருந்தனர்.

“அறுபது லட்சம் யூதர்களையும், கணக்கில்லாத கம்யூனிஸ்ட்களையும், உடல் ஊனமுற்றோரையும் கொடூரமாகக் கொன்று குவித்த போதிலும், நாஜி ஜெர்மனியில் ஹிட்லருக்கு எதிரான குரல் கேட்கவில்லை விவேக். மக்கள் வீதியில் இறங்கி மற்றொரு கூட்டத்து மக்களின் மீது நடக்கும் மனிதத்தன்மையற்ற சுரண்டலை எதிர்க்கவில்லை. வரலாற்றின் இரத்தம் தோய்ந்த பக்கங்கள் அன்றே முடிந்துவிட்டன என்று எனக்குத் தோன்றவில்லை விவேக். இது ஒரு ஹிட்லரின் மதி இழந்த நீதியால் நடந்த வரலாற்றுச் சோகச் சம்பவம் அல்ல. நன்கு யோசித்துத் திட்டமிட்டு நடத்தப்பட்ட கொலைகள் அவை...”[2] என்கின்ற தன்மையில் ஹிட்லர், தான் ஆட்சி அதிகாரத்துக்கு வந்தவுடன் செய்த கொடூரங்களானவை, முன்கூட்டியே தீர்மானித்துவிட்டு, அதை நடைமுறைப்படுத்தியதே. 1935இல் ஹிட்லரின் நியூரெம்பர்க் சட்டமானது, முக்கியமாக யூதர்களுக்கு எதிராக உருவாக்கப்பட்டது. யூதர்களின் நாகரிகம், சமுதாய, உத்தியோக உரிமைகளை முடக்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டம் அது. ஆரியர்கள் அல்லாத இனத்தவருக்கு அது அச்சுறுத்தலாக இருந்தது. அச்சட்டம் பலருக்கு வரும் துன்பவெள்ளத்திற்கான முன் அறிவிப்பை தந்தது. இதனால், யூதர்கள் ஜெர்மனியை விட்டு வெளியேறும் வழிகளைத் தேடிக்கொண்டிருந்தார்கள். பல தலைமுறைகளாக வேர்விட்டு வளர்ந்த யூதர்களின் நிலத்தைத் திருடி, அவர்களை வேரோடு பெயர்த்துவிடும் பயங்கரத் திட்டமாக இருந்தது. இதன் விளைவே பின்னாட்களில் வதைமுகாம்களை உருவாக்கி, பல்லாயிரக்கணக்கான மக்களை கொன்று குவித்தார் என்பதை வேதனையுடன் அறியமுடிகிறது.

தான் விரும்பியது எதையும் சாதிக்கமுடியாத சிறுவன் ஆடோல்ஃப். பள்ளியில் தேறாத, திருமணம் ஆகாதவர்களுக்குப் பிறந்தவன். தோல்வியின் யதார்த்தத்தில் துவண்ட அவன் மனது, சகிப்பின்மை, கோபம், வெறுப்புக்களை மட்டுமே கொண்டு வளர்ந்துள்ளான். இதனால்தான் மரணமுகாம்களை எழுப்பி, தமக்குள் இருக்கும் இருள் நிறைந்த இரகசிய பாகத்தின் வழி, மற்றொருவரின் சாவை இத்தனை அமைதியாகச் செய்தான் போலும். எனினும் ஹிட்லர் மனித வரலாற்றில் தன்னந்தனியாக தோன்றியவன் இல்லை. மனித வாழ்க்கையில், பன்முகப்பட்ட எதிர்பாராக் கொடூரங்களைச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்பதற்கு ஒரு உதாரணம்தான் ஆடோல்ஃப் ஹிட்லர். இக்குணம் சமகாலத்தில் வாழும் மக்களின் உள்ளுணர்வுகளிலும் அதிகாரம் செய்வோரிடத்தும் மறைமுகமான தன்மையில் இருந்துகொண்டேதான் உள்ளன என்பதனையும் நேமிச்சந்த்ரா இப்படைப்பினூடாக எடுத்தியம்புகிறார்.

**ஆயிரம் சூரியப் பேரொளி : காலித் ஹுசைனி**

ஆப்கானிஸ்தான் எழுத்தாளரான காலித் ஹுசைனி எழுதிய நாவல்தான் ஆயிரம் சூரியப் பேரொளி (A Thousand Splendid Sons). தமிழில் ஷஜிதா என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டு, ஜனவரி 2020இல் (எதிர் வெளியீடு) இந்நாவல் வெளிவந்தது. 1965இல் காபூலில் பிறந்த காலித் ஹுசைனி, 1978இல் அங்கு உருவான மக்கட் புரட்சியைத் தொடர்ந்து நிகழ்ந்த ரஷ்யர்களின் ஊடுருவலுக்குப் பிறகு 1980இல் அவருடைய குடும்பத்தினர் அங்கிருந்து புலம்பெயர்ந்து அமெரிக்காவில் தஞ்சமடைந்தனர். 32 வருடங்களாக உலக அளவில் அதிகமான அகதிகளை உண்டாக்கும் நாடாக, ஆப்கானிஸ்தான் அறியப்பட்டிருக்கிறது. 2006இல், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் முகமைக்கு அமெரிக்காவின் நல்லிணக்கத் தூதுவராக அவர் நியமிக்கப்பட்டார். தன்னுடைய தாய்நாட்டிற்காகத் தொடர்ந்து குரல் எழுப்பவும் எழுத்துப்பணியில் தீவிரமாக ஈடுபடவும் தாயகம் திரும்பும் மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தரவும் தன் மருத்துவப்பணியையே கைவிட்டிருக்கிறார்.

ஆப்கானில் தொடர்ச்சியான அந்நியப் படையெடுப்புகள், ஆட்சிக் கவிழ்ப்புகள் ஆகியவற்றால் அலைவுகளுக்குட்பட்ட நாட்டில் பல நூற்றாண்டுகளாக இரண்டாம்தரக் குடிமக்களாகவே நடத்தப்பட்டு வந்திருந்த அந்நாட்டின் பெண்களுக்கு, முஜாஹிதீன்கள் மற்றும் தாலிபன்கள் மதத்தின் பெயரால் நிகழ்த்திய வன்முறைகளைப் பதிவுசெய்யும் விதமாகவே இந்நாவல் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் வெளிவந்த 'பட்ட விரட்டி' (The Kite Runner) என்ற நாவலும் ஆப்கானில் நிகழ்ந்த கொடூரங்களையும், இனவெறி, மதவெறி மற்றும் ஆதிக்கவுணர்வினால் ஏற்படும் சிக்கல்களையும் அமீர், ஹசன் என்ற இரு கதாபாத்திரங்களின் ஊடாக எழுத்துருவாக்கியுள்ளார். இத்துடன், ஆப்கானிஸ்தானின் முடியரசின் வீழ்ச்சி, சோவியத் படையெடுப்பு, பாகிஸ்தானுக்கும் அமெரிக்காவுக்குமான மக்கள் வெளியேற்றம் மற்றும் தாலிபன் ஆட்சியின் காலகட்டங்களை புலப்படுத்தும் விதமாக இக்கதை அமைக்கப்பட்டிருக்கிறது. இவருடைய நாவல்கள் உலகெங்கிலும் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, கோடிகளுக்கு மேல் விற்பனையாகியும் சிறந்த கதைசொல்லியாகவும் திகழ்கிறார். உலகில் உள்ள சிறந்த பத்திரிக்கைகள் இவருடைய கதை சொல்லும் திறனையும் நடை மற்றும் பாணியையும் நாவலுக்கான எல்லா நுணுக்கங்களையும் தன் எழுத்தில் கொண்டிருப்பதாக கருத்துரைக்கின்றனர்.

மரியம் மற்றும் லைலா என்ற இரு பெண் கதாபாத்திரங்களின் வழி தாலிபன்களின் கொடுங்கோலாட்சியில் பெண்கள் அனுபவித்த அல்லல்களை, நீக்கவொண்ணா துயரங்களை உலகிற்கு தன் ஆற்றல்மிக்க எழுத்தினால் வெளிப்படுத்தியுள்ளார். ஹெராத்திலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ள குல்-தமானில் மரியம் ஹராமில் (முறைகேடாகப் பிறந்தவர்) பிறந்தவள். ஹெராத்தில் செல்வசெழிப்புடன் வசிக்கும் ஜலீல் தான் அவளுடைய தந்தை. மரியத்தை நாணா பிரசவித்த 1959இல் வசந்தத்தின் ஈரப்பதமான மழைநாளில், ராஜா ஜாஹிர் ஷாவின் மகாமோசமான 40 ஆண்டுகால ஆட்சியின் 26 ஆவது வருடத்தில் நிகழ்ந்தது. வலிப்புநோயின் காரணமாக நாணா இறந்துவிட மரியத்தை தன் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறார் ஜலீல். இதனைப் பொறுத்துகொள்ள முடியாத கதீஜா (ஜலீலின் முதல் மனைவி) மற்றும் அவருடைய குடும்பத்தினர் 15 வயதான மரியாவுக்கு, 45 வயதிலிருக்கும் ரஷீதை திருமணம் செய்வித்து, காபூலுக்கு அனுப்பப்படுகிறாள்.

லைலா தன் பெற்றோர்களான ஹக்கீம், ஃபர்பீனுடனும் சகோதரர்களான அஹமத், நூருடன் காபூலில் வாழ்ந்து வருகிறாள். இராணுவத்தில் சேர்ந்த அவளுடைய சகோதரர்கள் போரில் இறந்துவிட, அதன் காரணமாக பெஷாவருக்கு செல்ல நினைக்கின்றனர். பயணத்திற்கு தயாராகும் நிலையில்,

"லைலா புத்தகங்களைத் தன் பாதங்களின் கீழே போட்டாள். கண்களின் மீது ஒரு கையால் அரண் அமைத்தாள். மேலே நிமிர்ந்து வானத்தைப் பார்த்தாள்.

பிறகு, ஒரு ராட்சத உறுமல் கேட்டது.

அவளுக்குப் பின்னால், வெண்ணொளிச் சிதறல் ஒன்று எழுந்தது.

அவளுடைய பாதங்களுக்குக் கீழே பூமி நழுவியது.

சூடான, சக்திமிக்க எதுவோ ஒன்று, பின்னாலிருந்து பாய்ந்து அவளுக்குள் மோதியது. அவளுடைய செருப்புக்களை, அவளுடைய பாதங்களில் இருந்து அது உதறச்செய்தது. அவளை உயரே தூக்கியது. இதோ அவள் பறக்கிறாள், விண்ணில் சுற்றிச் சுழல்கிறாள், வானத்தைப் பார்க்கிறாள், பிறகு பூமியை, வானத்தை, பிறகு பூமியை. எரிந்துகொண்டிருந்த மரத்துண்டு ஒன்று அவளை உராய்ந்துகொண்டு பறந்தது. ஆயிரக்கணக்கான கண்ணாடிச்சில்லுகளும் அப்படியே பறந்ததில் அவளைச் சுற்றிப்பறந்த ஒவ்வொரு தனிச் சில்லையும் லைலா பார்த்தாள். மெல்லச் சுழன்று பறந்த அவற்றின் மீது சூரிய ஒளி பாய்ந்தது. சிறிய அழகான வானவில்கள் ஒளிர்ந்தன.

பிறகு, லைலா சுவரில் மோதினாள், நொறுங்கித் தரையில் வீழ்ந்தாள், அவளுடைய முகத்திலும், கைகளிலும், மண்ணும், கண்ணாடிச்சில்லும், கற்களும் குவித்தன. கடைசியாக அவள் உணர்ந்தது அவளுக்கு அருகில், மண்ணில், சப்தத்துடன் ஏதோ விழுந்ததை. ரத்தக்களரியான ஏதோ ஒன்று. அதன் மீது, சிவப்பு பாலத்தின் முனை, கனத்த பனிக்குள்ளிருந்து எட்டிப்பார்த்தது தெரிந்தது.

அவளைச்சுற்றி உருவங்கள் நகர்ந்தன[3]. மேற்கூரையிலிருந்து மஞ்சள் விளக்கொன்று எரிகிறது. ஒரு பெண்ணின் முகம் தோன்றுகிறது. அவளிடம் குனிகிறது.

லைலா மீண்டும் இருளுக்குள் கரைந்தாள்.''[3] திடீரென நிகழ்ந்த ஏவுகணை தாக்குதலினால், தன் பெற்றோர்கள் இறக்க, மரணத்தின் விளிம்பிலிருந்து தப்பித்து, மரியத்திடம் உதவியைப் பெறுகிறாள். ரஷீத் அவளிடம் உறவுகொண்டு, அஸீஸைப் பெற்றெடுக்கிறாள். பிறகு, அவனின் நடவடிக்கைகள் பிடிக்காமல், இருவரும் பெஷாவருக்கு செல்ல திட்டமிடுகிறார்கள். அதனால் அவர்களுக்கு நிகழும் பிரச்சினைகளையும் தாலிபன்களால் ஆப்கானில் பெண்களுக்கு ஏற்படும் சிக்கல்களையும் சொல்வதாக கதை நகர்கிறது.

ஆப்கானிஸ்தான் நிலத்தில் துப்பாக்கி குண்டுகள், ஏவுகணைத் தாக்குதல்கள், ரஷ்ய இராணுவம், தாலிபன்கள், அமெரிக்கத் துருப்புகள் மற்றும் சிமிகி, அரசு நடவடிக்கைகள், அரசியல் பூசல்கள், அல்கொய்தா போன்றவற்றால் மக்களின் இயல்பு வாழ்க்கையே(நொடிக்கு நொடி) பெரும் இன்னல்களுக்கும் நெருக்கடிகளுக்கும் சிக்கல்களுக்கும் ஆளாவதை இப்பிரதி முழுமைக்கும் காலித் பதிவுசெய்துள்ளார். 1959ஆம் ஆண்டிலிருந்து 2011 வரை ஏறத்தாழ 52 வருடங்களில் ஆப்கானிய மண்ணில் நிகழ்ந்த அரசியல் வரலாற்றினை உலகிற்கு எடுத்துரைத்துள்ளார். இத்துடன், இந்நிலத்தை தங்களுக்கு ஏதுவான முறையில் பயன்படுத்திக்கொண்ட வல்லரசு நாடுகளின் சூழ்ச்சியினையும் இதனால் தங்கள் நாட்டிற்குள் நிகழ்ந்த வன்முறைகளை, இழப்புகளை *(World Trade Center, New York, The Pentagon - Sep 11, 2011)* இந்நாவலினூடாக அறியநேர்கிறது.

''ஏப்ரல் 27 அன்று மரியத்தின் கேள்விக்கு, பலத்த வெடிச்சப்தமும், திடீரென்றெழுந்த கடுமையான முழங்கோசைகளும் பதிலாக வந்தன. வெறுங்கால்களோடு வரவேற்பறைக்கு ஓடியவள், ஏற்கனவே அங்கே கலைந்த தலையும், பனியனுமாக, சன்னல் கண்ணாடியில் உள்ளங்கைகளைப் பதித்துக்கொண்டு ரஷீத் நின்றிருப்பதைக் கண்டாள். அவனுக்கு அடுத்திருந்த சன்னலுக்கு அவள் ஓடினாள். வானத்தில் ராணுவ விமானங்கள் வடக்கு நோக்கியும் கிழக்குப்புறமாகவும் சீறிக்கொண்டு பறப்பதைப் பார்த்தாள். செவிடாக்கக்கூடிய அவற்றின் அலறல் அவளுடைய காதுகளை நோகச் செய்தது. தொலைதூரத்தில் பலத்த வெடியோசைகள் எதிரொலிக்க, திடீர் புகை மண்டலங்கள் கிளம்பி விண்ணுக்கு உயர்ந்தன.

''என்ன நடக்கிறது ரஷீத்? என்ன இது?'' அவள் கேட்டாள்.

''இறைவனுக்குத்தான் தெரியும்.'' அவன் முணுமுணுத்தான்.''[4] யாரும் எதிர்பாராத சமயத்தில் நிகழும் ஏவுகணை தாக்குதல்களாலும் குண்டுவெடிப்புகளாலும் உயிர்கள் பலியாவதும் உடல் பாகங்கள் சேதமடைந்து ஊனமாவதும் தொடர்ந்து ஏற்படுகின்றன. தங்களுடைய வாழ்வே எவ்வித பிடிமானம் அற்று, எந்நேரமும் பதைபதைப்புடன்கூடிய சூழ்நிலை இருப்பதால்தான், அம்மக்கள் பெஷாவர், ஈரான், கனடா, அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளுக்கு புலம்பெயர்கின்றனர். பாகிஸ்தானில் மட்டும் ஏறத்தாழ 2 மில்லியன் ஆப்கானிய மக்கள் அகதிகளான வந்துள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். மனிதனுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் கூடக் கிடைக்கப்பெறாமல், ஒரு பகுதி மக்கள் நாடோடிகளாக இருக்கும் நிலையில், உலகத்திலுள்ள பிறர் சகலவிதமான வசதி வாய்ப்புகளைப் பெறுகின்றனர். இதனை உலகம் தழுவிய பிரச்சினையாக அல்லாமல் தங்கள் தங்கள் நாடுகளுக்குரிய அரசியல் சார்ந்த பிரச்சினையாகவே பார்க்கப்படுகிறது. இதன் விளைவே தீவிரவாதம் உருவாவதற்கு ஒரு முக்கியக் காரணியாக அமைந்துவிடுகிறது.

''சோவியத் யூனியன், திகைப்பூட்டும் விதத்தில் படுவேகமாக நொறுங்கியது. சில வாரங்களுக்கொருமுறை, முறையே, லித்துவேனியா, எஸ்டோனியா, உக்ரைன் போன்ற குடியரசுகளுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்ட, பாபி வீடு திரும்பும் போதெல்லாம் இப்படியான செய்திகளோட வருவதாக லைலா நினைத்தாள். க்ரெம்ளினின் மீது சோவியத்தின் கொடி தாழப்பறந்தது. ரஷ்யக் குடியரசு பிறந்தது. ... 1978 இலிருந்து 1992 வரை பெண்கள் அனுபவித்துவந்த சுதந்திரமும் வாய்ப்புகளும் இப்போது மறந்துபோன விஷயங்களாகிவிட்டன. ஆஃப்கானிஸ்தானின் பெண்களுக்கு இது ஒரு நல்ல காலம் லைலா என்று பாபி சொன்னது அவளுக்கு நினைவு வந்தது. 1992 ஏப்ரலில், முஜாஹிதீன்களின் கைகளுக்கு ஆட்சி மாறியது முதல், ஆஃப்கானிஸ்தான், ஆஃப்கானிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு என்று வழங்கப்பட்டது... அவர்கள் கம்யூனிஸ்ட் ஆட்சிக்காலத்தின் விதிமுறைகளையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு, பெண்களை, முழுவதுமாக

மூடிக்கொள்ளச் சொல்லும், உறவினரான ஒரு ஆணின் துணையில்லாமல் அவர்கள் பயணம் செய்வதைத் தடுக்கும், முறையற்ற தொடர்புகளுக்கு கல்லால் அடித்துக்கொலை செய்யும் தண்டனையை அளிக்கும், ஷரியத் மற்றும் கண்டிப்பான இஸ்லாமியச் சட்டங்களை இயற்றத்துவங்கினார்கள்."[5] உலக வல்லரசுகள் செய்த சூழ்ச்சியால், சோவியத் யூனியன் 1992இல் நொறுங்கியது. அதனைச் சார்ந்த பிற நாடுகள் சோவியத்துடனான தொடர்பை இழந்தன. இவ்வல்லரசுகளை எதிர்க்கும் விதமாகவும் தன்னுடனான நாட்டை இணைக்க முயற்சிக்கும் போக்கிலேயே இன்றைய உக்ரைனூடான போரை ரஷ்யா தொடுத்துள்ளது எனலாம்.

ஆஃப்கானில் பெண்களுக்கு முழு சுதந்திரம் கிடைக்கப்பெற்றுள்ளது. உயர்கல்வி வரையிலும் அவர்களுக்கு இலவச கல்வி வழங்கப்பட்டிருக்கிறது. பெண்கள் பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களாகவும் மருத்துவர்களாகவும் பணிபுரிந்தார்கள். இதனைத்தான் காலித் ஹுசைனி தன் எழுத்துகளில் பதிவுசெய்கிறார். ஆனால், தற்போது(30.12.2022-பிபிசி) பெண்கள் கல்விகற்கும் உயர்கல்வி நிறுவனங்களில், தாலிபன்கள் உட்புகுந்து, கல்வி கற்பதற்குத் தடையை ஏற்படுத்தியுள்ளனர். இவ்வாறு, உலகெங்கிலும் படைக்கப்படும் புனைகதை எழுத்துகளூடாக கடந்தகால மற்றும் சமகால பிரச்சினைகளை அறிந்துகொள்ள முடிகின்றன.

"இப்போது தொலைக்காட்சி பிபிசி அலைவரிசைக்கு மாற்றப்பட்டுள்ளது. திரையில் ஒரு கட்டிடம், ஒரு கோபுரம் தெரிகிறது, அதன் உச்சி மாடிகளிலிருந்து புகை அலைபோல் எழுகிறது. தாரிக் சயீதிடம் ஏதோ சொல்ல, சயீத் பதில் சொல்லிக்கொண்டிருக்கும் போதே திரையின் மூலையிலிருந்து ஒரு விமானம் தோன்றுகிறது. அடுத்திருக்கும் கோபுரத்தில் அது மோதி, லைலா அதுவரை பார்த்திருந்த அத்தனை நெருப்புப்பந்துகளையும் ஒன்றுமில்லாமல் செய்யும் நெருப்புக்குழம்பாக அது வெடிக்கிறது...

இரண்டு மணி நேரங்களுக்குள்ளாக இரண்டு கோபுரங்களுமே சிதிலமாயின.

சிறிது நேரத்திலேயே எல்லாத் தொலைக்காட்சி நிலையங்களும் ஆஃப்கானிஸ்தானைப் பற்றியும், தாலிபானைப் பற்றியும், ஓசாமா பின்லேடனைப் பற்றியும் பேசலாயின.

"பின்லேடனைப் பற்றி தாலிபன் சொன்னதைக் கேட்டாயா?" தாரிக் கேட்கிறான்...

"கேட்டேன்" என்கிறாள்.

பின்லேடன் ஆஃப்கானிஸ்தானில் அடைக்கலமாகியிருக்கும் ஒரு மெஹ்மான், விருந்தினன் என்றும் பாஷ்டூன்களின் சம்பிரதாயப்படி விருந்தினர்களைக் கைவிடக்கூடாதென்றும் தாலிபான் அறிவித்திருக்கிறார்கள்."[6] கடந்த 2011ஆம் ஆண்டில் அமெரிக்காவில் நிகழ்ந்த தீவிரவாதத் தாக்குதல் குறித்த பதிவும் அதற்கு சார்பாகச் செயல்பட்ட தாலிபன்களின் நிலையையும் இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது. உலகநாடுகளில் நிகழ்த்தப்படுகிற கொடூரமான தீவிரவாதத் தாக்குதல்கள் அனைத்தும் அரசியல் காரண, காரியங்களால் ஏற்படுகின்றது. இதன்வழி, அந்நாடு சில சாதக, பாதகங்களைச் சந்திக்க நேர்வதோடு, உலக அரசியலில் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கான வழிவகைகளையும் ஆராய்கிறது.

21ஆம் நூற்றாண்டில் அறிவியல் தொழில்நுட்பத்தின் அதிவேக வளர்ச்சியினூடாக, இதுபோன்ற எழுத்துருவாக்கப் படைப்புகளை வாசிப்பதன் மூலமாக உலகளாவிய நாடுகளின் இயங்கியல் தன்மையைப் புரிந்துகொள்ள முடிகின்றது. கடந்தகாலத்தில் ஜெர்மனியில் நடந்த ஹிட்லரின் சர்வதிகார ஆட்சிக்கும் தற்போது தத்தம் நாடுகளில் நடந்துகொண்டிருக்கும் அரசியல் ஆட்சிக்கும் இடையேயான இரட்டை எதிர்மறையை நேமிச்சந்த்ரா மற்றும் காலித் ஹுசைனியின் சாரமான எழுத்துகள் சிந்திக்கச் வைக்கின்றன. "அரசியலற்ற இலக்கியத்தைப் படைப்பவர்கள் கடமை தவறியவர்களாக, துரோகிகளாகக் கருதப்படுவதோடு, அவர்கள் ஆக்கிய கவிதையும் நாவலும் நாடகமும் புறக்கணிப்பு அபாயத்துக்கு ஆளாகின்றன. ஒரு கலைஞனாக, வெறும் கலைஞனாக மட்டுமே இருப்பது எங்கள் நாடுகளில் ஒரு அநியாயமான குற்றமாக, அரசியல் பாவமாகக் கருதப்படுவதுண்டு"[7] என லத்தீன் அமெரிக்க எழுத்தாளரான 'மரியோ வர்காஸ் யோசா' கூறியிருப்பது, இக்காலகட்டத்தில் படைக்கப்படும் சில படைப்புகளுக்கு முற்றிலும் பொருந்தக்கூடியது. இதனை அடியொற்றியே 'யாத்வஷேம்', 'ஆயிரம் சூரியப் பேரொளி' என்ற இரு படைப்புகளும் தன்னளவிலும் உலகம்சார் அளவிலும் தனக்கான இடத்தைப் பெறுகின்றன.

**மேற்கோள் விளக்கக் குறிப்புகள்**

1. நேமிச்சந்த்ரா, 'யாத்வஷேம்', ப.109.
2. மேலது., ப.127.
3. காலித் ஹுசைனி, ஆயிரம் சூரியப் பேரொளி, பக். 232-233.
4. மேலது., பக். 123-124.
5. மேலது., பக். 191, 311.
6. மேலது., பக். 459-460.
7. மேலது., ப. 7.

●

கட்டுரையாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி மதுரை – 625 009

கட்டுரை



# கா.சிவத்தம்பியின்

## தமிழிலக்கிய வரலாற்றின் பிரச்சினை மையங்கள் - சில அவதானிப்புகள்

அ.அன்பரசன்

கார்த்திகேசு சிவத்தம்பி (1932 - 2011) தமிழின் முன்னோடி ஆய்வாளர்களில் குறிப்பிடத்தகுந்தவர். இவர் தம்முடைய ஆய்வுக்களங்களாகத் தேர்ந்து கொண்ட சமூக வரலாறு, வெகுசனப்பண்பாடு, இலக்கியம், இலக்கணம் முதலியவற்றில் மார்க்சிய அணுகுமுறையைக் கையாண்டு தமிழ் ஆய்வுலகில் தனக்குரிய வலுவான இடத்தைப் பெற்றிருக்கிறார். தமிழ்மொழி போன்ற பழமையான ஒரு மொழியின் பெருமிதத்தில் மூழ்காமல் முற்றிலும் அறிவியல் பார்வையோடு செய்யப்படும் ஆய்வுகளை ஊக்கப்படுத்துவதையும் அதன் வரலாற்றுத் தேவையை நம்மவர்களுக்கு உணர்த்துவதையுமே தன்னுடைய நோக்கமாகக் கொண்டு தம் ஆய்வுகளை மேற்கொண்டவர்.

இந்நூல் உருப்பெற்ற முறை என்பது இன்று தமிழ் ஆய்வுலகில் ஒரு முன்னோடி செயல்வடிவமாகும். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் அப்பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் பேராசிரியர் வி.ஐ.சுப்பிரமணியம் அவர்களால் அங்கு ஆய்வுப்பணி மேற்கொள்ள அழைக்கப்பட்ட முதலிரண்டு சிறப்பாய்வாளர்களுள் பேராசிரியர் சிவத்தம்பியும் ஒருவர். அங்கு ஆய்வுப்பணி மேற்கொள்கையில் தமிழில் இலக்கிய வரலாறு தொடர்பாக ஒரு வரலாறெழுதியல் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்று அப்போதைய துணைவேந்தர் பேராசிரியர் வி.ஐ. சுப்பிரமணியம் அவர்களிடம் சொல்லியிருக்கிறார். அவருடைய உறுதுணையால் ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்து அக்கருத்தரங்கிற்கு

“தமிழகத்தின் வரலாறு, தமிழிலக்கிய வரலாறு ஆகிய துறைகளில் ஆய்வு நற்பெயருடைய பத்து அறிஞர்கள் முத்து சண்முகம்பிள்ளை, என். சுப்பிரமணியம், கே.டி. திருநாவுக்கரசு, கு. அருணாசலக் கவுண்டர், பொ. திருஞானசம்பந்தம், ப. அருணாசலம், மு. அருணாசலம், எ. சுப்பராயலு, கு. நம்பியாரூரன், கோ. கேசவன் ஆகியோர் அழைக்கப்பட்டனர். இப்பத்து அறிஞர்களுடன் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற் கடமையாற்றிய அறிஞர்கள் க. வெள்ளைவாரணார், சுந்தர சண்முகனார், மு. சண்முகம்பிள்ளை, தி. முருகரத்தினம், இராமசுந்தரம் ஆகியோரும் கருத்தரங்கிற் கலந்துகொண்டனர்.” *(ப.xiv)*

இப்படியாக பல்வேறு தமிழறிஞர்களிடம் கலந்தாலோசித்து 1988இல் எழுதப்பட்ட நூல் தான் தமிழில் இலக்கிய வரலாறு (வரலாறெழுதியல் ஆய்வு). இந்நூல் 1986இல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு பின் 1988இல் சிவத்தம்பியாலேயே தமிழ் வடிவத்தில் ஆக்கப்பட்டது.

**இந்நூலின் பொருளடக்கங்களாவன:**

1. ‘இலக்கிய வரலாறு’ எனும் பயில்துறை அதன் புலமைப்பரப்பமைவு பற்றிய சுருக்க அறிமுகம்
2. தமிழில் இலக்கிய வரலாற்றின் வளர்ச்சி
3. தமிழிலக்கிய வரலாற்றில் பிரச்சினை மையங்கள்
4. தமிழிலக்கிய வளர்ச்சியைப் பார்க்கும் முறை: கால வகுப்புப் பிரச்சினைகள்

இவை தவிர பின் இணைப்புகள், நூல்கள், சஞ் சிகைகள், கட்டுரைகள், ஆசிரியர், விடய அகர நிரல் ஆகியவைகளும் இடம் பெற்றுள்ளன.

இந்நூலில் மூன்றாம் இயலாக இடம்பெற்றுள்ள ’தமிழிலக்கிய வரலாற்றில் பிரச்சனை மையங்கள்’ என்கிற இயல் இலக்கிய வரலாற்றை எழுதுவதிலுள்ள பிரச்சினைகளை முன்வைக்கின்றது. பிரச்சினைகள் என்பதை இங்கு சிக்கல்கள் என்பதாகப் புரிந்து கொள்ளலாம். இவ்வியல் சிக்கல்களை மையமிட்டக் கருதுகோள்களை அதன்வழியே தமிழ்ச் சிந்தனை மரபை மீட்டுருவாக்கம் செய்வதற்கான சில வழிமுறைகளை, சில எடுகோள்களை முன்வைப்பதை நோக்கமாகக் கொண்டு அமைந்துள்ளதைப் பார்க்க முடிகிறது.

ஒரு ஆய்வுக்கு சிக்கல் - சிவத்தம்பியின் வார்த்தைகளில் கூறுவதானால் பிரச்சினை மையம் இன்றியமையாதது. ஏனெனில் ஒரு ஆய்வு நிகழ்த்தப்படும் போது சிக்கல்களைக் கண்டுபிடித்தாலொழிய அவ் ஆய்வில் நம்மால் மேற்செல்ல முடியாது. சிக்கலும் சிக்கலை மையமிட்ட கருதுகோளும் ஒரு ஆய்வுக்கு அடிப்படைத் தேவையாகும் என்பது மூத்த ஆய்வாளர்களின் கருத்து. தமிழாய்வின் செல்நெறிகளில் நாம் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகள், கவனம் செலுத்த வேண்டிய ஆய்வுப்பரப்புகள் ஆகியனவற்றைச் சுட்டிச் செல்வதுடன் நிற்காமல் அவற்றின் பிரச்சினை மையங்களை முன்வைத்து விவாதித்திருப்பது சிவத்தம்பியின் முக்கியமான அணுகுமுறையாகும்.

இலக்கிய வரலாறு தமிழில் உருவாக வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் விதமாக எழுதப்பட்டிருக்கும் இப்புத்தகம் இதற்கு முன்பு செய்யப்பட்ட ஆய்வுகளை அறிமுகப்படுத்துவதோடு மட்டும் நின்றுவிடாமல் அவற்றின் ஆய்வியல் முக்கியத்துவத்தையும் உணர்த்துகிறது. இவ்வாய்வுகள் தனிநபர் முயற்சிகளால் செய்யப்பட்டனவேயன்றி ஒருங்கிணைந்த வகையில் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் தமிழ்ச் சூழலில் ஒரு ஒருங்கிணைந்த குழுமச் செயல்பாடு நடைபெறாததே ஆய்வுத் தளத்தில் மிகப் பெரிய போதாமையாக சிவத்தம்பி குறிப்பிடுகிறார். இருப்பினும் இதற்கு முன்பு செய்யப்பட்ட ‘ஒருங்கிணைந்த’ ஆய்வுச் செயல்பாடுகளை அவர் கணக்கிலெடுத்துக் கொள்ளாமலில்லை. 1955ஆம் ஆண்டு காலகட்டத்திலிருந்து 1957ஆம் ஆண்டு காலகட்டம் வரையிலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியிடப்பட்ட ஐந்து நூல்களும் மிகவும் முக்கியமான நூல்களாகக் குறிப்பிடும் சிவத்தம்பி “அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி நன்கு திட்டமிடப்படாது குறைபாடுகளுடன் நடைமுறைப்படுத்தப்பட்டதால், அதன் வழியாக வந்த படைப்புகள், பத்தொடு பதினொன்றாக, இருப்பவற்றுடன் மேலதிகமானவையாக அமைந்து விட்டனவேயன்றி, இருப்பவற்றிலும் பார்க்கச் சிறந்தனவாக, அச்சிறப்புக் காரணமாக ஏற்கனவே இருப்பனவற்றின் பயன்பாட்டைக் குறைப்பனவாக அமையவில்லை” என்று அப்பல்கலைக்கழகத்தில் செய்யப்பட்ட ஆய்வின் தரத்தை மதிப்பீடு செய்கிறார்.

இத்தகைய போதாமையுடன் செய்யப்பட்ட ஆய்வுச் செயல்பாடுகளைச் சரிவர மேற்கொள்ள ஒரு செயல்திட்ட நோக்குடன் செய்யக்கூடிய அளவுக்குத் தகுதி வாய்ந்ததாக “தமிழ்ச் சூழலில் அப்படிப்பட்ட அளவும் பரிமாணமுங் கொண்ட ஒரு முயற்சி தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் செயல்நோக்குடன் இப்பணி வரக்கூடியது” என்று இப்புத்தகம் எழுதப்பட்ட காலத்தில் உள்ள ’தமிழ்ப் பல்கலைக்கழகத்தின்’ மீது நம்பிக்கை வைக்கிறார். இருப்பினும் அப்பணி எவ்விதத்திலும் குறைவுற அமைந்துவிடக் கூடாது என்கிற ரீதியில் “ஆனால் எடுக்கப்படும் முயற்சி ‘மேலுமொன்று’ எனும் வகையிலும் தன்மையிலும் அமைந்துவிடக்கூடாது. அத்தகைய நோக்குடன் செய்யப்படவும் கூடாது.” *(ப.166)* என்கிறார்.

‘இலக்கிய வழி வரலாறு’ என்ற வகையில் அவரால் முன்வைக்கப்படும் இலக்கிய வரலாறு ‘இலக்கியவழி வரலாறு’, ‘இலக்கியங் கொண்டு வரலாற்றையறிதல்’ ஆகிய இரு கருதுகோள்களையும் உள்ளடக்கியிருப்பதாக இந்நூலில் சிவத்தம்பி விளக்கம் தருகிறார். இத்தகைய இலக்கிய வழி வரலாற்று ஆய்வுகளைத் தமிழ்ச் சூழலில் செய்யப்பட வேண்டிய காலத்தேவையை உணர்ந்து, அவை முறையாகச் செய்யப்படத் துவங்கும் போது

எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தன் பரந்துபட்ட ஆய்வு அனுபவத்தின் வாயிலாக முன்வைக்கிறார்.

தமிழுக்கான இலக்கிய வரலாற்றை எழுதும் போது ஏற்படக்கூடிய பிரச்சனை மையங்களை அடையாளப்படுத்தியும் தனித்தனியாக அவற்றின் ஆய்வுத்தேவையை உணர்த்தியும் எழுதிச் செல்கிறார். பிரச்சனை மையங்கள் என்பவை சிக்கல்கள், விடுபடல்கள், போதாமைகள் என்பதாகக் கொண்டு சிவத்தம்பி அவற்றின் அடிப்படையில் வினாக்களை எழுப்பிக் கொண்டு விவாதிக்கிறார். அவர் குறிப்பிடும் பிரச்சினை மையங்களான சிக்கல்கள் இன்றும் எவ்வளவு பொருத்தப்பாடுடையனவாக இருக்கின்றன என்பதைத் துலக்கமாக வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**பண்டைய இலக்கியத் தொகுப்பு முறைகள் பிரச்சினைகளும் பின்புலங்களும்**

நமக்குக் கிடைக்கின்ற இலக்கிய வகைகளில் குறிப்பாக 1300க்கு முன்பான இலக்கியங்கள் பூரணமாக நமக்குக் கிடைத்திருக்கின்றனவா என்பதே அவரின் முதல் வினாவாக அமைகின்றது. அதாவது சங்க இலக்கியத் தொகை நூல்கள் என்று இன்று நம்மிடமுள்ளவைகளை வைத்து நாம் ஆராயும் போது அவற்றின் போதாமைகள் ஒரு முழுமையான தமிழிலக்கிய வரலாறு எழுதுவதற்கு போதிய சான்றாதாரங்களா என்பதே அவரின் முக்கியமான வினாவாக இருக்கின்றது. இவ்வினாவே அடுத்ததொரு வினாவை நோக்கி அவரைச் செலுத்துகிறது. நமக்குக் கிடைத்த இலக்கியத் தொகுதிகள் முழுமையானவையே என்றாலும் அவை பிரதிநிதித்துவமுள்ளதாகக் கருதப்படத்தக்கதா என்பதே அவ்வினாவாகும். இருப்பினும் நமக்குக் கிடைக்காத பழமையான இலக்கியங்கள் ஒருவகையில் இழப்பாகவே இருந்தாலும் இவ்விழப்பு ஒருபோதும் தமிழின் இலக்கிய வரலாற்றை எழுதுவதற்குத் தடையாக அமையவில்லை என்றும் கூறுகிறார்.

இதன்மூலம் நீண்ட நெடிய தமிழ்ச் சிந்தனை மரபை நாம் எந்தளவு இலக்கியவழி பேணி வருகிறோம் என்கிற அடுத்த கேள்வி நம்முன் எழுகிறது. நமக்குக் கிடைக்கின்ற தொகை நூல்கள் தொகுக்கப்படுவதற்கான அரசியல் பின்புலம் என்ன? அவை கிடைத்தவற்றின் திரட்டு அல்ல; மாறாக தெரிந்தெடுத்தவற்றின் தொகுப்பு மட்டுமே என்பதை அறிந்திருக்கும் நாம் தமிழ் இலக்கியத்தின் வரலாற்றையும், இலக்கிய வரலாற்றையும் எழுத முயலும் பொழுது தமிழிற் கிடைக்கக்கூடிய எழுத்துக்கள் எல்லாவற்றையும் ஒருங்கு திரட்டிக்கொண்டுவிட்டோமா என்பதை நமக்கு நாமே கேட்டுக் கொள்ள வேண்டும் (ப.169) என்கிறார்.

இதை விட இன்னொரு சிக்கல் மையமான வினாவான 1300க்கு முன்னர் தொகுக்கப்பட்ட இலக்கியங்களின் தொகுப்பு முறையின் போது ஏதேனும் தணிக்கை நடவடிக்கை இருந்ததா என்பதைக் கேட்கிறார். 1300 என்ற காலக் கோட்டை அவர்




போட்டுக் கொண்டதற்கான காரணம் 14 ஆம் நூற்றாண்டிற்குப் பின்பு தமிழ் நிலத்தின் மீது ஏற்பட்ட அந்நியப் படையெடுப்பு தமிழ்ச் சமூக, பண்பாட்டுத் தளங்களில் மிகப் பெரிய அளவில் மாற்றங்கள் நிகழக் காரணமாக இருந்தன. இதனால் தான் 1300க்கு முற்பட்ட இலக்கியங்களுடன் ஒப்பிட 1300க்குப் பிற்பட்ட இலக்கியங்கள் மிகவும் பன்முகப்பட்டவையாக உள்ளன. தமிழ் இலக்கியங்கள் இயற்றப்படுவதற்கு மட்டுமின்றி அவற்றைத் தொகுப்பதற்கும் அரச நிறுவனத்தின் ஆதரவுகள் இருந்தன என்பதைப் புரிந்து கொண்டால் சங்க இலக்கியத் தொகுப்பு முறைமைக்கும் ஏதேனும் அரச நிறுவன ஆதரவு செயல்பட்டிருக்கக் கூடிய வாய்ப்பு இருந்திருக்கிறது என்று ஒரு கருதுகோளாக முன்வைக்கிறார். அரச நிறுவனத்தின் ஆதரவோடு இலக்கியங்கள் தொகுக்கப்பட்டமைக்கான பிற்கால வரலாற்று உதாரணமாக சோழ அரசின் ஆதரவோடு தேவாரங்களை சிதம்பரம் கோவிலிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட நிகழ்வைக் குறிப்பிடுகிறார்.

அடுத்தவொரு பிரச்சனை மையமாக இருப்பது பண்டைய, இடைக்காலத் தமிழிலக்கியங்களின் கால நிர்ணயமாகும். இது தொடர்பாக தமிழ்ச் சமூகத்தில் இயல்பாகப் புகுந்துகொண்டு விட்ட பெருமிதப் பார்வைகள் நம்முடைய பண்டைய, இடைக்கால இலக்கியங்களின் காலங்களை மிகவும் முன்னோக்கிப் பார்க்கும் கண்மூடித்தனமான நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது. இது அறிவியல் நெறிப்பட்ட பார்வைக்குறைபாடு மட்டுமின்றி அரசியற் பிரச்சினையாகவும் இன்று வளர்ந்து நிற்கிறது. இதை மனதில் கொண்டே "இது இலக்கியம் மாத்திரம்

சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சனையன்று. இது ஓர் அரசியற் பிரச்சினையுமாகும். சமூகக் கண்ணோட்டங்களில் மாற்றங்கள் ஏற்படாது, இப்பிரச்சினை இலக்கிய மட்டத்திலே தீர்க்கப்படக் கூடியதன்று.'' (ப.190) என்கிறார் சிவத்தம்பி.

**இலக்கிய விமர்சனமும் பல்துறை இணைவும்**

இலக்கிய வரலாறு எழுதப்படும் போது இலக்கியங்களாக பொதுவெளியில் அங்கீகரிக்கப்பட்டவைகளை மட்டும் பயன்படுத்தாமல் பலதுறை இலக்கியங்களையும் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் ஒரு மொழியின் சிந்தனையோட்டத்தை அது வரலாறுதோறும் மாறிவந்திருக்கக் கூடிய பாங்கை அம்மொழியில் வைத்தியம், வானவியல், சோதிடம், சிற்பம், நடனம், வெள்ளாண்மை உள்ளிட்ட பல துறைகளில் வெளிவந்திருக்கக் கூடிய சிந்தனைகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அந்தவகையில் இலக்கிய வரலாற்று எழுதுகையை ஒரு குறுகிய வட்டத்தினுள் அடைக்காமல் விரிவான தளத்தில் வைத்து எழுதுவதற்கு அப்படி எழுதப்பட்டனவற்றை ஒரு ஒழுங்குமுறையாகத் தொகுக்க வேண்டும் என்கிறார் சிவத்தம்பி. ஏனெனில் ஒரு குழுமத்தின் சிந்தனை மரபை அம்மொழியில் வெளிவந்துள்ள பல்துறை நூல்களின் மூலமே வெளிப்படுத்த இயலும் என்ற பிரக்ஞைத் தெளிவு அவரிடமுள்ளது. மேலும், பல்துறை நூல்களின் வாயிலாக இலக்கியத்தை அணுகும் போது இலக்கியத்தை இன்னும் ஆழமாக விளங்கிக் கொள்ள முடியும் என்பதை இதன்மூலம் நாம் விளங்கிக் கொள்ள முடியும். இதனை ''இலக்கியத்திற்கும் கற்பனை சாரா எழுத்துக்களுடன் நெருங்கிய தொடர்புண்டு; அந்த உறவுகளை விளங்கிக் கொள்வதன் மூலம், சிறப்பாக அவை உண்மையான இலக்கியத்தினுட் புகுந்து நோக்குவதன் மூலம் நாம் இலக்கியத்தை உள்ளதிலும் பார்க்க முழுமையாக விளங்கிக் கொள்ளலாம்.'' என்ற டேவிட் கிறேய்க்கின் கூற்றை சிவத்தம்பி மேற்கோள் காட்டிப் பேசுவதிலிருந்து பன்முக வாசிப்பு குறித்துப் புரிந்து கொள்ள முடியும்.

**பிற மொழிகளில் தமிழ்ச் சிந்தனை**

தமிழர் சிந்தனை வரலாற்றை எழுதுவதற்கு தமிழர்களால் தமிழிலேயே எழுதப்பட்டவைகள் போதுமானவையா என்கிற ஆராய்ச்சி முக்கியத்துவமுள்ள ஒரு வினாவை எழுப்புகிறார் சிவத்தம்பி. ஒரு காலத்தில் பெரும் செல்வாக்குடைய புலமை நிரூபண மொழியாக இருந்த வடமொழியில் இடைக்காலத்தில் தமிழர்கள் நிறைய பேர் நூல்களை இயற்றியுள்ளனர். அதனால் தமிழ்ச் சிந்தனை மரபின் தொடர்ச்சியை தமிழர்களால் பிற மொழிகளில் எழுதப்பட்டனவும் ஆய்வுக்குரியவையாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். மேலும் வடமொழியில் எழுதியவர்கள் கூட தமிழ் நிலத்தின் சிந்தனைத் தாக்கத்தை உட்கொண்டுதான் எழுதியிருக்கக் கூடும்; தமிழில் மட்டுமல்ல தெலுங்கு, மலையாளம், மராட்டியம், சிங்களம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்ட நூல்களிலும் தமிழ்ச் சிந்தனையினை ஆய்வு செய்ய முடியும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார்.

இவை மட்டுமல்லாமல் இடைக்காலத்தில் தமிழில் எழுதப்போந்த இசுலாமியர்களும் கிறித்துவர்களும் தங்கள் தாய்மொழியான தமிழ் மொழியில் மட்டுமல்லாது உருது, ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழிகளிலும் எழுதினர். குறிப்பாக தம் மத சம்பந்தப்பட்ட நூல்களை எழுதினர். இது தமிழ் மொழியில் பிற சமயங்களின் தாக்கம் எப்படி ஏற்பட்டது என்று ஆராய்வதற்கு இடம் தருவதோடு தமிழ்ச் சிந்தனை மரபின் தொடர்ச்சியை அம்மொழிகளில் எழுதப்பட்ட நூல்கள் தாங்கி நிற்குமாற்றை அறிந்து கொள்ள முடியும் என்று உணர்த்துகிறார்.

தமிழ்மொழியின் பன்மைத்துவம் அதன் சிந்தனை முறைகளில் மட்டுமல்ல அதன் வெளிப்பாட்டு வடிவங்களிலுமே கூட இருக்கிறது என்பதை உணர்த்தும் இது ஒரு செயலூக்கமுள்ள அணுகுமுறையாகும். இதனால் பிறமொழிகளில் உள்ள சிந்தனை வெளிப்பாடுகளையும் தமிழ்ச் சிந்தனை மரபின் தொடர்ச்சியாகப் பார்க்கும் அகண்ட பார்வையை சிவத்தம்பி கோருகிறார் என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது.

**முடிவாக சில அவதானிப்புகள்**

இப்பிரச்சனை மையங்கள் ஒரே மாதிரியானவையன்று; ஒன்றிலிருந்து ஒன்று கிளைத்து முகிழ்க்கும் தன்மை கொண்டவை. ''தமிழிலக்கிய வரலாற்றை எழுதுவதிலுள்ள பிரச்சனை மையங்கள் இவைகளே. தொடக்கத்திற் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, இவையே பிரச்சனைகளன்று. இப்பிரச்சனை மையங்களிலிருந்தே பல்வேறு பிரச்சனைகள் கிளம்புகின்றன.

சமூக வாழ்க்கை முழுமையில் இலக்கியத்துக்குரிய இன்றியமையாத இடத்தினை அறிந்துணர்ந்து கொள்வதும், வரலாற்று நடைமுறைகளுள் இலக்கியத்தின் பணியையும் பயன்பாட்டையும் கண்டறிந்து கொள்வதும் இலக்கிய வரலாற்றாசிரியனுக்குள்ள பொறுப்பு ஆகும். இப்பொறுப்பினை அவன் நிறைவேற்றும் முறைமையில், சமூக மாற்றத்திலும், சமூக மாற்றத் தேவையை உணர்த்தி விளக்கும் சிந்தனைகளை உருவாக்குவதிலும் இலக்கியத்துக்குரிய இடத்தை அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறுவதாகவிருத்தல் வேண்டும்.'' (ப.190) என்று சொல்வதிலிருந்து புரிந்துகொள்ள இயலும்.

தமிழ்மொழியின் சிந்தனை மரபை மீட்டெடுக்க நினைத்து அவர் சொல்லும் கருதுகோள்கள் சிவத்தம்பியை ஒரு 'கடுந்'தூய்மைவாத ஆய்வுப்போக்காளராக அடையாளப்படுத்திவிடக் கூடிய வாய்ப்பிருக்கிறது. சிவத்தம்பியிடம் காணப்படுவது தூய்மைவாத நோக்கல்ல என்பது முக்கியமாகக் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியது. எல்லோரையும் எல்லாத் தரப்பினரையும் ஒருங்கிணைத்து அவர்கள் கால்கொண்ட இத்தமிழ் நிலத்திலிருந்து உதித்த சிந்தனைகள்

அனைத்தும் தமிழ்ச் சிந்தனையே என்பது அவர் துணிபு. அதற்கான அவர்களின் அங்கீகாரத்தினை வழங்கவேண்டும் என்பதை முன்மொழிபவராகவும் அந்தத் தமிழுணர்வு என்பது அவர்களிடம் காணப்படும் வேறுபாடுகளான சாதி, மத, மொழி, நாடு, எல்லைகள் கடந்த ஒரு உணர்வு என்பதையும் புரிந்து கொண்டவராகவே தெரிகிறார்.

மேலும், வரலாற்றுப் பொருள்முதல்வாதியான அவரிடமிருந்து மாறிவரும் உலகத்தோடு தமிழ்ச் சமூகம் போட்டியிட்டு தன்னை வளர்த்துக் கொள்வதற்கு, தன்னுடைய குறுகிய பிரதேச உணர்வைக் கடந்து ஒரு விரிவான பரப்பகற்சி கொண்ட இனமாக தமிழினம் சர்வதேச அளவில் ஒருங்கிணைந்து அறிவுத்தளத்தில் ஒரு குழுமமாகச் செயல்படுவதற்கான ஒரு ஊக்கமளிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். மேலும், தமிழ்ச் சமூகத்தின் மனதில் வரலாற்றுப் போக்கில் குடிகொண்டுவிட்ட பரஸ்பர புரிந்துணர்வின்மை, வெறுப்பு (மொழியாலும், பிறப்பாலும்) முதலியவற்றை களைந்தெரிய வேண்டிய வரலாற்று நிர்ப்பந்தத்தை தன் ஆய்வுநெறி முறையினின்று வழுவாது முன்வைக்கிறார். இவற்றையெல்லாம் ஒருங்கே நோக்கும் போது தமிழ்ச் சமூகத்தின் அறிவு மரபை வரலாறுதோறும் மாறி வந்திருக்கக் கூடிய பாங்கை அறிந்து தெளிந்து தமிழ் மொழியின் பன்மைத்துவத்தை வெளிப்படுத்தும் அறிவியல் நிலைப்பட்ட ஒரு சமூக வரலாற்று ஆய்வாளராகத் சிவத்தம்பி திகழ்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள இயலும்.

இவற்றையெல்லாம் தமிழ் மொழி என்கிற ஒரு தளத்தில் வைத்து அவர் பேசப் புகுந்திருப்பது தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கும் நமக்கு ஒரு உணர்வு ரீதியான தாக்கத்தைக் கொடுப்பது இயல்பானது. ஆனால் நாம் ஒன்றை மனத்திலிறுத்த வேண்டும். சிவத்தம்பி எந்த இடத்திலும் அறிவியல் நிலையினின்று வழுவாது அதேநேரம் தான் கால்கொண்ட மொழித்தேயத்திற்கு ஆய்வுரீதியில் செயலாற்ற முனைந்த ஒரு ஆய்வாளராகவே இருந்திருக்கிறார். அத்தகைய ஆய்வுப்பார்வையின் தொடர்ச்சியாகத் தான் நமக்கான அறிவு மரபை மீட்டெடுப்பதற்கான அணுகுமுறைகள் குறித்தும் அதற்கான சிக்கல்கள் குறித்தும் தன் நூலில் விவாதிக்கிறார்.

சிவத்தம்பியிடம் ஒரு பார்வை இருக்கிறது. அது என்னவெனில் தமிழ்ப் பண்பாடும் இந்தியப் பண்பாடும் 'கொடுக்கல் வாங்கல்களை' தமக்குள் நிகழ்த்தியிருக்கின்றன என்பதை மனங்கொண்டவராக இருப்பது. இது அவருடைய ஆய்வுகளில் தெளிவாகவே தெரியக்கூடிய விடயம். தமிழின் இந்தியத் தன்மையை மறுக்காது அதை ஏற்றுக் கொள்ளும் அதே நேரத்தில் இந்தியத் தன்மையின் பின்புலத்தில் தமிழின் தனித் தன்மையையும் விட்டுக் கொடுக்காதிருக்கிறார். இந்திய வரலாற்றில் ஏற்பட்ட பொதுவான சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்கள் தமிழ்ச் சமூகத்தையும் பாதித்தது என்பதை மறுக்காமல், ஆனால் தமிழ்ச் சமூகத்தின் நீண்ட நெடிய வரலாற்றுப் பாரம்பரியத்தில் ஒரு தனித்துவமான போக்கு அசல் வைரத்தில் உள்ளூர ஓடும் நீரோட்டம் போல் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை ஆழ்ந்து உணர்ந்தவராகத் திகழ்கிறார். இதனை மீட்டுருவாக்கம் செய்ய அதற்கான முறையியல்களை, ஆய்வு அணுகுமுறைகளை நமக்கானதாக வகுத்துக் கொள்வதற்கான ஆக்க ஊக்கத்தினைத் தருகிறார்.

ஆனால் இப்போது நமக்கிருக்கும் மிக முக்கியமான பணி சிவத்தம்பியின் இக்கருதுகோள்கள் தமிழ் ஆய்வுச் செல்நெறிகளில் ஏற்படுத்திய தாக்கங்கள் யாவை என்பதை தனியாக ஆராய்வதாகும்.

தமிழில் இலக்கிய வரலாறு (வரலாறெழுதியல் ஆய்வு) என்கின்ற இந்நூல் இன்றும் சமகாலப் பொருத்தப்பாட்டுடன் இருப்பதை இக்கட்டுரை காட்டி நிற்கிறது. இந்நூலின் ஒவ்வொரு இயலும் தனித்தனி குறுநூல்களாக வரக்கூடிய அளவு அத்துணை முக்கியத்துவமுள்ளனவாகும். ஆனாலும் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இத்தகையதொரு புத்தகம் மீள்பதிப்பு வராமல் இருப்பது தமிழ் ஆய்வுலகில் ஒருவித செயலற்ற தன்மையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நாம் மறுக்கவியலாது.

●

**கட்டுரையாளர், முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**தமிழ்த்துறை காந்திகிராம கிராமிய நிகர்நிலைப்**
**பல்கலைக்கழகம், காந்திகிராமம்**

**புத்தகங்கள் அச்சிட**
**அற்புதத் தீர்வு**
**குறைந்த செலவு**
**அதிகபட்ச தரம்**


அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**


தொடர்பு கொள்ள

**98412 93503**

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்





₹ 325/-





₹ 560/-




₹ 200/-




₹ 280/-





₹ 1200/-




₹ 510/-




₹ 420/-




₹ 320/-




₹ 200/-


**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

கட்டுரை

# வள்ளலாரின் ஆறாம் திருமுறைகள்



டாக்டர் மு.நீலகண்டன்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சைவ சமயத்தில் பல சீர்திருத்தங்கள் தோன்றின. இக்காலக் கட்டத்தில் வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கம் தோன்றியது. சமயத் துறையில் மட்டுமின்றிச் சமூக வாழ்விலும் மாறுதல்களும் சீர்திருத்தங்களும் வள்ளலாரால் உருவாக்கப்பட்டன. இந்திய சமயத்தில் சாதிய ஏற்றத்தாழ்வுகள், தீண்டாமை, நவீன காலத்திற்கு ஏற்ப சமத்துவமின்மை முதலியவற்றால் சமயக் களத்தில் தேக்க நிலை ஏற்பட்டது. இந்தியாவில் கிருத்துவ சமயம், சமயக்கல்வி, மருத்துவம் போன்ற நற்பணிகளை மேற்கொண்டு அனைத்துச் சாதியினரும் சமம் என்ற நிலைப்பாட்டில் பணி நடைபெற்றது. மேனாட்டுச் சமயங்களின் நவீனத் தத்துவத்திற்கேற்ப இந்திய சமயங்களிலும் ஞானிகள் தோன்றி புத்தாக்கம் செய்தனர். இக்காலக் கட்டம் தான் வள்ளலாரின் காலமாகும்.

வள்ளலார், இந்து சமூகத்தின் மூடப்பழக்கங்களால் தோய்வுற்றிருந்த காலத்தில் தோன்றினார். தமது பாடல்கள், உரைநடைகள், சொற்பொழிகள் மூலம் அவற்றை மிகக் கடுமையாகச் சாடினார். மூடப்பழக்கங்களை எதிர்த்துக் குரல் எழுப்பினார். இதுவரை உலகில் தோன்றிய சீர்திருத்தவாதிகளுள் தமக்கு ஒப்பும் உயர்வும் அற்றவராகத் திகழ்ந்தார். சீர்திருத்த வானில் வள்ளலார் ஒரு "சூரியன்" என்கிறார் ஊரன் அடிகள். வள்ளலார், ஆன்மீகவாதியோ, அருளாளரோ மட்டுமல்ல மிகச் சிறந்த சீர்திருத்தவாதி, சைவ சமயத்தில் பல சீர்திருத்தங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தோன்றின. இவை "சீர்திருத்தச் சைவம்" என்று சொல்லப்பட்டது. மறைமலையடிகளும், திரு.வி.க. போன்றோரும் தங்களை "சீர்திருத்தச் சைவர்" எனச் சொல்லிக் கொண்டனர். ஆனால் சீர்திருத்தச் சைவம் தோன்றக் காரணமானவரே வள்ளலார். வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கம் தோன்றவில்லையாயின் சீர்திருத்தச் சைவம் தோன்றுவதெங்கே? சமயத்துறையில் மட்டுமின்றிச் சமூக வாழ்விலும் பெரும் மாறுதல்களும் சீர்திருத்தங்களும் வள்ளலாரால் ஏற்பட்டன என்று ஊரன் அடிகள் கூறியுள்ளார். *(புரட்சித் துறவி-வள்ளலார் பக்.37-38)*

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளலார் தமது எளிய, சொல்லாட்சிகளாலும், உளவியல் எதார்த்தச் சித்திரிப்புகளாலும், நவீனத்துவத்தை இலக்கியத்தில் தொடங்கி வைத்தவர் என்று கூறலாம் என்கிறார் ராஜ்கௌதமன். *(கண்மூடி வழக்கம் எலாம் மண்மூடிப்போக ப. 475)*

இறுதியாக வள்ளலார் சன்மார்க்கம் எதிர்காலத்தில் உலகிலே ஓங்கி வளரும் என்றார்,

**"மார்க்கம் எல்லாம் ஒன்றாகும் மாநிலத்தீர்! வாய்மையிது;**
**தூக்கமெலாம் நீக்கித் துணிந்துளத்தே – ஏக்கம் விட்டு சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடுமின்! சத்தியம் நீர் நன்மார்க்கம் சேர்வீர் இந்நாள்**

இதைவிட உறுதியாக வேறு சொற்கள் அமைத்து பாட முடியாது. எதிர்காலத்தில் உலகில் சன்மார்க்கம் ஒன்று தான் ஓங்கும் என்ற கருத்தை மிகுந்த நம்பிக்கையுடன் பறை சாற்றினார் வள்ளலார் (சாமி சிதம்பரனார், வள்ளலார் கூறும் வாழ்க்கை நெறி, ப.200).

### திருமுறைகள்

ஆரம்பத்தில் வள்ளலாரின் பாடல்களைத் தொகுத்து அச்சிட வேண்டும் என்று கோரிக்கை வள்ளலாரிடம் வைத்தபோது அதற்கு முதலில் ஒப்புக்கொள்ளவில்லை. பின்னர், புதுவை வேலு முதலியார், சிவானந்தபுரம் செல்வராய முதலியார், இறுக்கம் இரத்தின முதலியார் போன்ற அன்பர்கள் பலமுறை வற்புறுத்தி வள்ளலாரை சம்மதிக்கச் செய்தனர். தொழுவூர் வேலாயுத முதலியாரைக் கொண்டு அவற்றைத் திருமுறைகளாக வகுத்து வெளியிட்டனர்.

வள்ளலார் பாடிய பாடல்களின் தொகை இதுவரை யாவராலும் சரியாகக் கணக்கிடப் பெறவில்லை. பொன்னேரி சுந்தரம்பிள்ளை தமது பதிப்பில் 6955 எனக் காட்டுகிறார். ஆ.பாலகிருஷ்ணபிள்ளை 5970 எனக் குறிப்பிடுகிறார் ச.மு.கந்தசாமிப் பிள்ளை பதிப்பு 5725 எனக்காட்டுகிறார். இவ்வாறு பதிப்புக்குப் பதிப்பு பாடல்களின் தொகை வேறுபடுகிறது. இப்பாடல்களின் தொகுப்பே "திருவருட்பா" ஆகும்.

வள்ளலாரின் பாடல் தொகுப்புக்குத் "திருவருட்பா" என்று பெயரிட்டவரும், அவற்றைத் தொகுத்தவரும், ஆறு திருமுறைகளாக வகுத்தவரும் அதை முன் முதலில் பதிப்பித்து வெளியிட்டவரும் வள்ளலாரின் மாணவராகிய "தொழுவூர் வேலாயுத முதலியாரேயாவார்."

### ஆறு திருமுறைகள்

உபய கலாநிதிப் பெரும்புலவர் தொழுவூர் வேலாயுத முதலியார், பாடல்களை வகைப்படுத்தி ஆறு திருமுறைகளாக வகுத்தார். (126 பதிகங்களும், 172 தனிப்பாடல்களும் அவர் வகுத்திருந்த ஆறாம் திருமுறையில் அப்போது இருந்தன.)

திருவடிப் புகழ்ச்சி (128 அடி விருத்தப்பா) விண்ணப்பக் கலிவெண்பா (417 கண்ணிகள்) நெஞ் சறிவுறுத்தல் (703 கண்ணிகள்) சிவநேச வெண்பா (104 வெண்பாக்கள்) மகாதேவ மாலை (100 எண்சீர் விருத்தம்) திருவருள் முறையீடு (232 கட்டளைக் கலித்துறை) வடிவுடை மாணிக்க மாலை (101 கட்டளை கலித்துறை) இங்கீத மாலை (167 அறுசீர்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்) ஆகிய எட்டும் முதல் திருமுறையாக வகுக்கப் பெற்றன.

வள்ளலார் சென்னையிலிருந்தபோது, திருவொற்றியூர் குறித்தும் தில்லையைக் குறித்தும் பாடிய பதிகங்களும், திருமுல்லைவரியில், திருவலிதாயம் புள்ளிருக்கு வேளூர் (வைதீஸ்வரன் கோவில்) திரு ஆரூர், திரு அண்ணாமலைப் பதிகங்களும் பொதுப்பதிகங்களும் கீர்த்தனைகளும் இரண்டாம் திருமுறையாக வகுக்கப்பெற்றன.

திருவொற்றியூரைக் குறித்துப் பாடப்பெற்ற அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தாலான அகத்துறைப் பதிகங்கள் பத்தொன்பது மட்டும் மூன்றாம் திருமுறையாக வகுக்கப்பட்டன.

வள்ளலார் கருங்குழிக்கு வந்த பின் சிதம்பர வழிபாட்டுக் காலத்தில் சிதம்பரத்தைக் குறித்துப் பாடப்பெற்ற எட்டு மாலைகள் ஆளுடைய நால்வர் அருள்மாலைகள் நான்கு அகப் பன்னிரண்டு நூற்பகுதிகளைக் கொண்ட 238 பாடல்கள் அடங்கியன நான்காம் திருமுறையாக வகுக்கப்பெற்றன.

திருத்தணிகைப் பாடல்கள் ஐந்தாம் திருமுறையாக வகுக்கப்பெற்றன. "முருகன் பாசுரங்கள்" என்னும் வேறு பெயரும் இத்திருமுறைக்கு உண்டு. 604 பாடல்களைக் கொண்ட 56 பதிகங்கள் இத்திருமுறையில் உள்ளன.

திருவருட்பா முதல் நான்கு திருமுறைகள் வெளியான 13 ஆண்டுகள் கழித்து 1880-இல் வள்ளலாரின் மறைவுக்கு பின் ஐந்தாம் திருமுறை வெளிவந்தது. (திருவருட்பாவின் முதல் நான்கு திருமுறைகள் அடங்கிய ஒரே நூல் 1867-இல் தொழுவூர் வேலாயுத முதலியாரால் முதன் முதலில் பதிப்பிக்கப்பட்டது.) முதல் நான்கு திருமுறைகள் மட்டுமே வள்ளலாரின் நேரடி மேற்பார்வையில் உருவானது குறிப்பிடத்தக்கது.

முதல் நான்கு திருமுறைகளையும் அடுத்து ஐந்தாம் திருமுறையையும் பதிப்பித்து வெளியிட்ட தொழுவூர் வேலாயுதம், ஆறாம் திருமுறையைப் பகுத்து வைத்திருந்தாரேயன்றி, வெளியிடுவதில் அக்கறை காட்டவில்லை. ஏனெனில் வள்ளலாரின் ஆறாம் திருமுறைப் பாடல்கள் சமயம் கடந்த புரட்சிகரமான சமூகச் சீர்திருத்த பாடல்கள். ஆறாவது திருமுறையை அச்சிடக் கூடாதென்று வள்ளலார் கண்டிப்பாக ஆணையிட்டுவிட்டார். ஆறாந் திருமுறையில் தாம் தெரிவித்துள்ள கருத்துக்கள் சுத்த சன்மார்க்கிகள் மட்டும் தெரிந்து பின்பற்றவேண்டியவையாகையால் பொது மக்கள் மத்தியிலே அவற்றை நடமாட விட வேண்டா என்று வள்ளலார் தெரிவித்ததாகச் சொல்லப்படுகின்றது.

## ஆறாம் திருமுறை வெளியிடப்பட்டது.

ஐந்தாம் திருமுறையை வேலாயுத முதலியார் 1880-இல் வெளியிட்டார். அதன் பின்னர் 1885-ஆம் ஆண்டில் சென்னை சமரச சன்மார்க்க சங்க அன்பர்களால் திருவருட்பா "ஆறாம் திருமுறை" வெளியானது. தொழுவூராரின் காலம் 1832-1889 திரு அருட்பா ஆறாம் திருமுறை வெளியானது, 1885-இல். எனவே தொழுவூரான் மறைவுக்கு முன்னே ஆறாம் திருமுறை வெளியானது என்பதும் சைவப் பற்றே அவரை ஆறாம் திருமுறையை வெளியிடாது தடுத்தது என்பதும் வெளிப்படை.

## வள்ளலாரின் புரட்சி கருத்துக்கள்

முதல் ஐந்து திருமுறைகளில் எவ்வளவு பாடல் உள்ளனவோ அவைகளை விட அதிகமாக பாடல்கள் ஆறாம் திருமுறையில் மட்டும் அடங்கியுள்ளன. ஆறாம் திருமுறையில் தான் முற்போக்கான புரட்சி கருத்துக்கள் நிறைந்த பாடல்கள் உள்ளன.

முதல் ஐந்து திருமுறைகளில் பக்திப் பாடல்கள் மட்டுமே காணப்படுகின்றன. குறிப்பாக திருவொற்றியூர், திருத்தணிகை, கந்த கோட்டம் ஆகிய தலங்களிலுள்ள தெய்வங்களின் மீது பாடியுள்ள பாடல்களையே காணலாம். வள்ளலாருக்கு முன்தோன்றிய ஞானியர் எவரிடமும் காணாத புரட்சிகரமான சமயச் சீர்திருத்தக் கருத்துக்களை ஆறாந்திருமுறைகளில் மட்டுமே காணமுடியும்.

சாதி, சமய, இன வேற்றுமைகளைச் சாடிய பல பாடல்களை சித்தர்கள், இயற்றி உள்ளனர். ராமானுஜர் இறைவன் முன் அனைவரும் பொது என்ற சித்தாந்தத்தை வலியுறுத்தினார். உயர்வு தாழ்வு கருதாது வாழ்ந்து காட்டினார். சித்தர்களுக்கும் இராமானுஜருக்கும் பின் "பொதுவுடைமை" பேசும் முதல் குரலாக ஒலித்தது வள்ளலாரின் குரலே. சமூக சமயக் கொள்கைகளில் புரட்சி செய்த முதல் பொதுவுடமைவாதியாக வள்ளலாரை கூறலாம்.

மேலும், ஆறாம் திருமுறையில், அரும் பொருள்கள் பல அடங்கியிருக்கின்றன. மூடநம்பிக்கைகள், சாதிபேதம், மதவெறி, அரசியல் கொடுமை, ஏழைகளைத் துன்புறுத்தும் வஞ்சகர்கள் வாழ்வு, இவைகளையெல்லாம் வன்மையாகக் கண்டிக்கும் பாடல்கள் நிரம்பியிருக்கின்றன.

மரபான செய்யுள் இலக்கியத்திற்குப் புதிய ஒரு வரவாக இந்த ஆறாம் திருமுறை பாடல்களைச் சொல்லலாம் என்கிறார் ராஜ்கௌதமன் (கண்மூடி வழக்கம் எலாம் மண்மூடிப்போக. ப.463).

சமூகக் கொடுமைகளைச் சாடியதுடன், சமயத் தத்துவங்களுக்கு இதுவரை இல்லா புது விளக்கங்களைக் கொடுத்தவர் வள்ளலார்.

வள்ளலாரின் ஆறாம் திருமுறைப் பாடல்கள் சமயத்தைக் கடந்து சமரசத்தைக் காட்டும் பாடல்கள் என்பதால் மட்டுமே புறக்கணிக்கப்பட்டுள்ளன. (இரா.வெங்கடேசன் கட்டுரை, சி.ராமலிங்கம் பாடல்கள் வள்ளலார் தொகுப்பான வரலாறு, வெளியீடு, உங்கள் நூலகம், மாத இதழ் ஜூலை 11, 2011)

## சன்மார்க்கக் கொடி ஏற்றினார் வள்ளலார்

1869-இல் வள்ளலாரின் புரட்சிக் கருத்துக்கள் வெளிவர ஆரம்பித்தன. 22.10.1873-ஆம் ஆண்டில் சித்தி வளாகத்தில் மஞ்சள், வெள்ளை ஆகிய இருநிறங்கள் கொண்ட சன்மார்க்கக் கொடியை ஏற்றிவைத்தார் வள்ளலார். அது முதல் சமயம், சாதி, தத்துவங்கள் ஆகிய எல்லாவற்றையும் தூக்கியெறிந்தார். சன்மார்க்கக் கொடியை ஏற்றிவைத்து வள்ளலார், பேசும் போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

"இது போல் சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும், வேதாந்தம், சித்தாந்தம் முதலிய மதங்களிலும், லக்ஷியம் வைக்கவேண்டாம் (அவற்றில் தெய்வத்தைப் பற்றி) குழூஉக் குறியாகக் குறித்திருக்கிறதேயன்றிப் புறங்கவியச் சொல்லவில்லை. அவ்வாறு பயிலுவோமானால் நமக்குக் காலமில்லை. ஆதலால் அவற்றில் லக்ஷியம் வைக்கவேண்டாம். ஏனெனில் அவைகளிலும், அச்சமய மதங்களிலும் அற்பப் பிரயோஜனம் பெற்றுக் கொள்ளக்கூடுமே யல்லாது ஒப்பற்ற வாழ்வாகிய இயற்கையுண்மை எனும் ஆன்மானுபவத்தைப் பெற்றுக்கொள்ளுகிறதற்கு முடியாது. ஏனெனில் நமக்குக் காலமில்லை. மேலும் இவைகளுக்கெல்லாம் சாக்ஷி நானேயிருக்கிறேன். நான் முதலில் சைவ சமயத்தில் லக்ஷியம் வைத்துக் கொண்டிருந்தது இவ்வளவென்று அளவு சொல்ல முடியாது. அது பட்டணத்துச் சுவாமிக்கும் வேலாயுத முதலியாருக்கும் இன்னும் சிலர்க்குத் தெரியும். அந்த லக்ஷியம் எப்படி போய்விட்டது! பார்த்தீர்களா! அப்படி லக்ஷியம் வைத்ததற்குச் சாக்ஷி வேறே வேண்டியதில்லை. நான் பாடியிருக்கிற திருவருட்பாவில் அடங்கியிருந்த பாடலையும், மற்றவர்கள் பாடலையும் சபைக்குக் கொண்டு வந்தால் அவைகளே சாக்ஷி சொல்லிவிடும். ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போதிருந்ததென்றால், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது."

சைவ சமயத்தில் அளவிலாத பற்று கொண்டிருந்த வள்ளலார் அப்பற்றினை அறவழி துறந்து இயற்கை உண்மை என்ற நிலையை எட்டியிருப்பதை அவருடைய பேச்சு எடுத்துக் காட்டுகிறது. கடந்த காலத்தில் தனக்கு சொற்ப அறிவே இருந்தது. அதனால் உண்மையை உணராமல் போனேன் எனக் கூறிய துணிவு அவருக்கு மட்டுமே இருந்தது. அதனால்தான் தான் கண்ட மாபெரும் உண்மையான சமரச சுத்த சன்மார்க்கம் என்னும் வழியைப் பின்பற்றுமாறு மக்களுக்கு

வேண்டிகோள் விடுத்தார். (பழ.நெடுமாறன் வள்ளலார் மூட்டிய புரட்சி பக்.117-118)

வள்ளலார் எழுதிய வசன நடை இன்று இராமலிங்க பக்தர்களில் சிலர் இதை ஒப்புக்கொள்வதில்லை. இது வள்ளலாரால் எழுதப்பட்டது இல்லை, பிற்காலத்தில் மத வெறுப்புக் கொண்டவர்களால் எழுதப்பட்டு வள்ளலார் பெயரால் வெளியிடப்பட்டது என்று கூறுகின்றனர். இவ்வெழுத்தில் உள்ள கருத்துக்கள் வள்ளலார்க்கு உண்டா? இல்லையா? என்பதைத் தான் கவனிக்கவேண்டும், அவருடைய பாடல்களையும் ஆறாம் திருமுறையில் அவர் கூறியிருக்கும் புரட்சிக் கருத்துக்களையும் காணும்போது இக்கருத்து வள்ளலார்க்கு உண்டு என்று தான் எண்ணத் தோன்றும் வள்ளலார் உள்ளம், எண்ணம் உயர்வானவை என்பதில் ஐயமில்லை. கொடுமை செய்வதற்கு வெறியூட்டும் மதச் சேற்றில் மூழ்கவேண்டாம் என்பதே அவர் கூறும் அறிவுரை (முனைவர் அமிர்தலிங்கம், வள்ளலாரின் ஆளுமை உருவாக்கம், பக்.277-285 மற்றும் பழ.நெடுமாறன் மேலே கூறியது. ப.118)

### வள்ளலார் அருளிய சன்மார்க்க நெறிகள்

வள்ளலார் அருளிய சன்மார்க்க நெறிகளை சுருக்கமாகக் கீழே காணலாம்.

1. கடவுள் ஒருவரே - ஆறாம் திருமுறை, 2118.
2. சிறுதெய்வ வழிபாடு கூடாது. (ஆறாம் திருமுறை-912)
3. தெய்வங்களுக்கு உயிர்ப் பலியிடுதல் கூடாது (ஆறாம் திருமுறை -206)
4. புலால் மறுத்தல் (ஆறாம் திருமுறை. 894)
5. சாதிசமய வேறுபாடு கூடாது. (ஆறாம் திருமுறை.2300)
6. எவ்வுயிரையும் தம் உயிர்போல் எண்ணுதல் -ஆறாம் திருமுறை 2030 & 82031)
7. வேத, ஆகம, சாத்திர, புராண, இதிகாசங்கள் முடிவான உண்மையைத் தெரிவிக்கமாட்டா - ஆறாம் திருமுறை 2249 மற்றும் 2250
8. சமாதி வற்புறுத்தல் -ஆறாம் திருமுறை. 2343, 2344, 2346

வள்ளலாரின் கொள்கை பிணத்தைப் புதைப்பது இதனை வற்புறுத்திக் கூறுகின்றார். பிணத்தை சுடுவது கொலையாகும்.

நிறைவாக, வள்ளலார் வெறும் ஆன்மீகவாதியோ, அருளாளரோ மட்டுமல்ல, மிகச் சிறந்த சமூகச் சீர்திருத்தவாதியும்கூட "கரையுரைத்த கற்பனையே கலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப்போக." அவதரித்த அவர் தம் சீர்திருத்தக் கருத்துக்கள் அவர் சிறுவனாய் இருக்கும் போதே தொடங்கிவிட்டது எனலாம். மாணவப் பருவத்திலே மாறுபட்ட சிந்தனையை கொண்டவர் வள்ளலார். வளர வளர அவரது சீர்திருத்த எண்ணங்களும் வளரத் தொடங்கின. அவை சமய சீர்திருத்தங்களாகவும் சமுதாயச் சீர்திருத்தங்களாகவும் அமைந்தன. தமிழகத்தில் புதியதொரு மாற்றத்தையும் தோற்றுவித்தன. சைவ சமயம் சமூகத்தில் மூடப்பழக்கங்களால் தோய்வுற்றிருந்த காலத்தில் தோன்றிய வள்ளலார் தமது பாடல்கள், உரைநடைகள், சொற்பொழிவுகள் மூலம் அவற்றை மிக கடுமையாகச் சாடினார்.

வள்ளலாரின் சாதி, மதங்கள் கடந்த பாடல்களே ஆறாம் திருமுறையில் அடங்குவனவாகும். சாதி மதச் சமயச் சடங்குகளில் வேதாகமங்களான சாத்திரங்களில் வள்ளலார் ஒருமைப்பாடு காண விருப்பமில்லை என்பதையும் இவையெல்லாம் பொய்யாம் சழக்காம் என வெறுத்தார். சாதி சமயப் பிணக்கொழித்துச் சமரச சன்மார்க்க நெறியினை வற்புறுத்தும் ஆறாம் திருமுறையினையே நமக்குரிய ஆதார நூலாகக் கொள்ளலாம்.

### தேர்வு நூற்பட்டியல்


1. ஊரன் அடிகள், "புரட்சித் துறவி, வள்ளலார்" சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், கடலூர் - 2014
2. ம.பொ.சிவஞானம், வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, பூம்புகார் பதிப்பகம், 2008, சென்னை 108
3. ப.சரவணன், நவீன நோக்கில் வள்ளலார் காலச்சுவடு பதிப்பகம் வெளியீடு, 357, டிசம்பர் 2010.
4. 'ராஜ்கௌதமன், கண்மூடி வழக்கம் எலாம் மண்மூடிப்போக, தமிழினி வெளியீடு, 2012,
5. பழ.நெடுமாறன், வள்ளலார் மூட்டிய புரட்சி, ஐந்திணை வெளியீட்டகம், விழுப்புரம், ஜூலை 2018.
6. திரு அருட்பிரகாச வள்ளலார் அருளிய "திரு அருட்பா", உரைநடைப்பகுதி வெளியீடு.
7. திரு.அருட்பிரகாச வள்ளலார் தெய்வநிலையம் வடலூர், பத்தாம் பதிப்பு, 2016.
8. டாக்டர் ச.மெய்யப்பன், வள்ளலார் வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை-108, 2010
9. சாமி சிதம்பரனார், வள்ளலார் கூறும் வாழ்க்கை நெறி, 2003.
10. சாமி, சிதம்பரனார், வடலூரார் வாய்மொழி, சித்தக்கடல், I-6, லாயிட்ஸ் காலனி, அவ்வை சண்முகம் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14, 2007.
11. பா.சு.ரமணன், அருட்பிரகாச வள்ளலார், விகடன் பிரசுரம், அக்டோபர், 2010.
12. திரு அருட்பிரகாச வள்ளலார் வரலாறு வெளியீடு தெய்வநிலையம், வடலூர், ஏழாம் பதிப்பு, பிப்.2015.
13. க.வெள்ளைவாரணனார், திருவருட்பாச்சிந்தனை, பூம்புகார் பதிப்பகம், சென்னை 108, மார்ச், 2009.
14. இரா. வெங்கடேசன், கட்டுரை, சி.இராமலிங்கம் பாடல்கள் வள்ளலார் தொகுப்பான வரலாறு, உங்கள் நூலகம் மாத இதழ் நாள் ஜூலை 2011.


●


**கட்டுரையாளர், எழுத்தாளர்.**

கட்டுரை

# நெய்தல் நிலத்தின் கதை

சுப்பிரமணி இரமேஷ்

மாணிக்கம், அளம், கீதாரி, கற்றாழை உள்ளிட்ட நாவல்களை எழுதிய சு.தமிழ்ச்செல்வியின் புதிய நாவல் ‘சிலாவம்.’ தற்போது எழுதிக்கொண்டிருக்கும் குறிப்பிடத்தக்க பெண் எழுத்தாளர்களில் இவரும் ஒருவர். பொதுவாகப் பெண்கள் நவீன இலக்கியத்தில் கவிதைக்கே முக்கியத்துவம் கொடுத்து எழுதி வருகின்றனர். கவிதைக்கு அடுத்து சிறுகதையே அவர்களின் தேர்வாக இருக்கிறது. ஆனால், சு.தமிழ்ச்செல்வியின் பிரதான இலக்கிய வடிவம் நாவல். கடந்த இருபது ஆண்டுகளில் வெவ்வேறு நிலம் சார்ந்து பத்து நாவல்களை எழுதியுள்ளார். நாட்டார் வழக்காற்றியல் சார்ந்த தொன்மக் கதைகளுக்கு இவரது எழுத்து மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறது. கிராமம்தான் இவரது புனைவுகளின் நிலம்.

தொல்தமிழரின் திணை வாழ்க்கையில் நெய்தல் திணையும் ஒன்று. சங்க அக இலக்கியத்தில் பாலை, குறிஞ்சிக்கு அடுத்து நெய்தல் திணை சார்ந்து 342 பாடல்கள் பாடப்பட்டுள்ளன. பாலைக்குத் தனி நிலமில்லை என்பதால் மலைக்கு அடுத்து கடல்பகுதிதான் தொல்தமிழர் வாழ்க்கையில் பிரதான நிலமாக இருந்திருக்கிறது. ஆனால், சங்க காலத்திற்குப் பிறகு கடல் சார்ந்த வாழ்க்கை குறித்துக் குறைவாகவே எழுதப்பட்டுள்ளது. நவீன இலக்கியங்கள்தாம் மீண்டும் நெய்தல் நிலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன என்று கருத இடமிருக்கிறது. ‘கடல்புரத்தில்’, ‘ஒரு கடலோர கிராமத்தின் கதை’, ‘ஆழி சூழ் உலகு’ போன்ற நாவல்கள் நெய்தல் நிலம் சார்ந்து எழுதப்பட்ட நாவல்களில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ராஜம் கிருஷ்ணன், ஸ்ரீதர கணேசன் உள்ளிட்டோரும் இந்நிலம் சார்ந்து எழுதியுள்ளனர். சு.தமிழ்ச்செல்வி நெய்தல் நில மக்களின் வாழ்க்கையை வெவ்வேறு பின்னணியில் தொடர்ச்சியாக எழுதி வருகிறார். இவர் எழுதியுள்ள ‘அளம்’, ‘ஆறுகாட்டுத்துறை’ ஆகிய நாவல்கள் நெய்தல் நில வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டவை. ‘சிலாவம்’ நாவலும் அவற்றுடன் சேர்ந்து கொள்கிறது.



விவசாயிகள், இடையர்கள், மீனவர்கள், உப்பளம் என எந்தத் தொழில் சார்ந்து எழுதினாலும் அதில் பெண்களின் உழைப்புக்கே சு.தமிழ்ச்செல்வியின் நாவல்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றன. செல்லாயி (மாணிக்கம்), சுந்தராம்பாள் (அளம்), சமுத்திரவல்லி (ஆறுகாட்டுத்துறை), மணிமேகலை (கற்றாழை), கண்ணகி (கண்ணகி) என்று இவரது நாவல்களில் இடம்பெறும் பெண்கள் ஒரு காவியத்திற்கு நிகரான பாத்திரமாக ஒளிர்கின்றனர். இதன் தொடர்ச்சியாகவே 'சிலாவம்' நாவலில் வெங்கண்ணியைப் படைத்திருக்கிறார். தமிழில் புனைகதைகள் ஒருசார்புத் தன்மையுடனேயே எழுதப்படுகின்றன. பெண்களுக்கு உரிய இடமளித்து எழுதப்பட்ட நாவல்கள் மிகக் குறைவு; அவ்வாறு எழுதப்பட்ட நாவல்களும் ஆண்களின் பார்வையிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. அப்படித்தான் எழுதவும் இயலும். அதனைச் சமன்படுத்தும் பணியைப் பெண் எழுத்தாளர்கள் இன்று செய்து வருகின்றனர். அதில் ஒருவராக சு.தமிழ்ச்செல்வி இருக்கிறார். வெகுசன எழுத்துக்கும் காத்திரமான எழுத்துக்கும் இடையில் இவரது எழுத்தை நிறுத்தலாம். அதாவது, ராஜம் கிருஷ்ணனின் நவீன வடிவமாக இவரது எழுத்துக்கள் இருக்கின்றன.

நாட்டார் பழமரபுக் கதைகளுக்கு சு.தமிழ்ச்செல்வி புனைவு வடிவம் கொடுத்து எழுதி வருகிறார். இவர் நாவல் எழுதத் தேர்ந்தெடுக்கும் நிலப்பரப்பில் புழங்கும் தொன்மம் சார்ந்த கதைகள் இவர் நாவல்களினூடாக மீளுருவாக்கம் செய்யப்படுகின்றன. இவர் எழுதத் தேர்ந்தெடுக்கும் கதைகளுடன் நாட்டார் கதைகளும் புனைவுகளில் ஊடிழையாகப் பயணிக்கின்றன. இயற்கை சார்ந்த பொருட்களின்மீது பொதுமக்களால் கட்டப்பட்டுள்ள நம்பிக்கைகளும் சடங்குகளும் இவரது எழுத்தில் பூரணத்துவம் பெறுகின்றன; அந்த நம்பிக்கைகளுக்கு இவரது எழுத்து ஒரு புனைவை உருவாக்கி உறுதிப்படுத்துகிறது. 'அண்மைப் பழங்காலத்தில் நிகழ்ந்த உண்மையான நிகழ்ச்சிகளையோ, கற்பனையான நிகழ்ச்சிகளையோ கருப்பொருளாகக் கொண்டு, மக்கள் கூறும் கதைகளே பழமரபுக் கதைகளாகும். இக்கதைகளின் முக்கியப் பாத்திரங்கள் மனிதர்களே என்றாலும் பேய்கள், இறந்து உயிர்த்தெழுந்தவர்கள், தெய்வங்கள், புனிதர்கள் ஆகியோரும் இதில் இடம்பெறுவர்' (அடித்தள மக்கள் வரலாறு, பக்.15) என்று தொன்மக் கதைகள் குறித்து கருத்துத் தெரிவித்திருக்கிறார் ஆ.சிவசுப்பிரமணியன். இந்தப் பின்னணியில்தான் 'சிலாவம்' நாவலையும் அணுக வேண்டியிருக்கிறது.

'சிலாவம்' Bynge செயலியில் தொடராக எழுதப்பட்டது. அதனால் தொடர்கதைகளுக்கே உரிய பலவீனங்களுடன்தான் இப்புதினத்தை அணுகவேண்டும். இந்தப் புதினத்திலும் ஒரு தொன்மக்கதை இடம்பெறுகிறது. முத்துக்குளிப்பதில் திறமைசாலியான முத்துராசாவைப் பாண்டிய மன்னன் அரண்மனைக்கு அழைத்துப் பாராட்டுகிறான். இவனது ஆற்றலிலும் அழகிலும் மயங்கிய பட்டத்து இளவரசி, முத்துராசாவைக் காதலிக்கிறாள். இந்த உண்மை அரசனுக்குத் தெரியவருகிறது. அரசன் சரியான முடிவெடுக்கமுடியாத நிலையில் இருக்கிறான். இந்நிலையில், சேனாதிபதி முத்துராசாவைக் கடலுக்கு அழைத்துச்சென்று கல்லைக்கட்டி நீரில் மூழ்கடித்துக் கொன்று விடுகிறான். இதனையறிந்த இளவரசியும் கல்லைக் கட்டிக்கொண்டு கடலில் விழுந்து தற்கொலை செய்துகொள்கிறாள். இருவரது ஆன்மாவையும் இரு சிப்பிகள் பத்திரப்படுத்தி வைத்திருப்பதாக அப்பகுதி மீனவர்கள் நம்புகின்றனர். இந்த வாய்மொழிக் கதையை எடுத்துக்கொண்டுதான் சு.தமிழ்ச்செல்வி இந்நாவலை எழுதியிருக்கிறார். இந்தக் கதையைப் புனைவாக்குவதற்காக அவர் எடுத்துக்கொண்ட கதாபாத்திரங்கள் பரதவர்கள். அவர்களினூடாக முத்துக் குளிப்பவர்களின் வாழ்க்கையும் அவர்களது நம்பிக்கைகளும் நாவலில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.


இறந்தவர்களின் உடலிலிருந்து வெளியேறும் ஆன்மா குறித்த நம்பிக்கை நாட்டார் வழக்காறுகளில் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. இறந்தவர்களுக்குச் செய்யும் சடங்குகள் மூலமாக இதனை உறுதிப்படுத்தலாம். இந்த நம்பிக்கைக்கு ஒரு பெரும் தொடர்ச்சி இருக்கிறது. இத்தகைய ஆவியுலகக் கோட்பாடு குறித்து ஆ.சிவசுப்பிரமணியன் பின்வருமாறு கூறுகிறார்:

- இறந்த அல்லது உயிரோடிருக்கும் மனிதர்கள் மற்றும் விலங்குகளின் ஆவி அல்லது ஆன்மாவின் மீது நம்பிக்கை கொண்டு வழிபடுதல்.
- பௌதிகப் பொருள்களின் மீது உறுதியாகத் தொடர்பில்லாத ஆவிகளின் மீது நம்பிக்கை கொள்ளுதல்.
- இயற்கைப் பொருள்களின் மீதும் வாழும் ஆவிகளின் மீதும் நம்பிக்கை கொண்டு வழிபடுதல் (மந்திரமும் சடங்குகளும், பக்.26).

ஆவியுலகக் கோட்பாட்டினை அடிப்படையாகக்கொண்டு நாட்டார் வழக்காற்றியல் பார்வையிலும் இந்நாவலை வாசிக்கலாம். வெளிப்படையாகப் பார்த்தால் 'சிலாவம்' முத்துக் குளிப்புத் தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் வாழ்க்கை குறித்து எழுதப்பட்டது போலத் தோன்றும். நுட்பமாக வாசித்தால் தூத்துக்குடிக்கு அருகிலுள்ள முயல்தீவு என்ற பகுதியில் வழங்கப்பெறும் மேற்கண்ட பழமரபுக் கதையையே புனைவு மையப்படுத்தியிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இந்தக் கதையைப் புனைவாக்க சு.தமிழ்ச்செல்விக்குச் சில கதாபாத்திரங்கள் தேவைப்பட்டிருக்கின்றன. அதனால் சடையன், வெங்கண்ணி, இசக்கிமுத்து, பேத்தை, முருகன், வீரைய்யன், சின்னக்கருப்பன், முத்துமாரி உள்ளிட்டவர்களை சு.தமிழ்ச்செல்வி பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

நாட்டுப்புற மக்களிடம் ஏராளமான தொன்மக் கதைகளும் நம்பிக்கைகளும் கொட்டிக் கிடக்கின்றன. அந்தத் தொன்மத்திற்குப் பின்னுள்ள கதைகள் அவர்களின் வாழ்க்கைக்கு மிக நெருக்கமானதாக இருக்கும்;

பண்பாட்டுடன் கலந்தவையாக இருக்கும். இப்படியொரு கதையாகத்தான் முத்துராசா - இளவரசி கதையைப் பார்க்க வேண்டியிருக்கிறது. காதலித்த இருவர் கடலுக்குள் சிப்பியாகக் கிடக்கிறார்கள். அவர்கள் ஆன்மாவுக்கு உயிர்கொடுக்க வேண்டும். இறந்தவர்கள் மீண்டும் பிறக்கிறார்கள் என்பது நாட்டுப்புற மக்களின் ஆழமான நம்பிக்கை. இன்றுவரை இந்நம்பிக்கை கொஞ்சமும் தளர்ச்சியடையவில்லை. 'சிலாவம்' அந்த நம்பிக்கைக்கு மேலும் வலுச் சேர்த்திருக்கிறது.




சடையனால் இலங்கைத்தீவில் குழந்தையாகக் கண்டெடுக்கப்பட்டவள் வெங்கண்ணி. சடையனின் மனைவி அன்னம்மா இறப்பிற்குப் பிறகு வெங்கண்ணிக்கு எல்லாமுமாக இருப்பவன் சடையன்தான். இவ்விரு கதாபாத்திரங்களுமே புனைவில் வலிமையாகப் பின்னப்பட்டுள்ளன. தந்தையும் மகளும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடுதான் இப்பாத்திரங்கள். ஒருவருக்கொருவர் கொண்டுள்ள அன்பும் அனுசரணையும் மெச்சத்தகுந்தவை. இவர்களிருவரையும் சுற்றியே பிற கதாபாத்திரங்கள் இயங்குகின்றன. வெங்கண்ணி ஆண்களைப் போன்று வத்தையை எடுத்துக்கொண்டு தனியாகக் கடலுக்குச் செல்கிறாள். முத்துக்குளிக்கவும் அவளுக்கு ஆசை இருக்கிறது. பொதுவாக மீனவப் பெண்கள் கரையில் நின்று ஆண்களுக்கு உதவுவதாகவே இதுவரை எழுதப்பட்டுள்ளன. புனைவில் அவர்களுக்கு அவ்வளவுதான் இடமளிக்கப்பட்டிருக்கும். இந்நாவல் விதிவிலக்கு. சு.தமிழ்ச்செல்வி தொடக்கம் முதலே இப்படித்தான் எழுதி வருகிறார். அதாவது, அன்றாட வாழ்க்கையில் மறைக்கப்பட்ட பெண்களின் இருப்பை ஆவணப்படுத்துவதை இவர் புனைவுகள் செய்து வருகின்றன. இந்நாவலில் வெங்கண்ணிக்கு அந்த இடம் அளிக்கப்பட்டுள்ளது.

சடையனும் கணவன் இசக்கிமுத்துவும் வெங்கண்ணி எடுக்கும் எந்த முடிவுக்கும் கட்டுப்படுகின்றனர். 'அவள் சொன்னால் சரியாகத்தான் இருக்கும்' என்று நம்புகின்றனர். வெங்கண்ணி கடல் தாயின் மகள் என்ற படிமத்தை புனைவின் தொடக்கத்திலேயே சு.தமிழ்ச்செல்வி உருவாக்கி விடுகிறார். நாவல், யதார்த்தவாதத்தை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டிருந்தாலும் பல இடங்களில் மாயத்தையும் நிகழ்த்திக் காட்டுகிறது. பெரிய துயரங்கள் வந்தாலும் இவர்களின் கடவுளான 'முனியசாமி' அதனை ஒன்றுமில்லாமல் செய்து விடுகிறார். மாயத்தை நிகழ்த்திக் காட்டும் ஆற்றல் கடவுளுக்கு இருக்கிறது; 'முனியசாமி' கடவுள். எனவே, புனைவு உருவாக்கும் தர்க்கப் பிரச்சினைகள் குறித்துக் கேள்விகள் எழுவதற்கு வாய்ப்பில்லாமல் போகிறது. அதாவது, வெங்கண்ணியின் ஆளுமையை நிறுவிக்கொள்ள முனியசாமி பயன்பட்டிருக்கிறார்.

இந்நாவல் கட்டமைக்கும் சிறுதெய்வ நம்பிக்கை அசாத்தியமானது. சடையனை முனியசாமி எப்போதும் பின்தொடர்கிறார். இசக்கிமுத்துவைக் கண்டுபிடிப்பதற்கு முனியசாமி வியாபாரி வேடம் புனைந்துகொள்கிறார். சடையனுடன் லாரியில் கொல்கத்தா வரை பயணிக்கிறார். கடவுளுக்குரிய பெரிய பிம்பத்தை அழித்து மனிதர்களுடன் மிக நெருக்கமாக்கும் வேலையைப் புனைவு செய்திருக்கிறது. நாட்டுப்புற தெய்வங்களின் தன்மையாக இதனைக் கருதலாம். சிறுதெய்வகள் உருவாகும் பின்னணிகள் எப்போதும் சுவாரசியமானவை. அப்படித்தான் முனியசாமியின் தோற்றமும். இலங்கையிலிருந்து கொண்டுவந்த மண்ணைக் கடலில் மிதந்து வந்த தென்னங்குடுவையில் நிரப்பிவைத்து வழிபடுகிறார் சடையன். தற்போது முயல்தீவில் எல்லோருக்குமான கடவுளாக முனியசாமி இருக்கிறார். எனவே, முனியசாமியை முயல்தீவுக்குக் கடவுளாக்கியவர் சடையன். சடையனின் மூலமாகப் பரவிய நம்பிக்கையால்தான் முனியசாமி அம்மண்ணில் கடவுளாக நிலைபெறுகிறார். இதுபோன்று நாட்டுப்புற தெய்வங்களில் மீது மக்களுக்கிருக்கும் நம்பிக்கையில் நீர்பாய்ச்சும் வேலையையும் சு.தமிழ்ச்செல்வியின் புனைவுகள் தொடர்ச்சியாகச் செய்துவருகின்றன.

'சிலாவம்' மீனவர்களின் தொழில் சார்ந்த துயரங்களை எழுத்தாக்கவில்லை என்பது ஆறுதல். கடலில் ஏற்படும் இயற்கைச் சீற்றங்கள் இயல்பானவை. சுறா மீனால் உண்டாகும் பிரச்சினைகளும் அவர்களுக்குத் தெரிந்தேதான் இருக்கிறது. எல்லாம் தெரிந்துதான் வெங்கண்ணி கடலுக்குச் செல்கிறாள். நிலத்தில் இரு சக்கர வாகனத்தில் பொழுதுபோக்குக்காகச் சுற்றுவதைப் போல மரக்கலத்தைத் தள்ளிக்கொண்டு கடலுக்குச் செல்கிறார்கள். மகிழ்ச்சியையும் துயரத்தையும் கடல்மீது நின்றுகொண்டே பகிர்ந்துகொள்கிறார்கள். அன்றாடத்தின் ஒரு பகுதியாக மீனவர்களுக்குக் கடல் இருக்கிறது. கடல் அன்னையின் மீதான நம்பிக்கைதான் அவர்களை இயங்க வைக்கிறது. இதுபோன்ற மீனவர்களது கடல் சார்ந்த வாழ்க்கையையும் நம்பிக்கையையும் சடங்குகளையும் கொண்டாட்டங்களையுமே நாவல் விவரிக்கிறது.

இந்நாவலில் துயரங்கள் நேரடியாகப் பகிர்ந்துகொள்ளப்படுவதில்லை. பின்னோக்கு உத்தியில்தான் நினைவுகூரப்படுகிறது. நாவலில் நல்ல விஷயங்கள் மட்டுமே அடுத்தடுத்து நிகழ்கின்றன. மனிதர்கள் இவ்வளவு நல்லவர்களா என்று ஆச்சரியப்படும் அளவுக்குப் புனைவின் ஒவ்வொரு கதாபாத்திரமும் உருவாக்கப்பட்டுள்ளன. நினைத்த எல்லாமும் உடனுக்குடன் கைக்கூடி வருகிறது. யதார்த்தத்தில் அப்படி நிகழ்வதில்லைதானே? இதுபோன்ற இடங்களில்தான் நாவல் யதார்த்தத்தை

மீறிச் செல்கிறது. நவீன இலக்கியத்தின் பெரும் சாதனை, மனித மனங்களில் படிந்துபோயுள்ள கசப்புணர்வை இலக்கியமாக்கியதுதான். சு.தமிழ்ச்செல்வி இதுபோன்ற இடங்களைத் தவற விடுகிறார் என்று தோன்றுகிறது. துயரங்களை எல்லாம் நினைவுகளாகப் பகிரப்படும்போது துயரம் அதன் வீரியத்தை இழந்து விடுகிறது. இந்தப் பிரச்சினை இந்நாவலிலும் இருக்கிறது.

வெங்கண்ணி கதாபாத்திரம் பெண்களின் இருப்பு சார்ந்து அவ்வளவு நம்பிக்கையை உருவாக்குகிறது. ஆண்களைப் போன்று சங்கெடுக்கவும் இவள் ஆசைப்படுகிறாள். சடையன்தான் தடுக்கிறான். அவள் அணியக்கூடிய ஆடை இந்தத் தொழிலுக்குச் சரியாக இருக்காது என்கிறான். பெண்களின் இயல்புகள் மிக நுட்பமாகப் புனைவுக்குள் தொழிற்பட்டுள்ளன. இசக்கிமுத்துவுடனான காதலைச் சடையன் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறார். ‘தன் மகள் ஒரு பயலை விரும்புகிறாள் என்ற நினைவே அவருக்கு உவப்பாயிருந்தது’ என்கிறார். ஒரு பெண்ணின் பார்வையில் ஆண்கள் எப்படி இருக்கவேண்டும் என்ற ஏக்கம்தான் சடையன் மற்றும் இசக்கிமுத்துவின் கதாபாத்திரங்கள். வெங்கண்ணியைப் புரிந்துகொண்ட இரு ஆண்கள் அவளுக்கு வாழ்க்கையில் அமைகிறார்கள். சு.தமிழ்ச்செல்வி, பெண்களின் சார்பில் நின்று பெண்ணியம் பேசவில்லை. ஆனால் தனக்கு விருப்பமான ஓர் ஆண்களின் உலகத்தை இந்நாவலில் படைத்துள்ளார். செங்கண்ணியின் தோழியான பேத்தை கதாபத்திரமும் நாவலில் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது.

புனைவின் தொடக்கத்தில் சொல்லப்பட்டிருக்கும் வாய்மொழிக் கதையை நாவலின் இறுதியில் புனைவாசிரியர் அழகாக இணைத்திருக்கிறார். இந்த வாய்மொழிக் கதைக்கு நிகழ்காலத் தன்மையை அளிப்பதற்கு வெங்கண்ணியும் பேத்தையும் பயன்பட்டிருக்கிறார்கள். பேத்தைக்கும் முருகனுக்கும் ஓர் ஆண் குழந்தை பிறக்கிறது; முத்துராசா எனப் பெயர் வைக்கிறார்கள். வெங்கண்ணிக்கும் இசக்கிமுத்துவுக்கும் பிறக்கும் பெண் குழந்தைக்கு இளவரசி எனப் பெயரிடுகிறார்கள். எதிர்காலத்தில் இவர்கள் இருவரும் ஒன்று சேர்வதற்கான வாசலைப் புனைவு திறந்து விடுகிறது. கடலில் இரு சிப்பிகளில் அடைபட்டுக் கிடந்த முத்துராசாவின் ஆன்மாவும் இளவரசியின் ஆன்மாவும் மீண்டும் மனித உரு எடுக்கின்றன. இது வெங்கண்ணி மற்றும் பேத்தையின் வழியாக நிகழ்கிறது. நாட்டுப்புற நம்பிக்கையில் இதனை தெய்வீக ஆவி என்கின்றனர். அதாவது காற்று, மழை, நெருப்பு, கடல், மலை, சூரியன், சந்திரன் போன்ற இயற்கைச் சக்திகளிலும் பொருள்களிலும் ஆவி உறைவதாக ஆதிகால மனிதன் நம்பினான். அந்த நம்பிக்கை இன்றும் தொடர்கிறது.

தெய்வீக ஆவி குறித்த நம்பிக்கை நாட்டுப்புற மக்களிடம் எவ்வாறு உருவாகியிருக்கும் என்பதற்கான உறுதியான காரணங்களைக் கூற இயலாது. ஆனால், நாட்டுப்புற ஆய்வாளர்கள் சில அனுமானங்களை முன்வைக்கின்றனர். ‘உலகப் பொருள்களின் அடிப்படைத் தன்மைகளை அறிய இயலாத நிலையில் அப்பொருள்களுக்கு அதீத ஆற்றலைப் புராதன மனிதன் கற்பித்தான். அத்துடன் இத்தகைய ஆற்றலையுடைய பொருள்கள் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்று மென்று நம்பினான். இதனையே ‘புனிதப் பொருள் வழிபாடு’ என்பர்’ (மந்திரமும் சடங்குகளும் பக்.27) என்று ஆ.சிவசுப்பிரமணியன் கூறுகிறார். இயற்கைப் பொருட்களில் ஆவியுறையும் நம்பிக்கையை மீனவர்களின் வாழ்வியலுடன் இணைத்து சு.தமிழ்ச்செல்வி புனைவாக்கியதில் வெற்றி பெற்றிருக்கிறார். இப்புனைவினூடாக வெளிப்படும் மீனவர்களின் நம்பிக்கைகள், சடங்குகள், சொலவடைகள், மருத்துவம் என எல்லாவற்றைக் குறித்தும் உரையாடலாம். ஆனால் பல நூறு ஆண்டுகளாக சொல்லப்பட்டு வரும் ஒரு நாட்டார் கதைக்கு உயிர் கொடுத்தத்தில்தான் புனைவு தனித்துத் தெரிகிறது.

இயற்கையைத் தெய்வமாக வணங்கும் வழக்கம் நாட்டுப்புற மக்களிடம் இன்றும் உள்ளது. அந்த வகையில் கடல் அவர்களுக்கு முக்கிய தெய்வம். மனித ஆற்றலுக்கும் மேலான ஆற்றல் இயற்கையிடம் இருப்பதாக அவர்கள் நம்புகின்றனர். அதுதான் உலகத்தைக் கட்டுப்படுத்துகிறது என்ற நம்பிக்கையும் அவர்களிடம் ஆழமாக இருக்கிறது. புயல், கடல் சீற்றம், பெருமழை, பூகம்பம் போன்றவற்றை அவர்கள் தற்செயல் நிகழ்வுகளாகப் பார்ப்பதில்லை. மனிதத் தவறுகளுக்கு இயற்கை தரும் சமிக்ஞைகளாகக் கருதுகின்றனர். இயற்கையின் ஆற்றலை வழிபாட்டின் மூலமாகவும் அவற்றின்மீது வைக்கும் நம்பிக்கையின் மூலமாகவும் தங்களால் பெற முடியும் என்று நம்புகின்றனர். சடையன் அத்தகையதொரு கதாபாத்திரம். அவனிடமிருந்தே இதுபோன்ற நம்பிக்கைகள் புனைவில் வெளிப்பட்டிருக்கின்றன.

தமிழ்ப் புனைகதை வரலாற்றில் நிலம் சார்ந்த எழுத்துக்கு எப்போதும் வரவேற்பு உண்டு. அதில் சிலாவமும் தன்னை இணைத்துக் கொள்கிறது. வெங்கண்ணியின் திருமணத்துடன் நாவல் முடிந்திருக்க வேண்டும். ஆனால் பாண்டிய நாட்டு இளவரசி வெங்கண்ணியின் வயிற்றில் பிறக்க வேண்டும் என்பதற்காக இரண்டாம் பாகமாக நீண்டிருக்கிறது. அடுத்து, நாவலில் பெரிய திருப்பங்களே இல்லை. எல்லாமே சடையன் குடும்பத்திற்குச் சாதகமாகவே நடப்பதால் வாசிக்கும்போது ஒரு தொய்வை ஏற்படுத்தி விடுகிறது. நாவலின் இறுதிப் பகுதியில் இடம்பெறும் நிலம்பெயர்வுகூட பெரிய அளவுக்கு மீனவர்களிடம் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. முனியசாமியை நம்பாதவர்களுக்கும் நாவல் நியாயம் செய்திருக்க வேண்டும். ஆனால் பிரதி அதனைச் செய்யவில்லை என்றே கருதுகிறேன்.

●

கட்டுரையாளர் உதவிப் பேராசிரியர்,
D.R.B.C.C.C இந்துக் கல்லூரி, சென்னை- 72.



கட்டுரை

# மகாகவி பாரதீ

பேராசிரியர் உ. அலிபாவா

தமிழ் இலக்கிய உலகில் புதிய கவி ஊற்றாகப் பொங்கிப் பீறிட்டு எழுந்த கவிஞன் மகா கவி பாரதி. பாரதியின் எழுத்துகள் எல்லா வகையிலும் தமிழ் உலகில் மாற்றத்தைக் கொண்டு வந்த எழுத்துகள். முப்பத்து ஒன்பது ஆண்டுகளே வாழ்ந்து மறைந்த கவிஞரின் எழுத்துகள் சாகாவரம் பெற்றவை. அவை பன்முக ஆளுமையுடையவை. பாரதி மறைந்து நூறாண்டுகள் ஆகின்றன. ஆனாலும் அவன் இன்றளவும் பேசப்படுகின்றான். இன்னும் பேசப்படுவான். இங்ஙனம் பேசப்படுவதற்கு மூல ஆதாரமாக இருப்பவை அவனுடைய எழுத்தும் வாழ்க்கையும் என்றால் அது மிகையில்லை. அதனால் தான் அவனுடைய வாழ்க்கையையும் எழுத்துகளையும் பார்க்கிறபோது அவற்றுள் காலந்தோறும் தேவைப்படுகின்ற மிகப்பெரிய கருவூலம் ஒன்று இருப்பதைக் காணமுடிகிறது.

'கனவிலும் இன்னாது மன்னோ சொல்வேறு செயல்வேறு பட்டார் தொடர்பு' என்பார் வள்ளுவப் பெருந்தொகை. பாரதியின் வாழ்வும் வாக்கும் சுத்தமானவை. வாழ்க்கையை வகுத்துக் கொண்டு வாழ்ந்த அவன், 'நமக்குத் தொழில் கவிதை; நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்' என்று தம் வாழ்க்கையைப் பிரகடனப்படுத்திக் கொண்டு வாழ்ந்தான்.

தெய்வ நம்பிக்கையைத் தம் நெஞ்சத்தில் எப்போதும் தேக்கியிருந்த மகாகவி பாரதி, 'என் அறிவில் தெய்வத் தன்மை காணப்படுகிறது. நான் ஒரு தேவனைப் போலே சிந்தனை செய்ய வல்லேன். இனி என் செய்கைகளிலும் தெய்வத் தன்மை விளங்குதற்குரிய வழி செய்ய வேண்டும்' என்று சிந்தித்தான். 'தெய்வம் என்னுள் எப்போதும் வந்து பொழிந்து கொண்டிருக்கும்படி என்னைத் திறந்து வைத்திருக்கிறேன்' என்று குறிப்பிடும் கவிஞன்,

"தெய்வம் பலபல சொல்லி - பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்
உய்வ தனைத்திலும் ஒன்றாய் - எங்கும்
ஓர்பொரு ளானது தெய்வம்"

"ஆத்திசூடி இளம்பிறை அணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்;
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள் ஒன்றே;"

எனும் கருத்துடைய பாரதி இறைவன் ஒருவன் என்பதை ஏற்றபின், 'ஏகனான இறைவனே அனேகனாகக் காட்சி தருகிறான்' எனும் மாணிக்கவாசகர் வழிப்பட்ட சிந்தனை உடையவனாகத் திகழ்ந்தான்.

'பரம்பொருள் ஒன்று' என்ற பாரதி உண்மையை வாழ்த்தினான்.

**“உண்மையின் பேர் தெய்வம் என்போம் - அன்றி'**
**ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக் கண்டோம்;**
**உண்மைகள் வேதங்கள் என்போம் - பிறிது**
**உள்ள முறைகள் கதையெனக் கண்டோம்”**

எனப் பாடி உண்மையே தெய்வம் என்றான். 'உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்'. அதனால் உண்மையைப் பேண வலியுறுத்தினான்.

எப்போதும் மலர்ந்த முகமும் இனிய சொல்லும் தெளிந்த சிந்தையும் கொண்டிருந்த பாரதி, 'இடையறாத தொழில் புரிந்து இவ்வுலகம் பெருமைகள் பெற முயல்வேன். இல்லாவிடின் விதி வசமென்று மகிழ்ச்சியோடு இருப்பேன்' என்று வாழ்ந்தான். அனைவரும் மகிழ்ச்சியோடு இருப்பதையே அவன் விரும்பினான்.

'ஒவ்வொருவரும் அகத்தைத் தூய்மைப்படுத்தி வாழவேண்டும்' என்று அவன் ஆசைப்பட்டான். அதனால்தான் அவன், 'உள்ளும் புறமும் ஒன்று' என்றான்; 'உள்ளும் புறமும் மாசில்லாது செய்யப் பழக வேண்டும்' என்று வழிகாட்டினான். 'மனத்தை உற்சாக நிலையில் வைத்துக் கொண்டால் உடம்பிலே தீவிரமுண்டாகும். உடம்பைத் தீவிரமாகச் செய்து கொண்டால் மனது உற்சாகத்துடன் இருக்கும். மனத் தளர்ச்சிக்கு இடம் கொடுக்கலாகாது' என்று ஓர் உளவியல் மருத்துவனைப் போன்று மனித மனத்தைப் பக்குவப்படுத்தி வாழ்தலைக் குறித்துக் கருத்துரைத்தான்.

அகத்தைத் தூய்மைப்படுத்தி வாழ அறிவுறுத்திய கவிஞன் அகந்தை கொள்ளலாகாது என்றான். 'அகங்காரம் பிரிவு படுத்துகிறது' எனக் குறிப்பிட்டான். 'உலகத்தார் அகங்காரம் என்ற அசுரனுக்கு வசப்பட்டு சகல தேசங்களிலும் நரகத் துன்பத்தை அனுபவிக்கிறார்கள். அகங்காரத்தை வெட்டி எறிந்து விட்டால் மனித சாதி அமர நிலையடையும்' என்று எடுத்தியம்பிய பாரதி,

**“தேவர் வந்து நமக்குட் புகுந்தே**
**நாசமின்றி நமை நித்தம் காப்பார்**
**நம் அகந்தையை நாம் கொன்று விட்டால்”**

என்றும் இயம்புகிறார்.

அகந்தையை அழித்து வாழ வழிகாட்டிய பாரதி அச்சம் தவிர், ஆண்மை தவறேல் என அச்சமின்றி வாழக் கட்டளையிடுகிறான்.

**“நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி**
**அஞ்சி உயிர் வாழ்தல்**
**அறியாமை தஞ்சமென்றே**
**வையமெலாங் காக்கும் மகாசக்தி நல்லருளை**
**ஐயமறப் பற்றல் அறிவு”**

என எடுத்துரைக்கிறான். அஞ்சி அஞ்சி அன்றைய நாளில் வாழ்ந்த இந்தியத் திருநாட்டு மக்களின் மனங்களில் புதைந்து கிடந்த தேவையற்ற அச்ச உணர்வை ஆணிவேரோடு பிடுங்கி எறிய அவன் எத்தனித்தான். அதனால்தான் 'அச்சம் இல்லை, அழுங்குதல் இல்லை, நடுங்குதல் இல்லை, நாணுதல் இல்லை, பாவம் இல்லை, பதுங்குதல் இல்லை, ஏது நேரினும் இடர்ப்பட மாட்டோம், கடல் பொங்கி எழுந்தால் கலங்க மாட்டோம், யார்க்கும் அஞ்சோம், எதற்கும் அஞ்சோம், எங்கும் அஞ்சோம்' என்று அடுக்கிக் கொண்டே போகிறான்.

அச்சத்தை அகற்றி வாழ அறிவுறுத்தும் கவிஞன் அடிமையுணர்வை அகற்றி வாழவும் அறிவுறுத்துகிறான். யாரும் யாரையும் அடிமைப்படுத்தி வாழ்தல் ஆகாது எனக் கூறும் பாரதி,

**“அறிவு கொண்ட மனித உயிர்களை**
**அடிமையாக்க முயல்பவர் பித்தராம்**
**நெறிகள் யாவினும் மேம்பட்டு மானிடர்**
**நேர்மை கொண்டுயர் தேவர்கள் ஆவதற்கே**
**சிறிய தொண்டுகள் தீர்த்து அடிமைச்சுருள்**
**தீயில் இட்டுப் பொசுக்கிட வேண்டுமாம்”**

என்று கடுஞ்சீற்றத்துடன் மொழிகிறான். தன்னையே அறியாமல் அடிமைப்பட்டுக்கிடக்கும் மாந்தரை,

**“எப்போதும் கை கட்டுவார் - இவர்**
**யாரிடத்தும் பூனைகள்போல் ஏங்கி நடப்பார்”**

என்று அடையாளங் காட்டுகிறான்.

மனிதர்கள் தான் மனிதரை அடிமைகளாக்கிப் பார்க்க விழைகின்றனர். 'மிருகங்களும் பட்சிகளும் பிற சாதி மிருக பட்சிகளை அடிமைப்படுத்துவதில்லை; சுய சாதிகளையும் அடிமையாக்குவதில்லை. சிங்கத்துக்குக் கீழே மற்றொரு சிங்கம் அடிமை கிடையாது. ஒரு நாய், ஒரு கழுதை, ஒரு நரி, ஒரு பன்றி கூடச் சிங்கத்தின் கீழே அடிமையில்லை' எனப் பலவாறு பகரும் பாரதி, 'நம்மைப் போன்றதொரு ஆத்மா நமக்கு அச்சத்தினாலே அடிமைப்பட்டிருக்கும் என்று நினைப்பவன் அரசனாயினும், குருவாயினும், புருஷனாயினும் மூடனைத் தவிர வேறில்லை. அவனுடைய நோக்கம் நிறைவேறாது' என்று எச்சரிக்கவும் செய்கிறான். எல்லோர் சார்பாகவும், 'இந்தப் பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம் பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்' என்று குரல் கொடுக்கிறான்.

'ஏழ்மை கொண்ட போழ்தினும் அறந்தவிர்க்கிலாது நில்' என்று அறத்தை வலியுறுத்தும் பாரதி, 'சுடுதலும் குளிர்தலும் உயிருக்கில்லை; சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக்கில்லை; எடுமினோ அறப் போரினை!' என அறத்தைக் கையிலெடுக்க வலியுறுத்துகிறான். அறத்தைப் பேணக் கூறும் கவிஞன், 'துன்ப நினைவுகளும் சோர்வும் பயமுமெல்லாம் அன்பில் அழியுமடி கிளியே அன்புக்கு அழிவில்லை காண்' என்று அன்பை எடுத்துரைக்கிறான். 'அன்புண்டானால் இன்பமுண்டு. அன்பு கொள்கையில் இருந்தால் போதாது செய்கையில் இருக்க வேண்டும்' என்றும் சுட்டுகிறான்.

சமூகம் சார்ந்து பலவாறு சிந்திக்கும் பாரதி தமிழின் மேல் தனிப் பற்றுக்கொண்டு திகழ்ந்தான். 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்', தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகையில் செய்தல் வேண்டும்', 'சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்' எனப் பலவாறு தமிழ் மீது பற்றுக் கொண்டு பாடும் கவிஞன், 'இயன்ற வரை தமிழே

பேசுவேன், தமிழே எழுதுவேன்' சிந்தனை செய்வது தமிழிலே செய்வேன்' என்று தாய்மொழிப் பற்றை வெளிப்படுத்துகிறான்.

'இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களுக்குப் போய்த் தேறினவர்களிடம் மனச் சாட்சியும் அறிவுப் பயிற்சியின் விலாசத்திற்குத் தகுந்த படியும் நடக்கும் யோக்யதை மிகக் குறைவாக இருக்கிறது' என்பதும் பாரதியின் கருத்து.

ஆணும் பெண்ணும் ஒன்றுக்கொன்று உண்மையாக இருந்தால் நன்மையுண்டாகும். சகல அம்சங்களிலும் ஸ்திரீயே மேல். பெண்ணை அடிமை என்று கருதாதே. முற்காலத்துத் தமிழர் மனைவியை 'வாழ்க்கைத் துணை' என்றார். ஆத்மாவும் சக்தியும் ஒன்று. ஆணும் பெண்ணும் சமம்' என்பன பாரதியின் பெண்கள் பற்றிய கொள்கை. அதனால் தான் அவன்,

**"ஆணும் பெண்ணும் சமம் எனக் கொள்வதால்**
**அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்"**

எனப் பாடுகிறான்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்"

என்று பாடிய பாரதி, 'ஒரு தேசத்தின் நாகரிகத்துக்கு அந்தத் தேசத்தின் இலக்கியமே மேலான அடையாளம்' என்றான். உலகத்து உயிர்களையெல்லாம் நேசித்த பாரதி,

**"காக்கை குருவி எங்கள் ஜாதி – நீள்**
**கடலும் மலையும் எங்கள் கூட்டம்**
**நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை**
**நோக்க நோக்கக் களியாட்டம்"**

என்று பாடினான். உலகத்து உயிர்களையும் இயற்கையையும் அவன் பிரித்துப் பார்க்கவில்லை.

'எண்ணிய முடிதல் வேண்டும், நல்லவே எண்ணல் வேண்டும், திண்ணிய நெஞ்சம் வேண்டும், தெளிந்த நல் அறிவு வேண்டும்' என்று வேண்டிய பாரதி உழைப்பை நம்பினான். 'ஓயாமல் தொழில் செய்து கொண்டிரு', 'பயனுக்கு அவசரப் படாதே', 'நாளெல்லாம் வினை செய்' என அறிவுறுத்தினான்.

பாரத மணித் திருநாட்டு மக்களிடையே ஒற்றுமையில்லை என்பதை உணர்ந்த பாரதி, 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே - நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே' என அறிவித்தான்.

கடவுள் நம்பிக்கையில் உறுதியாய் இருந்த பாரதி கண்ணன் பாட்டைப் பாடினான். கண்ணன் எனும் இறைவனோடு தான் இரண்டறக் கலந்த நிலையினை அவன் அதில் காட்டுகிறான். இறைவனைத் தமக்கு எல்லாமாகவும் அவன் பார்க்கிறான்.

'இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல் இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல் அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல் ஆலயம் பதினாயிரம் நாட்டல் பின்னருள்ள தருமங்கள் யாவும் பெயர் விளங்கி யொளிர நிறுத்தல் அன்ன யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என்று எல்லோர்க்கும் கல்வி கொடுக்க வலியுறுத்திய பாரதி 'எல்லா விதமான தானங்களைக் காட்டிலும் வித்யா தானமே மிகவும் உயர்ந்தது' என்றும் குறிப்பிடுகின்றான். கல்வி கற்று எட்டுத்திக்கும் சென்று கலைச் செல்வங்கள் யாவையும் கொணர்ந்திங்கு சேர்த்து நாட்டை வளப்படுத்தக் கட்டளையிடுகின்றான்.

**"காதலினால் மானுடர்க்குக் கலவி யுண்டாம்**
**கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்;**
**காதலினால் மானுடர்க்குக் கவிதை யுண்டாம்**
**கானமுண்டாம் சிற்பமுதற் கலைக ளுண்டாம்**
**ஆதலினால் காதல் செய்வீர்! உலகத் தீரே!**
**அஃதொன்றோ இவ்வுலகத் தலைமை இன்பம்**
**காதலினால் சாகாம லிருத்தல் கூடும்**
**கவலைபோம் அதனாலே மரணம் பொய்யாம்"**

எனக் காதலைப் பாடிய பாரதி கற்பை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொது என்கிறான். 'ஆணும் பெண்ணும் சமம்' எனப் பாடுகிறான்.

எல்லாக் கடவுளர்களையும் பாடிய கவிஞன் அந்நாளில் நாட்டிற்கு உழைத்த காந்தி உள்ளிட்ட தலைவர்களையும் பாடினான். 'இனியொரு விதி செய்வோம் - அதை எந்த நாளும் காப்போம். தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' எனும் குறிக்கோளுடன் வாழ்ந்த பாரதி, "எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம் எல்லோரும் இந்திய மக்கள் எல்லோரும் ஓர் நிறை எல்லோரும் ஓர்விலை எல்லோரும் இந்நாட்டு மன்னர்"என்று எல்லோரையும் சமமாகப் பார்க்கும் பார்வையைக் கொணர முயற்சித்தான். சாதிகளை மறுத்தான். 'குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்றான். 'சாதியினால் நீ பிரிந்திராதே. சாதி தீய மனிதர்கள் உண்டாக்கிய சதி. அதனை மிதி. அழி. சமம் என்று கூவு' என்றும் குறிப்பிட்டான்.

தமிழ், தமிழ்நாடு, இந்தியா, உலகம் எனும் பரந்துபட்ட பார்வையையும் கொள்கையையும் உடைய தீர்க்க தரிசனக் கவிஞனான பாரதி உலகு தழீஇய ஒட்பத்தினைப் போற்றும் பாவலனாகத் திகழ்ந்தான். தமிழைப் பாடிய பாரதி, தமிழ்நாட்டைப் பாடிய பாரதி, இந்தியாவைப் பாடிய பாரதி, உலகைப் பாடிய பாரதி தெய்வப்பற்றையும் தேசப்பற்றையும் ஒன்றாகப் பாவித்தான். தேச விடுதலையை மட்டுமன்றி சமூக விடுதலையையும் பெண் விடுதலையும் பாடினான். 'பெண் விடுதலை வேண்டும் அதைப் பெரிய கடவுள் காக்கவேண்டும்' என்று வேண்டினான். பாரதி பாடாத பொருள் இல்லை. பாரதியின் பாடல்களும் உரைநடையும் தனித்துவமானவை. கவித்துவமும் அழகும் மிகுந்தவை. மனித சமுதாயத்திற்கு அவை காலந்தோறும் தேவைப்படுபவை. அதனால்தான் பாரதியும் அவன் கவிதையும் நூற்றாண்டுகளுக்குப் பின்னும் இன்னும் தேவைப்படுகின்றன. அவனும் அவன் படைப்புகளும் இறவாத புகழுடையவை.

●


கட்டுரையாளர், தமிழியல் துறைத்தலைவர்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.




29.08.2023 அன்று ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் முதல்வர் முனைவர் வாசுதேவன், முனைவர் குமரகுரு, நூலகர் செந்தூர் வேல்முருகன், நூலகர் சுந்தர் மற்றும் ஈரோடு கிளை மேலாளர் முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




15.09.2023 அன்று தர்மபுரி தகடூர் புத்தகத் திருவிழாவில் கவிஞர் இரவீந்திர பாரதியின் ‘நீரோட்டம்’ நாவல் வெளியிடப்பட்டது. இதில் தகடூர் புத்தகப் பேரவைத் தலைவர் இரா.சிசுபாலன், த.க.இ.பெ. மாவட்டச் செயலாளர் சின்னக்கண்ணன், ஆதிமுதல்வன், சிங்காரவேல், என்சிபிஎச் கோவை மண்டல மேலாளர் ஆர்.ரங்கராஜன் மற்றும் கிளை மேலாளர் டி.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



கட்டுரை

# நவீனப் புதுக்கவிதைகளில் சங்க இலக்கிய அகமரபு ஒரு பார்வை

முனைவர் பெ. முருகன்

கவிதைக்கு என்று தமிழில் நீண்ட அறுபடாத தொடர்ச்சியுண்டு. இன்று வரை சமூக வலைதளங்களிலும் கூட கவிதைகள் பகிரப்பட்டு எல்லாத் தரப்பினரிடையேயும் செல்வாக்கு மிக்க வடிவமாகக் கவிதை திகழ்கிறது. புதுக்கவிதைகள் சமூகத்தின் வெகுசனத் தளத்தில் கோலோச்சிக் கொண்டிருக்கிற இன்றைய காலத்திலும் தொல்காப்பியத்தில் குறிப்பிடும் நடையியல் குறித்த செய்யுள் புதுக்கவிதைக்கும் பொருந்துமாறு உள்ளது.

ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின்
நுதலிய தறிதல் அதிகார முறையே
தொகுத்துக் கூறல் வகுத்துமெய்ந் நிறுத்தல்
மொழிந்த பொருளோடு ஒன்ற வைத்தல்
மொழியா ததனை முட்டின்றி முடித்தல்
வாரா ததனான் வந்தது முடித்தல்
வந்தது கொண்டு வாராதது முடித்தல்
(தொல்.பொருள். 656)

இச்சூத்திரத்தில் முப்பத்திரண்டு உத்திகள் தொல்காப்பியரால் மொழியப்பட்டுள்ளன. இவ்வுத்திகள் கலை இலக்கியங்களுக்கு முக்கியமாக கவிதை வடிவத்திற்குப் பொருந்திப் போவது குறிப்பிடத்தக்கது.

புதுக்கவிதையின் தோற்றம் என்பது வடிவங்களிலும் சொல்முறையிலும் உள்ளடக்கத்திலும் புதிய மாற்றங்களைக் கொண்டு வந்தது. "கருத்துக்களைச் சொல்லும் உத்தி முறையில் புதுக்கவிதை ஒரு சகாப்தத்தையே படைத்துவிட்டது" *(மா. கோவிந்தராசு, 2011, ப.127)* என்று ந. பிச்சமூர்த்தி சொல்வது புதுக்கவிதையின் வருகையால் கவிதைப்படைப்பில் ஏற்பட்ட மாற்றங்களைப் புரிந்துகொள்ளும் விதமாக உள்ளது.

நவீன வாழ்க்கை கொண்டுள்ள அனுபவங்களை எழுதப்புகுந்த கவிஞர்கள் விதவிதமான வெளிப்பாட்டு முறைகளில் கவிதைகளை எழுதலாயினர். "சில கவிதைகள் அர்த்தங்களை வெளிப்படுத்தும்; அர்த்தம் சப்தத்தைத் தவிர்க்கும்... சில கவிதைகள் கவிஞனின் அனுபவங்களை வெளிப்படுத்தும்... சில கவிதைகள் தேடலை வெளிப்படுத்தும். புதுக்கவிதை தன்னைத் தன்னுள் தேடுகிறது." *(மேலது, ப.128)* என்று தமிழ்நாடன் கூறுவது புதுக்கவிதைகளின் படைப்பியல் சார்ந்த விளக்கத்திற்கு நம்மை இட்டுச்செல்லும்.

புதுக்கவிதைகளில் சங்க இலக்கியத்தின் அகமரபின் தொடர்ச்சியையும் அதன் வெளிப்பாடுகளையும் காணமுடிகிறது. ஆனால், இது நேரடியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதுடன் அகமரபின் காதலின் அனுபவங்கள் நவீனத் தன்மைக்கு ஏற்பப் படைத்துக் காட்டப்பட்டுள்ளன என்பதையும் புதுக்கவிதைகளின் வாயிலாகக் இக்கட்டுரை நிறுவ முற்படுகிறது.

**பிரிதலும் பிரிதல் நிமித்தமும்**

சங்க இலக்கிய பாலைத் திணையின் உரிப்பொருள் பிரிதலும் பிரிதல் நிமித்தமும் என்பதாகும். இதனையே கவிக்கோ அப்துல் ரகுமான் 'சாவி இருக்கும் வரை' என்கிற கவிதையில்,

ஞாபக முட்கள்
காயங்களைச் சுட்டி
வட்டமிடும்
என் ஏகாந்தத்தின்
இதயத் துடிப்பாக,
பிரிந்து சென்ற உன்
காலடி ஓசை (அப்துல் ரகுமான், 2018, ப. 62)

என்கிறார். இக்கவிதை காதல் இணையரின் பிரிவுத் துன்பத்தின் அனுபவமாய் வெளிப்படுகிறது. பிரிவு ஏற்படுத்திவிட்டுப் போகும் வடுக்கள் நினைவுகளில்

தங்கிவிடும் அவலம் சங்க இலக்கியக் கவிதைக்கு சற்றும் குறைவுறாத மன வெளிப்பாடாய் கவிக்கோவின் கவிதையில் வெளிப்படுவது இங்குக் கவனிக்கத்தக்கது. இந்தப் பிரிவுத் துன்பத்தையே இன்னொரு கவிதையில் கவிக்கோ வெளிப்படுத்தியிருக்கிறார்.

பிரிவை ஞாபகப்படுத்திக் கொண்டு இருப்பது நினைவுகளே. நினைவுகள் தான் பிரிவுக்காலத்தில் நோயாகவும் மருந்தாகவும் காதலர்களுக்குள் செயல்படுகிறது. இதனை மிகவும் நுணுக்கமாக எழுதியிருக்கிற கவிக்கோ,

**ஒருவர் நினைவை**
**ஒருவர் கொளுத்திக்கொண்டு**
**இருவரும் எரிவோம்**
**மெதுவாக**
**நான் மெழுகுவர்த்தியாக**
**நீ ஊதுவத்தியாக** (மேலது, ப. 73)

என்ற கவிதை வரிகளைத் தொடர்ந்து தன் நினைவுகளை எரித்துப் பலியாக்கிக் கொள்ளும் இந்தச் செயலுக்கு முத்தாய்ப்பாய்,

**அணைந்ததும் என்னை**
**மறந்துவிடும் வேதனைக்கு**
**உன் ஞாபகம்**
**சுற்றிக் கொண்டிருக்கும்** (மேலது, ப. 73)

என்று முடிக்கிறார் கவிஞர்.

காதலின் காட்சியின்பமும் உன்மத்த நிலையும் காதலர்கள் பார்வையாலேயே பேசிக்கொள்ளும் செயலை வள்ளுவர்,

**கண்ணோடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்**
**என்ன பயனும் இல**

என்பார். அதேபோலத் தான் காதல் வாழ்வில் காட்சியின்பம் என்பது தொடக்க நிலையில் மட்டுமல்லாமல் காதலின் அனைத்து நிலையிலும் இருக்கும் என்பதை சங்க இலக்கியங்களும் தொல்காப்பியமும் குறிப்பிடுகின்றன. இதனையே கவிக்கோ,

**கரைவரை வந்துபின்**
**திரும்பும் அலைகள்போல்**
**என்வரை வந்துபின்**
**மீளும்உன் பார்வைகள்!**
**பாவம்!**
**மௌன மணலில்**
**தலைபுதைத்து மறைய எண்ணும்**
**தீக்கோழி**
**உன் இதயம்!** (மேலது, ப. 154)

மனித உணர்வுகளிலேயே காதலுக்கு என்று ஒரு நேர்மறையான குணநலன் மனிதர்களிடையே உண்டு. ஏனெனில், காதல் எல்லாக் காலத்திலும் பாடப்படுவதுண்டு. முக்கியமாக வீரயுகக் காலம் என்று வருணிக்கப்படும் சங்க காலத்திலும் காதலுக்கென்று தனித்த இடத்தை வழங்கினர். காதலின் இந்தக் குணம் குறித்து கவிஞர் சி.மணி தன் கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார்.

**காதல் காதல் என்ப; காதல்**
**வெறியும் நோயும் அன்றே; நினைப்பின்,**
**இறக்கம் நோக்கிப் பாயும் நீராம்;**
**சாதல் கவிந்த வாழ்வில்**
**வானம் தந்த வாம நிலவாம்.** (சி.மணி, 2004, ப.25)

மனித நாகரிகத்தின் பரிணாம வளர்ச்சியில் காதலின் நீங்கா இடம் குறித்த ஒரு செறிவான பார்வையை கவிஞர் சி. மணி முன்வைப்பது இங்கு நோக்கத்தக்கது.

அதேபோல் கவிஞர் கி.அ.சச்சிதானந்தம் ஒரு ஆணின் மனவெளிப்பாடுகளைத் தன் கவிதையில் வடித்துள்ளார். காதல் மிகும்போது ஒருவித உன்மத்த நிலையை அடைந்துவிடுவது ஆணுக்கும் பெண்ணுக்கும் இயல்பான ஒன்றாகும். இந்த உன்மத்த நிலையில் காதலரின் உருவத்தை மட்டுமல்ல அவர் இயங்குகின்ற அத்தனை இடங்களிலும் காதல் அவர் உருவத்தைக் கற்பனை செய்துகொள்ள வைக்கும். அவரை நினைத்து அஃறிணைப் பொருட்களிடம் புலம்ப வைக்கும். இதற்கு 'காமம் மிக்க கழிபடர் கிளவி' என்று அக இலக்கணம் சொல்லும். இதே பாணியை கவிஞர் கி.அ. சச்சிதானந்தம் தன் கவிதையில் பெண்ணை நினைத்து உருகும் ஆணாக வெளிப்படுத்தியுள்ளார்.

**உன்னை**
**நான் பின் தொடர்ந்து வந்தேன்.**
**உன்னைப்**
**பார்க்கும் போதெல்லாம்,**
**பின்பு நீ காணாமலே போய்விட்டாய்**
**ஒரு தடவை**
**அந்தக் கரடுமுரடான**
**சுவரின்மேல்**
**உன்நிழல் விழுந்ததைக் கண்டேன்**
**முத்தமிட முனைந்தேன் முடியவில்லை**
**குறுக்கே விழுந்தது என்நிழல்**
(கி.அ.சச்சிதானந்தம், 2004, பக். 58 – 59)

உன்மத்த நிலையில் காதலை நினைத்து உருகும் ஆணின் மனவெளிப்பாடுகளை இக்கவிதையில் எளிமையாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

கவிஞர் கவிஜி காதலியைத் தேடிக் கண்டடைந்து அடைந்த இன்பத்தைக் கவிதையாகத் தந்திருக்கிறார்.

**கதவுக்குப் பின்னா ஒளிந்திருக்கிறாய்**
**கள்ளி**
**நீ காதலுக்குப் பின்னால் ஒளிந்திருக்கிறாய்**
(கவிஜி, 2023,)

அதேபோல் கவிஞர் பிரேமில் பானு சந்திரன் ஒரு ஆண் காதலின் மிகுதியால் புலம்புவது என்பது காதலியின் ஒரு சொல்லுக்காக, ஒரு பார்வைக்காக, ஒரு தொடுதலுக்காகத் தான் என்பதை தன் 'பேச்சு' என்ற கவிதையில் வெளிப்படுத்துகிறார்.

**கருத்தழிவின் கழிவு**
**காதலன் பிதற்றல்.**
**அவள் சொல்லோ**
**வெறும் பார்வை**

வெறும் விரல்கள்
மணலில்
விட்ட வடுக்கள்.
(பிரேமில் பானு சந்திரன், 2004, ப. 69)

காதலில் கவலை தான் நிறைந்திருக்கும் என்கிற தோற்றம் எப்போதும் உள்ளது. கவலைக்கு முதன்மைக் காரணம் பிரிவு. பிரிவுத் துன்பம் காதலரைப் புலம்ப வைக்கும். 'பூக்களும் காயம் செய்யும்' என்கிற கவிதையில் கவிஞர் வைரமுத்து காதலியின் பிரிவு ஏக்கம் ஆழ்த்தும் துன்ப வெள்ளத்தில் கரைந்து போகும் ஆணின் பெருமூச்சுச் சத்தத்தை மொழியில் வடித்துள்ளார்.

என் மார்புக்கு வெளியே
ஆடும் என் இதயம்
என் பொத்தானில் சுற்றிய
உன் ஒற்றை முடியில்
உன் ஞாபக வெள்ளம்
தேங்கி நிற்குது
முட்டி அழுத்தி நீ
முகம்பதித்த பள்ளத்தில் (வைரமுத்து, 2012,)

என்று சொல்கிறவர் இறுதியில் பிரிந்துபோன இந்தக் காதலுறவின் மிச்சம் என்பது சொல்லக்கூடாத சில நினைவுகளும் சொல்லக்கூடிய ஒரு கவிதையும் என்று முடிக்கிறார் கவிஞர் வைரமுத்து. காதல் பொதுவாகவே மனித இருத்தலுக்கான அடிப்படை உணர்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்யவே உதவும். ஆனால், இந்த 'உதவுதல்' என்பது பெரும் மனவலியையும் வாழ்வின் நிச்சயமின்மையை அதிகப்படுத்தவே செய்யும் என்பதையும் நாம் மறுக்க இயலாதது. இதனால் தான் 'காதலித்துப் பார்' என்கிற கவிதையில் கவிஞர் வைரமுத்து,

அதற்காகவேனும்...
வாழ்ந்துகொண்டே
சாகவும் முடியுமே
செத்துக் கொண்டே
வாழவும் முடியுமே
அதற்காகவேனும்...
காதலித்துப் பார்! (மேலது)

என்கிறார்.

இந்தப் பிரிவொழுக்கத்தையே தொல்காப்பியர் ஐந்திணை ஒழுக்கத்தில் பாலைத் திணைக்கான உரிப்பொருளாகக் குறிப்பிட்டுள்ளார்.

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங்காலை திணைக்குரிப் பொருளே
(தொல். பொருள். 960)

இங்கு தொல்காப்பியர் ஐந்திணைகளில் ஒவ்வொரு திணைக்கும் ஒவ்வொரு உரிப்பொருளான ஒழுக்கத்தைச் சொல்லிச் செல்கிற நிலையில் இன்றைய நவீன காலத்தில் இந்தப் பிரிதல் பல நிலைகளில் ஏற்படுகிறது. காதலில் எப்போதும் பிரிவு என்பது முக்கியமானதொரு பாடுபொருளாகக் கவிஞர்களால் பாடப்படுவது சங்க இலக்கியம் தொட்டு இயல்பாகவே உள்ளது. அதனையே இக்கவிதைகளும் உணர்த்துகின்றன.

**அலர் தூற்றும் கவிதைகள்**

காதலர்கள் சங்ககாலச் சமூகத்தில் இன்று போல் அன்றும் ஒளிந்து ஒளிந்து தான் காதலிப்பார்கள். இது தெரிந்த ஊரார் அலர் தூற்றுவார்கள். காதலிப்பது என்பது அன்றும் இன்றும் எளிதில் எல்லோருக்கும் பேசக் கிடைக்கும் ஒரு பேசுபொருள். கவிஞர் மீரா 'கத்திரிக்காய் என்ன காதலா?' என்ற தன்னுடைய கவிதையில் வாணி மணாளன் என்கிற தொடர்கதையாசிரியர் இரவில் காதல் என்ன கத்திரிக்காயா? என்ற தொடர் எழுதிவிட்டு, காலையில் எழுந்து சந்தைக்குச் செல்வதைப் பற்றி எழுதுகிறார். அங்கு அவர் கத்திரிக்காய் விலையைக் கேட்டவர் அதிர்ந்து போகிறார். ஆனால், கத்திரிக்காய் கடைக்காரனோ பின்வருமாறு அந்தத் தொடர்கதையாசிரியரிடம் சொல்கிறான்:

அவ்வளவு மலிவாய்
அள்ளிக்கொண்டு செல்ல
கத்திரிக்காய் என்ன காதலா? (மீரா, 2012, )

காதலின் வெகுசன ஏற்பு இந்தியச் சமூகத்தில் இன்றும் ஒரு மலிவான எண்ணத்துடனேயே அணுகப்படுகிறது என்பது இந்தக் கவிதை மூலம் எளிமையாகக் காட்டப்படுகிறது.

சங்கக் கவிதையில் பெயர் தெரியாத புலவர் எழுதிய "யாயும் ஞாயும் யாரா கியரோ" என்கிற கவிதை இன்றைய சாதி, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளினூடே காதல் மலர்கின்ற போது எழுதப்படுமாயின் எப்படி இருக்கும் என்கிற பகடியே மீராவின் 'கணக்குப் பார்த்த காதல்'. காதலர்கள் பேசிக்கொள்கிறார்கள். அவனுக்கும் அவளுக்கும் ஒரே ஊரான வாசுதேவ நல்லூர் என்றும் மேலும் இருவரும் ஒரே மதம், ஒரே சாதி எல்லாவற்றுக்கும் மேலாக இருவரின் தந்தையும் சொந்தக்காரர்கள். அதனை தன் கவிதையில்,

உனக்கும் எனக்கும்
ஒரே ஊர் -
வாசுதேவ நல்லூர்...
நீயும் நானும்
ஒரே மதம்...
திருநெல்வேலிச்
சைவப் பிள்ளைமார்
வகுப்பும் கூட,..
உன்றன் தந்தையும்
என்றன் தந்தையும்
சொந்தக் காரர்கள்...
மைத்துனன் மார்கள்.
எனவே
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே
(மீரா, 2012, )

என்கிறார் கவிஞர் மீரா.

இதேபோல் பெயர் தெரியாத இருவர் அறிமுகமாகி நண்பர்களாகி தினமும் பேசிக்கொண்டு இறுதியில் திருமணம் செய்துகொள்வதை கவிஞர் வெ. இறையன்பு தன் கவிதையில் கூறியுள்ளார்.

நாங்கள் இருவரும்
காதலில் நம்பிக்கையில்லை
என்ற எங்கள்
ஒத்தக் கருத்தினால்
அறிமுகமாகி,
சந்தித்துப் பேசி
நண்பர்களானோம்.
அடுத்த ஆவணியில்
எங்கள்
திருமணம். (வெ. இறையன்பு, 2000, பக். 32-33)

இதனையே இறையனார் அகப்பொருள் "கற்பு என்பது களவின் வழித்தே" என்று திருமணம் என்பது காதலித்துத் திருமணம் செய்வதே என்று பண்டைய தமிழர் மரபைப் பறைசாற்றுகிறது. இதனையே புதுக் கவிதைகளும் காதலை மையப்படுத்துவதன் மூலம் நவீனத் தலைமுறைக்குக் கடத்த முயற்சிக்கின்றன.

**நவீனக் காதல் வடிவங்கள்**

காதலிக்கும் பெண்ணுக்கு மலர் கொடுப்பது என்பது சங்க இலக்கியத்திலிருந்து தொடர்ந்து வரும் பண்பாடு. மலர் கொடுத்து தன்னுடைய காதல் விருப்பத்தைத் தெரிவிப்பதையோ அல்லது காதலிக்கும் பெண்ணை மகிழ்ச்சிப்படுத்தவோ காதலன் விரும்புவது இயல்பானது. இதையே குறுந்தொகை 312ஆம் பாடலில்,

இரண்டறி கள்வி நங் காதலோளே
முரண்கொள் துப்பிற் செல்வேல் மலையன்
முள்ளூர்க் கானம் நாற வந்து
நள்ளென் கங்குல் நம்மோ ரன்னள்
கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்துச்
சாந்துளர் நறுங்கதுப் பெண்ணெய் நீவி
தமரோ ரன்னள் வைகறை யானே (குறு. 312)

என்ற பாடலில் தலைவிக்கு தலைவன் கொடுத்த பூவைச் சூடியவள் தலைவனுடன் கூடி விட்டு இறுதியில் அவள் தன் வீடு செல்லும் போது உதறிவிட்டுச் சென்றமையைப் பார்க்க முடிகிறது.

இது போன்ற ஒரு நிகழ்வையே கவிஞர் மீரா 'கனவுகள் + கற்பனைகள்=காகிதங்கள்' என்கிற கவிதைத் தொகுப்பில் காட்சிப்படுத்தியிருக்கிறார். இதை,

பூங்கொடியே உனக்குப்
பூ வாங்கி வருகிறேன்
முதன்முதலில் தானம் தர ஆசைப்பட்டவன்
கர்ணன் வீட்டுக் கதவைத்
தட்டியது மாதிரி! (மீரா, 2012,)

என்று குறிப்பிடுகிறார்.

சங்க இலக்கியத்தில் குறியிடம் என்பது களவு வாழ்க்கையில் முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. பகற்குறி, இரவுக்குறி என்று இரண்டு வகையாக இலக்கண ஆசிரியர்களால் குறிக்கப்படுகிறது. இந்தக் குறியில் காதலன், காதலி இருவரும் ஒருவருக்காக மற்றொருவர் காத்திருப்பது இயல்பானதாகும். ஆனால், இக்குறியை முடிவு செய்வது தலைவியே என்பதை தொல்காப்பியர் இலக்கணத்தில் சுட்டுகிறார்.

அவன்வரம்பு இறத்தல் அறம்தனக்கு இன்மையின்
களஞ்சுட்டுக் கிளவி கிழவியது ஆகும்
தான்செலற்கு உரிய வழிஆக லான
(தொல்.பொருள். 118)

இவ்வாறு காதலிக்காகக் காதலன் ஒருவன் காத்திருக்கிற செயலை புதுக்கவிதை ஒன்று விவரிக்கிறது. அப்போது எல்லாவிதமான பெண்களும் வந்து போகிறார்கள். ஆனால், அவன் எதிர்நோக்கும் பெண் மட்டும் வரவேயில்லை. இறுதியில்,

விளக்குக் கம்பம்
நடைக் கொம்பாய்
நிற்கும் தெருவில்
பிறபெண்கள்
வந்தார் போனார் அவள் வரலே.
(ஞானக்கூத்தன், 2014,)

என்று முடிக்கிறார் கவிஞர்.

சங்க இலக்கியத்தில் காதலுக்கென்று தனித்த இடம் வழங்கப்பட்டது போல் புதுக்கவிதைகளிலும் தனித்ததொரு இடம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், நவீன வாழ்க்கை ஏற்படுத்திய வாழ்வியல் நெருக்கடிகள் புதிய புதிய உள்ளடக்கங்களைக் கொண்ட கவிதைகளைத் தோற்றுவிக்கின்றன. கவிஞர்களும் காதலை அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பாடினாலும் இன்றும் காதலுக்கான மனித இன்றியமையாமை கொஞ்சம் கூடக் குறையவில்லை என்பதை உய்த்துணர்ந்து கொள்ள இயலும்.

**உசாத்துணை**


- அப்துல் ரகுமான். (2018). கவிக்கோ கவிதைகள். சென்னை: நேஷனல் பப்ளிஷர்ஸ்.
- இளையபாரதி (தொ.ஆ.). (2000). சுபமங்களா இதழ்த் தொகுப்பு. சென்னை: கலைஞன் பதிப்பகம்.
- கோவிந்தராசு, மா. (2011). புதுக்கவிதைக் கட்டமைப்பு. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்..,.
- சச்சிதானந்தம், கி.அ. (தொ.ஆ). (2004). நடை இதழ்த் தொகுப்பு. சென்னை: சந்தியா பதிப்பகம்.
- சிவலிங்கனார், ஆ (ப.ஆ). (2017). தொல்காப்பியம் உரைவளம் - பொருளதிகாரம் களவியல். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
- பாலசுப்பிரமணியன், கு.வெ. (உ.ஆ). (2019). தொல்காப்பியம் மூலமும் உரையும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்..,.
- www.eluthu.com <http://www.eluthu.com>
- www.keetru.com <http://www.keetru.com>



●


கட்டுரையாளர், தமிழ்த்துறைத் தலைவர்,
ஹாஜி கருத்த ராவுத்தர் ஹவுதியா கல்லூரி,
உத்தமபாளையம், தேனி மாவட்டம்.



NCBH
நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்
இருண்ட காலங்களில் பாடுவதும் இருக்குமா?
(கட்டுரைகள்)
எஸ்.வி. ராஜதுரை
₹ 540/-
தமிழ் மக்கள் வரலாறு
தமிழ்நாட்டின் வியப்பான தொழில்நுட்பமும் வேறுபட்ட உள்ளூர்க் கலைஞர்களும்: ஐரோப்பியர்களின் பார்வையில்
(கி.பி.1514-1845)
எஸ்.ஜெயசீல ஸ்டீபன்
₹ 370/-
தமிழ் மக்கள் வரலாறு
தமிழ் நிலப்பரப்பில் நிகழ்ந்த தட்பவெப்ப நிலை மாற்றங்கள், இயற்கைப் பேரிடர்கள், மக்கள் பட்ட இன்னல்கள்
எஸ்.ஜெயசீல ஸ்டீபன்
₹ 240/-
பழந்தமிழ்ச் சமுதாயமும் வரலாறும்
புத்தகம் - 1
₹ 2650/-
இரண்டு புத்தகங்களும் சேர்த்து
உயராயுதமே
மது ஒழிப்புப் போராளி
சசிபெருமாள்
யா.அருள்தாஸ்
₹ 330/-
பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி
(வாழ்வும் பணியும்)
எம்.ஆர்.ரகுநாதன்
₹ 200/-
மரண வீட்டின் நினைவுக் குறிப்புகள்
ஃபியோதர் தஸ்தயெவ்ஸ்கி
₹ 825/-
FREDERICK ENGELS
DIALECTICS OF NATURE
E = MC²
ப.கு.ராஜன்
புரட்சியில் பகுத்தறிவு
மார்க்சிய தத்துவமும் நவீன அறிவியலும்
₹ 1200/-
பெரியாரை எப்படிப் புரிந்துகொள்வது?
மு.இராமசுவாமி
₹ 180/-
NCBH
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in

Article




# ON THE STYLE OF THE COMMUNIST MANIFESTO

**Umberto Eco**

*Translation*

**Martin Mclaughlin**

It is difficult to imagine that a few fine pages can single-handedly change the world. After all, Dante's entire oeuvre was not enough to restore a Holy Roman Empire to the Italian city-states. But, in commemorating The Communist Manifesto of 1848, a text that certainly has exercised a major influence on the history of two centuries, I believe one must reread it from the point of view of its literary quality, or at least—even if one does not read it in the original German—of its extraordinary rhetorical skill and the structure of its arguments.

In 1971 a short book by a Venezuelan author was published: Ludovico Silva's Marx's Literary Style. (An Italian translation was published in 1973.) I think it is no longer available, but it would be worthwhile reprinting it. In this book Silva retraces the development of Marx's literary education (few know that he had also written poetry, albeit awful poetry, according to those who have read it), and goes on to analyze in detail Marx's entire oeuvre. Curiously, he devotes only a few lines to the Manifesto, perhaps




because it was not a strictly personal work. This is a pity, for it is an astonishing text that skillfully alternates apocalyptic and ironic tones, powerful slogans and clear explanations, and (if capitalist society really does want to seek revenge for the upheavals these few pages have caused it) even today it should be read like a sacred text in advertising agencies.

It starts with a powerful drumroll, like Beethoven's Fifth: "A specter is haunting Europe" (and let us not forget that we are still close to the pre-Romantic and Romantic flowering of the gothic novel, and specters are to be taken seriously). This is followed immediately by a bird's-eye history of class struggle from ancient Rome to the birth and development of the bourgeoisie, and the pages dedicated to the conquests achieved by this new, "revolutionary" class constitute a foundation epic that is still valid today, for supporters of free-market enterprise. One sees (I really do mean “one sees," in an almost cinematographic way) this unstop- pable force, which, urged on by the need for new markets for its goods, pervades the whole world on land and sea (and, as far as I am concerned, here the Jewish, Messianic Marx is thinking of the opening of Genesis), overturns and transforms distant countries because the low prices of products are its heavy artillery, which allows it to batter down any Chinese wall and force sur- render on even the barbarians who are most hardened in their hatred for the foreigner; it sets up and develops cities as a symbol and as the foundation of its own power; and it becomes multinational, globalized, and even invents a literature that is no longer national but international.*

*Obviously, when I wrote this article, the term "globalization" already existed, and I did not use the expression by chance. But today, now that all of us have become sensitive to this problem, it really is worth going back and rereading these pages. It is astonishing how the Manifesto witnessed the birth, 150 years ahead of its time, of the era of globalization, and the alternative forces it would unleash. It almost suggests that globalization is not an accident that happens during the course of capitalist expansion (just because the Wall has come down and the Internet has arrived) but rather the inevitable pattern that the emergent class could not fail to follow, even though at the time, through the expansion of markets, the most convenient (though also the most bloody) means to this end was called colonization. It is also worth dwelling again (and this is advisable not just for the bourgeoisie but for all classes) on the warning that every force opposing the march of globalization is initially divided and confused, tends toward mere Luddism, and can be used by its enemy to fight its own battles.

At the end of this eulogy (which is convincing and borders on sincere admiration), suddenly we find a dramatic reversal: the wizard discovers that he is unable to control the subterranean powers he has conjured up, the victor is suffocated by his own overproduction and is forced to bring forth from his loins the digger of his own grave—the proletariat.

This new force now enters the scene: at first divided and confused, it is forged in the destruction of machinery and then used by the bourgeoisie as shock troops forced to fight its enemy's enemies (the absolute monarchies, the landed property holders, the petite bourgeoisie), until gradually it absorbs the artisans, shop-keepers, and peasant landowners who once were its adversaries but have now been turned into proletarians by the bourgeoisie. The upheaval becomes struggle as workers organize thanks to an- other power that the bourgeoisie developed for its own profit: communications. And here the Manifesto cites the example of the railways, but the authors are also thinking of new mass media (and let's not forget that in The Holy Family Marx and Engels were able to use the television of that age—namely, the serial novel—as a model of the collective imagination,






and they criticized its ideology by using the very language and situations the serials had made popular).

At this point the Communists come onstage. Before saying in a programmatic way what they are and what they want, the Manifesto (in a superb rhetorical move) puts itself in the position of the bourgeois who fears them, and advances some terrified questions: Do you want to abolish property? Do you want common access to women? Do you want to destroy religion, the nation, the family?

Here things become more subtle, because the Manifesto seems to reply to all these questions in a reassuring way, as though to mollify its adversaries-then, in a sudden move, it hits them in the solar plexus, winning the cheers of the proletarian public . . . Do we want to abolish property? Of course not. But property relations have always been subject to change: did not the French Revolution abolish feudal property in favor of bourgeois property? Do we want to abolish private property? What a crazy idea; there is no chance of that, because it is the property of a tenth of the population, which works against the other nine-tenths. Are you reproaching us for wanting to abolish "your" property? Well, yes, that is exactly what we want to do.

Common access to women? Come on, we prefer to relieve women from their role as instruments of production. Do you see us having common access to women? Possessing women in common was invented by you, since apart from using your own wives you take advantage of workers' wives, and as your ultimate sport you practice the art of seducing your peers' wives. Destroy the nation? But how can you take from the workers something they have never possessed? On the contrary, we want to turn ourselves into a nation and triumph...

And so on up to the masterpiece of reticence that is the reply to the question of religion. We can intuit that the reply is "We want to destroy this religion," but the text does not say so: just when it broaches such a delicate topic, it glides over it and lets us infer that all transformations come at a price, but for goodness' sake, let's not take up such delicate issues immediately.

There then follows the most doctrinal part, the movement's program, the critique of different kinds of socialism, but by this stage the reader is already seduced by the preceding pages. And just in case the programmatic part is too difficult, here we find a final sting in the tail, two breathtaking slogans, easy, memorable and destined (it seems to me) to have an extraordinary future: "Workers have nothing to lose but their chains," and "Workers of the world, unite!"

Even apart from its genuinely poetic capacity to invent memorable metaphors, the Manifesto remains a masterpiece of political (but not only political) oratory, and it ought to be studied at school along with Cicero's Invectives against Catiline and Mark Antony's speech over Julius Caesar's body in Shakespeare, especially as it is not impossible, given Marx's familiarity with classical culture, that he had in mind these very texts when writing it.


●

*Article published in L'Espresso, 8 January 1998, for the 150th anniversary of The Communist Manifesto.*

*From The Book of On Literature*

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் விரைவில் வெளிவர உள்ள நூல்கள்










Published by **Shanmugam Saravanan** on behalf of **New Century Reader's Sangam**
at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and Printed by **A.Sivakumar** at **Pavai Printers (P) Ltd.,**
16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor: **T.Stalin Gunasekaran**

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly) Registered with RNI No :TNBIL/2009/28728. Postal Regn No.TN/CH(C)/601/2022-2024. WPP No: TN/PMG(CCR)WPP-673/2022-2024
Date of publication 1-7th of every month Posted at Egmore RMS / 1 Patrika Channel
If undelivered, please return to: New Centurian Ungal Noolagam,
16 (142), Jani Jhan khan road, Royapettah, Chennai - 14.


மிகமிக விரைவில்...

# நியூ செஞ்சுரி வெளியீடாக...
# தமிழில் மார்க்சிய அரசியல் நூல்கள்

முதன்மைப் பதிப்பாசிரியர்:
**ந.முத்துமோகன்**

இணைப் பதிப்பாசிரியர்:
**ப.கு.ராஜன்**

